ABBEY TRAINING.NET
Off Licence / Restaurant
வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal
Licence & Premises Licence
எடுத்து தருவோம்
வகுப்புகள்
NCPLH
Certificate
Course
Life in the UK
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing,
Family Disputes & Others
Call: S.Thavanessan (NESS)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

FREE

PAPER - 07 ♦ ISSUE - 131 ♦ 03 FRIDAY SEPTEMBER 2010

RAJA & CO SOLICITORS
We provide following Legal Services:
Conveyancing:
Buying and Selling
Houses, Flats & Business
➤ Criminal Cases
➤ Civil Litigation
➤ Family
➤ Immigration
TOOTING
10 Upper Tooting Road, Tooting Bec, London SW17 7PG
Tel: 020 8772 4900
COLLIERS WOOD
2A Robinson Road, Colliers Wood. SW17 9DJ
Tel: 020 8543 4974
We hold 'Legal Aid Franchise' in Immigration, Crime & Family



உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM



## பேந்தென்ன...
## தலைக்கு கலர் அடிச்சதுகள் எல்லாம் பிச்சை வேண்ட வேணும்

பங்கு சந்தையில் ஈடுபட்டு பணக்காரர் ஆக விரும்புகின்றீர்களா? முதலீடு செய்யும் முறை தெரியாமல் இருக்கின்றீர்களா?
தொடர்புகளுக்கு
குமார்
020 8546 3694

TOP MARKS FOR MATHS – A* TUTOR
GCSE, A/S & A/2 Students
All examinaton boards Covered by highly experienced mathematician.
Also coach for 11+ and Grammar school exams.
For further details call
KAMALANATHAN BSC (HONS)
Tel : 020 8883 3126
Mobile: 079 7083 9507
North, North-East & North- West London areas

Ersan & Co
SOLICITORS
Ersans has a wealth of experience in providing specialist help and advice for Personal Injury claims. We offer a free assessment of your claim and a "No Win No Fee" package to ensure that no deductions are made from any compensation to which you may be entitled.
"We will make sure that you will receive 100% of your compensation and our service will not cost you a penny"
தனியாருக்கு ஏற்படும் காயங்களுக்கு நட்டஈடு பெறுவதற்கு உதவிசெய்வதில், 'எர்சன்ஸ்' (Ersans) சிறந்த அநுபவம் உடையவர்கள். உங்களுடைய விண்ணப்பத்தை இலவசமாகப் பரிசீலனை செய்து, 'வெற்றியில்லையேல் கட்டணம் இல்லை' என்ற அடிப்படையில் எவ்விதக் கழிவும் இன்றி உங்களுக்குரிய நட்டஈட்டுத் தொகை கிடைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்துள்ளோம்.
உங்களுடைய நட்டஈட்டுத்தொகை 100 சதவீதம் உங்களுக்குக் கிடைக்கவும், எமது சேவைக்காக உங்களுக்கு எவ்வித செலவும் இல்லாதிருக்கவும் உறுதிசெய்வோம்.
ERSAN & CO SOLICITORS



7 Willoughby Road, Turnpike Lane, London N8 0HR
Tel: 0208 342 7070
Fax: 0208 342 7071 Mobile: 07816 646345
E-mail: info@ersans.co.uk

SAME DAY UK VISA SERVICES
Indefinite Leave to Remain(ILR)
One Day Visa Service From: £299
OISC Registered Immigration Advisor
K. KANDEL
Contact Us for more information
TEL: 0208 572 6386
MOB: 07772 641 180
www.ukvisaexpert.com
NO WIN NO FEE
KAMAL KANDEL OISC N:F200700150
www.ukvisaexpert.com
4 Hazel House, Pownall Road, TW3 1YN

சுவை அருவி
"வாடிக்கையாளர்களின் ஆதரவுடன் 15வது வருடத்தில் காலடி எடுத்து வைக்கின்றனர்"
புதுப்பொலிவுடன் திறக்கப்பட்டுள்ளது
விசேட விலைக்கழிவு !
100 இடியப்பம் + சொதி + சம்பல் + உருளைக்கிழங்கு கறி £8.00 பவுண்ஸ் மட்டுமே.
முன்கூட்டியே Order செய்யவும்.
98 High Street Colliers Wood London SW19 2BT
07956 801 594 | 020 8543 6266 | 020 8286 6677

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்




# STUDY IN UK!
## From Sri Lanka & India

**Obtain a British Degree! Your best investment in life.**

KMS கடந்த 11 வருடங்களுக்கு மேலாக ஐக்கிய இராச்சியத்தில் கல்வி பயில விரும்பும் இளம் மாணவர் களுக்கு சிறந்த சேவையை ஆற்றி வந்திருக்கிறது.

கடந்த 6 ஆண்டுகளாக 600க்கு மேற்பட்ட மாணவர்கள் பிரித்தானியாவில் உயர்கல்வி பெறுவதற்கு உதவி செய்திருக்கிறது. எமது மாணவர் களில் பெரும்பாலோர் தமது முதல் நிலை பாடத் திட்டங்களைப் பூர்த்தி செய்து தமது தொழில்களில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

KMS திரு. P.K Suhanthan அவர்களால் தொடங்கப்பட்டது. இவர் தனது முது நிலைப் பட்டத்தை Masters Degree கிழக்கு இலண்டன் பல்கலைக் கழகத்தில் பெற்றுள்ளார். இவர் ஸ்ரீலங்காவிலும், ஐக்கிய இராச்சியத்திலும் கல்வித்துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்தவராவர்.

கல்விக் கட்டணங்கள் வருடாந்தம் £4000 இலிருந்து.

உங்களுடைய கல்வியைப் பூர்த்தி செய்தபின் நீங்கள் 2 வருடம் முழு நேரதொழில் செய்வதற்குரிய விசா பெறமுடியும்.

We welcome students from both Sri Lanka and India

**Knowledge Management Systems (Pvt) Ltd**

We are the official representative for 11 UK universities...

- University of Salford
- Anglia Ruskin University
- Middlesex University
- University of Keele
- University of Bedfordshire
- Southampton University
- University of TEESSIDE
- University of Swansea
- Demonford University
- University of Central Lancashire

**Your Gate way to British Degree**

**London Office**
Knowledge Management Systems (Pvt) Ltd,
30-32, Southend, Croydon,
CR0 1DN, United Kingdom.
Tel :- 020 7112 5999
Fax :- 020 8688 5776
Mob :- 0044 7905 038 050

**India Office**
No 1, First Floor,
First Main Road,
Karpagam Gardens, Adyar,
Chennai 600 020,
South India.
Tel: 044 24900541
Fax: 044 42177335

**Colombo Office**
329, Galle Road,
Meewella Building First Floor,
Southern Wing, Colombo-04,
Sri Lanka.
Tel : +94 11 2555243 /5/6
Fax : +94112555244

Please E.Mail your certificates to pksuhanthan@yahoo.co.uk




**Price starts from £1100**

176 Merton High Street
South Wimbledon SW19 1AY
020 8540 0359
077 456 456 45
www.postechnology.co.uk

FREE 3 YEARS WARRNTY & BARCODE PRINTER

# R.S. Finance

## Commercial Mortgages & Business Loans

Contact: **Sri**
220 - HIGH STREET NORTH, EAST HAM,
LONDON, E6 2JA.
Tel: **020 8475 0755**
Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**



**Re-Mortgages**
(Raising Funds to Start Own Business and Other Needs)
**Secured Loans**

**Commercial Loans**
**Shops (Pharmacies)**
**Petrol Stations**
**Restaurants & Hotels**
**Care Homes Etc.**

Loans will be arranged for lease hold and free hold businessess

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fullfil your business loan requirements.

**Whatever your needs, Regarding your Commercial Loans**




*Arumbukal Marriage Brokers*

Tel : 02086821057 | 020 3318 8848
Mob: 07889 930 130 Fax : 02086821057
E.Mail : info.arumbukal@gmail.com

**ஒரு குறிப்பிட்ட அல்லது நீண்டகாலமான தோல்வியாதிகளால் அவதியுறுகின்றீர்களா?**

பின்வரும் தோல் வியாதிகளிற்கு மூலிகை வைத்தியத்தின் மூலம் எம்மிடம் உங்களுக்கான சிகிச்சை உண்டு.

உங்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் இங்கே தீர்வு உண்டு.
we may have herbal solutions for your Skin Problem

Eczema, Vitiligo, Psoriasis, Allergy, Itching, Blemishes, Acne, Pimples, Boils, Urticaria, Discolouration, Melasma etc.



10 Park Avenue, Southall, Middx UB1 3AQ
Tel : 02088430330 Mobile : 07815419103
herbalaid@hotmail.co.uk

herbalAid



## விளக்கமாக எழுதுங்கள்!

கடந்த ஒரு பேப்பரில் 'பாத்திரமறிந்து பிச்சை போடுங்கள்' என்ற கடிதத்தை எழுதியவர், தான் குறிப்பிட வந்த நிறுவனம் எது எனக் குறிப்பிடாது புதிர் போட்டிருக்கிறார். ஒன்றில் விடயத்தை விபரமாய் எழுத வேண்டும் அல்லது எழுதப்படாது. சும்மா எங்களைக் குழப்பக் கூடாது.

*- விமல்*

## தொடங்கீட்டா ராஜேசக்கா!

போர் முடிந்து விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் ஓய்வாய் இருந்து ராஜேஸ் பாலா, அவரது சகாக்களான நோயல் நடேசன், லெ.முருகபூபதி ஆகியோரையும் சேர்த்துக் கொண்டு சர்வதேச எழுத்தாளர் மாநாட்டை அடுத்த வருடம் நடாத்த இருக்கிறார்கள். செம்மறி மாநாட்டு புகழ் சவத்தம்பிதான மாநாட்டுக்கு தலைமை தாங்க இருக்கிறாராம். இனி இங்கையிருந்தும் பல எழுத்தாளர்கள் கிளம்புவினம். எதுக்கும் புளொக்குகளை தொடங்கி புலிகளை கன்னா பின்னா எண்டு திட்டுங்கோ, விமான ரீக்கற் வீடு தேடிவரும்.

*- பரமேஸ்வரன்*

## யாழ்ப்பாணத்து புதினங்கள்..

கானா பிரபா வின் யாழ்ப்பாணம் பற்றிய கோள் மூட்டல்களிலிருந்து பல தகவல்களைப் பெறக் கூடியதாக இருக்கிறது. அவரை தொடர்ந்து எழுதுமாறு வேண்டுகிறேன். படங்களையும் பிரசுரித்தால் நன்றாக இருக்கும்.

*- நிக்கலஸ்*

## துணிச்சலான பேராசிரியர்

யாழ்ப்பாணத்திற்கு சென்ற நிருபமாவின் நெத்திக்கு நேரே, இந்தியா ஈழத் தமிழருக்குச் செய்த அநியாயங்களைப் பற்றி பேசியிருக்கிறார், வரலாற்றுப் பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள். இராணுவ நெருக்குவாரம், கூலிப்படைகள், காட்டிக் கொடுக்கிறதுகள் என்று ஒரு அராஜகக் கூட்டம் ஆட்சி நடாத்திற யாழ்ப்பாணத்தில் அவர் இவ்வாறு தனது ஆதங்கத்தை வெளியிட்டது ஒரு துணிச்சலான செயல். அதற்காக அவரை நாம் பாராட்ட வேண்டும்.

*- குணாளன்*

## கே.பியின் செலவுக் கணக்கு

வன்னியில் பள்ளிக்கூடங்களுக்கு புத்தகம் வாங்கிக் கொடுத்தோம், வினாத்தாள் அடித்துக் கொடுத்தோம், மாணவர்களுக்கு பணிஸ் வாங்கிக் கொடுத்தோம் என்று ஒரு செலவுக் கணக்கினை வெளியிட்டிருக்கிறார் உலகிலேயே இன்ரர்நெற், பேஸ்புக், மொபைல் போன் வசதிகளுடன் இருக்கும் சிறப்புக் கைதி கே.பி. எங்கையிருந்து காசு வந்தது என்ற விபரமில்லை. அது சரி அரசாங்கம் அடிக்கிற புத்தகத்தை பிள்ளையளுக்கு இவர்தான் வாங்கிக் கொடுக்கிறார் என்றால் அரசாங்கம் என்ன செய்கிறது?

*- சச்சிதானந்தம்*

## போர்க்குற்றம் பற்றிய கண்காட்சி

சிறிலங்காவின் போர்க் குற்றங்கள் பற்றிய நிழற் படங்களின் கண்காட்சி ஒன்று அண்மையில் மிச்சம் மைதானத்தில் நடைபெற்ற ரூற்றிங் அம்மன் கோவில் தேர்விழாவில் வைக்கப் பட்டது. இது மிகவும் நல்ல முயற்சி பாராட்டுகிறேன். வன்னியில் என்ன நடந்தது எனத் தெரியாத பல்லாயிரக் கணக்கான லண்டன் தமிழர்கள் இப்போது விசயத்தை விளங்கிக் கொண்டுள்ளார்கள். தவறியும் எங்கடை ஆக்கள் வராத இடத்திலை இப்படியான கண்காட்சியை வைச்சிடாதேங்கோ, பிறகு அவங்களுக்கும் விசயம் விளங்கிப் போடும்.

*- உமாபதி*

## ஒரு நேர கஞ்சி

தாய்நாட்டில் என்ன நடந்தாலும் நாம் தப்பி விட்டோம் என்று பல பேர் இங்கு வாழ்கிறார்கள். இவர்களை தட்டி எழுப்ப நாம் என்ன செய்கிறோம்? அங்கே உன்ன நடந்தாலும் இங்கே வாழ்க்கை வழமைபோல் தான் இருக்கிறது. இசைக் கச்சேரிகள் விளையாட்டுப் போட்டிகள் தேர்த் திருவிழாக்கள் இவற்றினால் பெறப் படும் பணம் அங்கே ஒரு நேர கஞ்சிக்காக பரிதவிக்கும் மக்களின் பசியைப் போக்க பயன்படுகிறதா? இதை மாற்றுவதற்கு நாம் என்ன செய்யலாம்? தயவு செய்து உங்களது கருத்துக்களை இப் பத்திரிகை வாயிலாக வெளிக் கொண்டு வரலாமே?

*- சிறீபதி*

## படம் சரியில்லை

உங்களது முதல் பக்கப் படங்களின் தரம் தாழ்ந்துகொள்டு வருவது ஏன்? நல்ல படங்கள் கிடைக்கவில்லையா? யூன் மாதத்தில் வெளிவந்த படங்கள் நன்றாக இருந்தன. அதன் பின் இளம் பெண்களைத்தான் பார்க்கிறோம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையோ?

*- அருமைநாதன்*

## இப்ப என்ன செய்வீங்க?

கூத்தமைப்பு இந்தியாவிள்ட வாலை பிடிச்சுக் கொண்டு திரியுது. மனோ கணேசன் சொல்லுறார் இந்தியா தான் தமிழருக்கு தீர்வு தரும் எண்டு. புலம் பெயர் ஆய்வாளர்கள் எல்லாம் இந்தியாவை விட்டா வேற வழி இல்ல எண்டினம்.

நிருபமா ரா சொல்லுறா தங்களால இலங்கை அரசை ஒண்டும் செய்ய முடியாதாம். மூண்டில் ரெண்டு பெரும்பான்மை உள்ள அரசை தங்களால அசைக்கேலாதாம். இப்ப என்ன செய்யுறது?

*- தாஸ்*

## அட்வைஸ்

நாடு கடந்த அரசு சிங்கள அரசின் சில அணுகுமுறைகளைப் பின்பற்ற வேண்டும். அதாவது இந்தியாவுடனும் மேற்குலகுடனும் சீனாவுடனும் பேச வேண்டும். இந்தியாவுக்கும் மேற்குலகுக்கும் மறைமுகமாகச் சொல்ல வேண்டும். நீங்கள் எம்மை ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாம் சீனாவுடன் பேச வேண்டி வரும் என்று சொல்ல வேண்டும். பாகிஸ்தானுடனும் உறவைப் புதுப்பிக்க வேண்டும். பாகிஸ்தானும் சீனாவும் புதிய உறவுக்காக பழைய உறவை வெட்டத் தயங்காது. ஏனெனில் இந்தியாவுக்கு மிக அண்மையாக இருப்பது தமிழர் தேசமே! ஆகவே சிறிலங்கா ஆடிய ஆட்டத்தை நாங்கள் ஆடுவோம். இந்தியா வேண்டா வெறுப்பாக வேனும் எம்மை அனுசரிக்க வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் இந்தியாவையோ மேற்குலக நாடுகளையோ கெஞ்சிக் கேட்டால் எதுவும் கிடைக்காது.இராஜதந்திர மிரட்டலே சாத்தியமாகும். இப்படியான ஒரு அதிர்ச்சி வைத்தியத்தையே இந்தியாவுக்கும் சிறிலங்காவிற்கும் கொடுக்க வேண்டும்.

*- புலவர் (யாழில்)*

## எங்களுக்கும் சொல்லுங்கோ

வட்டுக்கோட்டை தீர்மானம் நாடு கடந்த அரசு எண்டு என்னன்லாமோ துவங்கிச்சினம் இப்ப எல்லாம் அடங்கிப் போச்சு. இப்ப என்ன நடக்குது எண்டு யாருக்காவது தெரிஞ்சா எங்களுக்கும் சொல்லுங்கோ.

*- சற்குணம்*

ஒரு பேப்பர் தொடர்பான உங்களுடைய கருத்துக்களைத் தற்பொழுது தொலைபேசி வாயிலாகவும் பதிவு செய்து கொள்ள முடியும்.

பூராயம் பகுதிக்கான கடிதங்களைத் தொலைபேசியில் பதிவு செய்வதற்கான இலக்கம் 020 7043 4314.

*ஆ—ர்*

# இந்தியா இதய சுத்தியுடன் செயற்படவில்லை



தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் இந்தியா இதய சுத்தியுடன் நடந்து கொள்ளத் தவறிவிட்டது என்று இந்திய வெளி விவகாரச் செயலர் நிருபமா ராவிடம் யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியரான சி.க.சிற்றம் பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் வந்த இந்திய வெளி விவகாரச் செயலர் நிருபமா ராவ் யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் அரசியல் கட்சிகள், அரச திணைக்களங்கள், பல்கலைக் கழகம், மத நிறுவனங்கள் என்பவற்றைச் சேர்ந்த பிரமுகர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே பேராசிரியர் சிற்றம்பலம் இவ்வாறு தெரிவித்தார். 'இந்திய - சிறிலங்கா உடன்பாடு ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படாததால் அது தோல்வியடைந்தது. இந்த நடவடிக்கை தமிழ் மக்களுக்கு மன வருத்தத்தை ஏற்படுத்தியது. 1987ல் செய்து கொள்ளப்பட்ட ராஜீவ் - ஜே.ஆர் உடன்பாட்டை உரியமுறையில் நடைமுறைப்படுத்துமாறு சிறிலங்கா அரசுக்கு இதுவரை இந்தியா போதிய அழுத்தம் கொடுக்கவில்லை. ஏராளமான அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த இறுதிப் போருக்கு ஆதரவாக ஆயுதங்களை வழங்கி - கிளிநொச்சி, மாங்குளம் போன்ற இடங்களில் பெருமளவானோர் உயிரிழக்க இந்தியா காரணமாக இருந்தது என்று தமிழ் மக்கள் இன்னமும் கருதுகிறார்கள்.

இறுதிப் போர் முடிவடைந்து பல மாதங்களாகிவிட்ட நிலையில் இன்னமும் இனப் பிரச்சினைக்கான அரசியல்தீர்வு எட்டப்படவில்லை. இது குறித்து இந்திய அரசும் எந்தவிதமான அழுத்தமும் கொடுக்கவில்லை.

தமிழர் பிரதேசமான வடக்கு, கிழக்கில் போர் முடிந்த பின்னரும் படையினர் அதிகளவில் நிறுத்தப்பட்டு, தமிழ்மக்களின் பிரதிநிதித்துவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்படும் குடியேற்றங்களைத் தடுக்க இந்தியா முன்வரவில்லை.

போர் முடிவுக்கு வந்துள்ள நிலையில் இனியாவது இந்தியா எமது அரசியல் பிரச்சினையைத் தீர்க்க உதவும் என்று தமிழ்மக்கள் நம்பினர். ஆனால் அதனைச் செய்ய இந்தியா தவறிவிட்டது. தமிழர் பிரச்சினை 60 வருடங்களுக்கு மேலாக நீடித்து அவர்களைச் சீரழித்து வருகிறது. ஆனால் இந்தியா கண்களை மூடிக் கொண்டிருக்கிறது. இதுவே எங்கள் மக்களின் கருத்தாகும். போரின் பின்னர் எமது மக்களின் வாழ்க்கை சீரழிந்துள்ளது. அவர்கள் இருக்க வீடுகள் இல்லை. வெட்டவெளியில் வசிக்கிறார்கள். மொத்தத்தில் பிச்சைக்காரர்கள் ஆகிவிட்டார்கள். இந்த நிலையை நீக்க இந்திய அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் இந்தியா உணர்வு பூர்வமாகப் பற்றுறுதியுடன் செயற்பட்டு உரிய தீர்வு ஒன்றை விரைந்து ஏற்படுத்த வேண்டும் என்பதே தமிழ்மக்களின் கோரிக்கையும் நிலைப்பாடும் ஆகும்.' என்று பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

## பேராசிரியர் சிற்றம்பலம் ஐயாவுக்கு நன்றிகள்.


தமது ஈனத்தனம், இரட்டை வேடம் யாழ் தமிழருக்கு தெரியாது என்ற இந்தியப் பயங்கரவாதிகளின் நினைப்பை பேராசிரியர் தகர்த்தெறிந்துள்ளார்.

அவரது துணிச்சலைப் பார்த்து அங்கு கூடியிருந்த கோழைகள் வியந்தார்களாம். மிகக் கேவலமாக உள்ளது. இந்திய தமிழினப் படுகொலையாளர்கள் அழியும் போதுதான் ஈழத்தமிழரின் வாழ்வு சிறப்பதற்கான வழிகள் பிறக்கும்.

அதுவரை ஒருசில இந்திய தமிழினப் படுகொலையாளர்களின் கைகூலிகள் அவர்கள் புராணம் பாடிக்கொண்டுதான் இருப்பார்கள். அவர்களைவிட்டால் கதியில்லை என்று உளறுவார்கள். இந்தக் கைகூலிகள் அவிழ்த்துவிடும் பொய்களை ஈழத் தமிழர் நம்பப் போவதில்லை.

ஜனாயக வேடம் போட்டு, இனப்படுகொலைகளை நிகழ்த்தி 200,000 இற்கு மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்படக் காரணமாக இருந்த வட இந்திய, சிங்கள பயங்கரவாதிகள் அழிந்து, உலகில் மனிதத்துவம், சாந்தி, சமாதானம், அகிம்சை, நீதி நிலைக்க நேர்மையான மனிதர்களின் தொடர்ச்சியான முயற்சி அவசியம்.

*- ஆராவமுதன் (யாழில்)*

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, SEPTEMBER 03, 2010, ISSUE 131

## ஒப்பரேசன் ஐம்பதாயிரம் வீடுகள்!

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமா யாழ்பாணத்திற்கும், வன்னிப் பிரதேசங்களுக்கும் பயணம் மேற்கொண்டு, இந்திய சார்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இராஜபக்சவிற்கு ஆதரவான கட்சிகளின் கூட்டான தமிழர் அரங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளையும், பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானையும் சந்தித்துள்ளார். அவரது வருகையின்போது, இந்திய அரசு, வன்னியில் ஐம்பதாயிரம் வீடுகளை கட்டிக் கொடுக்க இருப்பதாகவும் அறிவித்துள்ளார். நிருபமாவின் பயணத்தினைத் தொடர்ந்து, இந்திய வெளியுறவு அமைச்சர் சோமன்கள்ளி மல்லையா கிருஸ்ணாவும் வடக்கிற்கு செல்ல இருப்பதாகத் தெரிகிறது.

இந்தியா வடக்கு-கிழக்குப் பகுதிகளில் காட்டும் அக்கறை அதன் அரசியல் பொருளாதார நலன் சார்ந்தது. எனினும் 1987ல் சில உணவுப் பொட்டலங்களை ஆகாயத்திலிருந்து வீசியதற்காக கிளர்ந்தெழுந்த சிங்களம் இந்தியாவின் வெளிப்படையான தலையீட்டினைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லை. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் இந்தியா வழங்கிய உதவி சிங்கள மக்களைக் குளிர்வித்திருக்கலாம். அண்டை நாடுகளில் மனிதவுரிமைகள், மக்களின் அரசியல் உரிமைகள் போன்ற விவகாரங்களில் இந்தியா சிரத்தை எடுக்காத நாடு என்ற வகையில், இந்தியாவின் தலையீடு தற்போது சிறிலங்காவினால் பொறுத்துக் கொள்ளப்படுகிறது.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை இந்திய எதிர்ப்பு முற்றாகத் தணிந்துள்ள நிலையில், புலம் பெயர் தமிழ் மக்கள் நோக்கியும் தனது கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறது. அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஊடாக உலகத் தமிழர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளை இந்திய தரப்பு சந்திக்க முனைந்ததாகத் தெரியவருகிறது.

நிருபமாவுடனான சந்திப்பில், பேராசிரியர் க. சிற்றம்பலம் குறிப்பிட்டதுபோல், சிறிலங்காவின் இனவழிப்பு நடவடிக்கைக்கு இந்தியா துணை புரிந்தமையை அது மறுதலிக்க முடியாது. இருப்பினும் அண்டை நாடு ஒன்றுடன் முரண்பாடுகளைக் களைந்து கொள்ளவே ஈழத் தமிழர்கள் விரும்புகிறார்கள். சிங்கள இராணுவத்தின் கிடுக்குப் பிடிக்குள் இருக்கும் தமிழ் மக்களுக்கு இந்தியாவின் பிரசன்னம் சிறிது பாதுகாப்பைக் கொடுக்கும் என்ற அவரது எதிர்பார்ப்புகளையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்தியாவுடனான உறவுகள் மிகுந்த அவதானத்துடனேயே பேணப்பட வேண்டும், இல்லையேல் அதுவே எமது விடுதலைப் போராட்டத்திற்கு நிரந்தர சாவு மணி அடிக்கும் செயற்பாடாக மாறிவிடும் பேரபாயம் உள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*போன கிழமை என்ன நடந்ததோ தெரியாது, கன ஆட்கள் போனடித்து. **ஒரு பேப்பர்** ரில் வந்த கட்டுரைகள் சம்பந்தமாய் தங்கடை திருப்தியீனத்தை சொன்னார்கள். இதிலை ஒண்டு மே மாதத்தில் வந்த கட்டுரை. அதைப் பற்றி நாங்களே மறந்து போனம் அவர் மறக்கேல்லை.*

*உங்களுடைய ஆதங்கங்களை எங்களுக்கு விளங்கிக் கொள்ளக் கூடியதாய் இருக்குது. ஆனால் இதுகள் தொடர்பான உங்களுடைய கருத்துகளை எழுதி அனுப்புங்கோ நாங்கள் பிரசுரிக்கிறம், மற்றாக்களுக்கும் விளங்கும் எண்டு சொன்னோம். ஆனால் அதற்கு அவர்கள் உடன்படுகிறார்கள் இல்லை.*

*நாங்கள் நெடுகச் சொல்லிற மாதிரி, **ஒரு பேப்பர்** ரில் பிரசுரிக்கப்படுகிற எல்லா விசயத்திலும் எங்களுக்கு உடன்பாடு இருக்கு என்று நீங்கள் நினைக்கப்படாது. எழுதிறவையின்ரை சொந்தக் கருத்துகளாகவும் அவை இருக்கும். அதிலை எங்கட ஆசிரியர் குழு முழுசாய் உடன்பட வேணும் எண்டில்லை.*

*'நீங்கள் சும்மா அதை இதை எழுதிக் கொண்டிருங்கோ, நாட்டிலை சனம் சரியாய் கஸரப்படுகுது. அதைக் கவனிப்பாரில்லை' எண்டு சிலர் குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள். எங்களுக்கு இது விளங்கினாலும், நாங்கள் அங்கை போய் உருப்படியாய் எதுவும் செய்யக் கூடிய நிலையில் நாடு இல்லை. ஆகவே அங்குள்ள மக்களுக்கு உதவக் கூடிய திட்டங்கள் உங்களிடமிருந்தால், அதுகளைப் பற்றி விளக்கமாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். உதவக் கூடியவர்கள் முன்வந்து உதவுவார்கள்.*

*ஆனால் ஒண்டு, நாங்கள் நிதி சேகரிப்பில் அல்லது பொருள் சேகரிப்பில் இறங்காமல் நீங்களே பயனாளிகளைத் தொடர்பு கொள்ளிறதுக்கு வழி வகைகள் செய்து தருகிறோம். இப்பிடியான இரண்டு திட்டங்களை இந்தப் பேப்பரில் பிரசுரித்திருக்கிறம். முடியுமானால் உதவுங்கோ.*

*வெயில் காலம், பாடசாலை விடுமுறை எல்லாம் முடிஞ்சிட்டுது. ஆகவே உங்கட பிள்ளைகளை கிற்ஸ் பேப்பரில் எழுதுமாறு ஊக்கப்படுத்துங்கள். இந்த விடயத்தில் தமிழ் பள்ளிக்கூடங்களும், வாத்திமாரும் கவனம் செலுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறம். தமிழில் அல்லது ஆங்கிலத்தில் எழுதலாம், அவர்கள் கீறிய சித்திரங்கள், எடுத்த படங்கள் ஆகியவற்றையும் அனுப்பினால் நாம் பிரசுரிப்பம்.*

*அலசுவாரம் பத்தியை எழுதும் மட்டைக்களப்பான் விடுமுறையில் வெளிநாடொன்றுக்கு போய்விட்டதால் இம்முறையும் அவரது பத்தி வரவில்லை. திரும்பவும் ஒக்ரோபர் மாதத்திலிருந்து அவரது பத்தி தொடரும்.*

*வேறை என்ன...*

*அடுத்த பேப்பரிலை சந்திப்பம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

# The Elders have provided leadership.... Now we need to respond



Following their unusually robust and public criticism not only of the Government of Sri Lanka but also the international community for the way it has dealt with the gross human rights violations and humanitarian suffering in Sri Lanka, The Elders have re-asserted this message in the below email communication sent out to their public supporters.

The reference to the 'many' positive messages is indeed encouraging as it demonstrates that key influencers within the international community agree with the stance that The Elders have taken in placing responsibility on the international community, particularly China, India, Japan and the United States and those non-aligned group of countries to firmly and publicly address the alarming conduct of the GoSL.

The Elders' voice was a very welcome to the few but bold voices calling for true justice and reconciliation in Sri Lanka and such is their credibility that even the Government of Sri Lanka, well known for its aggressive and bullying response to even the mildest form of criticism, largely stayed silent.

Ordinary people like us must now support the Elders. Together we can get all the institutions that have any influence over events in Sri Lanka to be more accountable for what they are doing - and sadly in many case, not doing. By themselves, the Elders can't make a miracle happen - it is up to all of us to respond to their leadership.

> However, peace is fragile; if Sri Lanka is to achieve lasting stability, the government needs to show a much greater commitment to achieving meaningful reconciliation

To this end, we encourage you to engage with people who you can influence, to seek their feedback on The Elders' stance and what they agree or disagree with and most importantly, to find out what they are willing to do to help push forward this agenda. One thing that all institutions could do is agree to provide, in confidence, any information they may have to the UN panel of experts and in make their support for this panel known in public.

Specifically, if you are a financial supporter of the NGO that happens to be working in Sri Lanka, then write to the Director of that NGO along these lines. And everyone can write to their elected representative. And if you know Sri Lankans and non Sri Lankans who are saying "things aren't so bad", you can use the Elders statement with them to. As always, a personal letter written in your own style is what will have most impact.

Please send us information about what responses you get. This will be very useful in making sure we get the action we need from these opinion-shapers, organisations and institutions.

## Statement from Martti Ahtisaari

"We have recently voiced our concerns about Sri Lanka's approach to human rights and the government's clampdown on domestic critics, which we believe deserves a far tougher response from the international community.

We share the relief of the Sri Lankan people that the country's 30-year civil war has ended and we acknowledge that there have been some positive signs of progress since the end of the conflict in 2009.

However, peace is fragile; if Sri Lanka is to achieve lasting stability, the government needs to show a much greater commitment to achieving meaningful reconciliation.

We have received many messages thanking us for our statement - and some criticism. It is clear from your comments that a great deal of fear and suspicion remains in Sri Lanka, despite the end of the war. This can only be overcome through greater freedom of information and reporting, greater accountability by both parties to the conflict and by more contact between Sri Lanka's communities to help build trust and understanding.

I should add that we never expect our views to be met with universal approval - and we hope that you will continue to share your thoughts with us and The Elders' team."

*Courtesy: Sri Lanka Campaign for Peace and Justice.*

## About The Elders

The Elders are an independent group of global leaders, brought together by Nelson Mandela in 2007, who offer their collective influence and experience to support peace-building, help address major causes of human suffering and promote the shared interests of humanity.

The Elders are Martti Ahtisaari, Kofi Annan, Ela Bhatt, Lakhdar Brahimi, Gro Brundtland, Fernando Henrique Cardoso, Jimmy Carter, Graça Machel, Mary Robinson and Desmond Tutu (Chair). Nelson Mandela and Aung San Suu Kyi are honorary Elders.

# மீண்டும் ஏமாற்றும் இந்தியா. மீண்டும் ஏமாறும் தமிழர்கள்

இலங்கையில் 'தகடு கொடுத்தல்' என்ற ஒரு சொற் தொடர் உண்டு. முன்பு மலையாளச் 'சோதிடர்கள்' இலங்கைக்கு வந்து தாம் அருள் மிக்கவர் என்று சொல்லி பரிகாரத்திற்கு இயந்திரத் தகடுகளைக் கொடுத்து மக்களை ஏமாற்றிப் பெரும் பணம் பெற்றுக் கொள்வர். இதனால் தகடு கொடுத்தல் என்பது ஏமாற்றுதல் என்று பொருள்படும்.

இலங்கையில் உள்ள போரினால் பாதிக்கப் பட்ட மக்களை மீள் குடியேற்றத்திற்கு அவர் களுக்கு நான்கு தகடுகளைக் கொடுத்து இதைக் கொண்டு போய் உங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். அவர் தாம் வாழ்ந்த வளமான பூமிக்கு செல்ல அனுமதிக் கப்படவில்லை. வளமுள்ள பிரதேசங்களில் சிங்கள வர்களை இலங்கையும் இந்தியாவும் இணைந்து குடியேற்றம் செய்து வருகிறது.

இப்போது இலங்கையில் இருக்கும் இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் மீள் குடியேற் றத்தில் இலங்கையும் இந்தியாவும் இணைந்து செயற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த் மீள் குடியேற்றம் தமிழர் பகுதிகளைத் துண்டாடி அவர்களை மீளா அடிமைகளாக்கும் விதத்தில் சிங்களவர்களையும் சிங்களப் படை யினரையும் தமிழர் பிரதேசங்களில் குடியமர்த்து கிறார்கள். தமிழர் கையில் சில தகடுகளைக் கொடுத்து இவற்றைக் கொண்டு உங்கள் வீடு களை அமைத்துக் கொள்ளுங்கள் என்பதுதான் மீள் குடியேற்றம்.

தமிழர்களுக்கு இலங்கையில் இப்போது ஒரு பிரச்சனையுமில்லை. அவர்களுக்கு உள்ள ஒரே ஒரு பிரச்சனை சில ஆயிரம் தமிழர்கள் தடுப்பு முகாம்களில் இருக்கின்றனர். (அவற்றைத் தடுப்பு முகாம் என்கிறதே மஹா தப்பு. கன்னத்தில் போட்டுக் கொள்ள வேண்டும். அவை நலன் புரி நிலையங்கள்!!!!!) அவர்களை மீள் குடியேற்றம் செய்வதுதான். இப்படி ஒரு எண்ணம் தமிழ்நாட்டில் பரப்பத் தொடங்கிவிட்டார்கள். சென்ற வாரம் ஆனந்த விகடனில் இப்படி ஒரு கேள்வி பதில்

விகடனின் கேள்வி: சட்டப் பேரவைத் தேர்தலில் ஈழத் தமிழர் பிரச்னை தாக்கத்தை ஏற்படுத்தும் என்றிருக்கிறாரே பழ.நெடுமாறன்?'

ஈ.வி.கே.எஸ். இளங்கோவனின் பதில்: நிச்சய மாக எந்தவொரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது. காரணம், மத்திய அரசு ஈழத்தில் இருக்கும் தமிழர் களுக்காக எல்லா விதமான நன்மைகளையும் செய்து வருகிறது. இப்போது கூட 50,000 வீடுகள் கட்டித் தர ஏற்பாடு செய்திருக்கிறது. அகதி முகாம் களைப் பார்வையிட புதிய குழு ஒன்றை அமைத் திருக்கிறது. இதையெல்லாம் நம் மக்கள் அறிந்திருக்கிறார்கள்!'

ஆனால் இலட்சக்கணக்கான வீடுகளை அழிக்க ஆயுதம் கொடுத்தது யார்? பயிற்சி கொடுத்தது யார்? படை கொடுத்தது யார்?

தாம் பிறந்து வளர்ந்த முற்றத்தை பார்க்கும் உரிமையைக் கூட பறிக்கப்பட்ட மக்களுக்கு தகடு கொடுத்து வீடு கட்டிக் கொடுப்பதால் என்ன பயன்? தமிழினத்தைக் கெடுத்து அழித்தவர்கள் வீடு கட்டப் போகிறார்களாம்!!! அதற்கு 20,000 இந்தியர்களைக் இலங்கைக்கு கொண்டுவரப் போகிறார்களாம்!!!

### தமிழனின் வாழும் உரிமையைப் பறித்தது யார்?

வன்னியில் ஒரு வாலி வதைப் படலத்தை நிறை வேற்றியது யார்? தமிழனை பின்னால் இருந்து முதுகில் குத்திய துரோகிகள் யார்? ராஜீவ் காந்தி(கான்) ஒரு கொலை வெறிப்படையை அனுப்பி இலங்கைப் பிரச்சனைக்குத் தீர்வு இலங்கை அரசியல் அமைப்பின் 13வது திருத்தம் என்று முழங்கியது.

அது இதுவரை நிறைவேற்றப் படவில்லை. அது பற்றி இப்போது யாரும் கதைப்பதில்லை. இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அதிக சிங்கள மக்களைக் குடியேற்றி அங்கு தமிழர்களைச் சிறுபான்மையினராக்கிய பின் இந்த திருத்தம் நிறைவேற்றப் படுமா? இது பற்றி ஆராயத்தான் இலங்கை இந்தியா இப்போது கைகோத்து நிற்கிறதா?

இலங்கையில் இந்திய வெளியுறவுச் - செயலர் நிருபாமா ராவ் ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்ட வர்களை மட்டும் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது அவரிடம் யாழ்ப்பணத்திலும் வன்னி யிலும் வைத்து இந்தியா தமிழர்களுக்கு இழைக் கும் துரோகம் பற்றி மக்கள் எடுத்துக் கூறியுள்ளனர். இவர்களை இனி யார் காப்பாற்றுவார்களோ தெரியாது

### பாவம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்னும் தமிழ் கட்சியில் இருந்த தமிழின தீவிர உணர்வாளர்கள் இந்திய அரசின் வேண்டுதலுக்கு இணங்க அக்கட்சியிலிருந்து ஓரம் கட்டப் பட்டனர். தமிழத் தேசியக் கூட்டமைப்பு இப்போது தமிழர்களின் பிரச்சனை பற்றிக் கதைக்கக் கூடாது என்று இந்தியா உத்தரவிட்டுள்ளதாம். இந்தியாவின் பின்னால் சென்ற சகல தமிழ் அரசியல்வாதிகளும் இறுதியில் துரோகிகளாகவே மாறினார்கள்.

### பாவம் சிதம்பரம் ஐயா

சிவகங்கைத் தொகுதியில் ஏதோ எல்லாம் செய்து தேர்தலில் வெற்றி பெற்ற சிதம்பரம் ஐயா அண்மையில் வீராப்புடன் பேசினார் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கான இந்திய உதவி அவர்களுக்கு நேரடியாகவே கையளிக்கப்படும்.

அவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடி யாகவே இந்தியாவால் வைப்பிலிடப்படும் என்று முழங்கினார். மறுநாள் இலங்கையின் ஒரு சாதாரண அமைச்சர் அப்படிச் செய்ய அனுமதிக்க முடியாதென்றார். இப்போது போரினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கான இந்திய 'உதவி' இலங்கை அரசினூடாகவே வழங்கப்படும் என்பது உறுதியாகிவிட்டது.

இந்தியாவின் இப்போதைய கவலை சீனா தனது அபிவிருத்தித் திட்டம் என்ற போர்வையில் பல சீனர் களை இலங்கையில் இறக்கி விட்டது. இவர்களில் செம்படையைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இந்தியாவும் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும். இதற்கு தமிழன் மேல் சவாரி செய்வதுதான் இந்தியாவின் நோக்கம். இலங்கையில் வீடு கட்டிக் கொடுப்பது என்ற போர்வையில் முதலில் 20,000 இந்தியர்கள் இலங்கையில் வந்து இறங்கப் போகிறார்கள். இவர்களின் நோக்கங்களில் ஒன்று இலங்கையில் இனி தமிழ்த் தேசிய போராட்டம் தலை தூக்காமல் பார்த்து கொள்வதாகவே இருக்கும். இந்தியா மீண்டும் தமிழர்களை ஏமாற்றுகிறது. தமிழர்களும் ஏமாறுகிறார்கள்.

*- வேல் தர்மா*

முன்வைத்த காலை

பின் நகர்த்தோம்

என்ன நிகழினும்

எதிர் கொள்வோம்

OPINION

# No Point in Hushing it Up Any More!

## By Periasamy Kanthavel

Tamils, who live in the island, Sri Lanka, are a people who are united by one common bond – OPPRESSION – whether they live in the North or East or Up-country or Colombo. What they think is survival, and that is what matters. The Tamil diaspora , or the scattered Tamils in real sense are free and speak out what is in their mind. This luxury or the splendour is deprived to those living back home. This truth itself simply explains why the Tamils need an independent nation.

Now let us see what the Tamil diaspora is up to. There is no point in hushing it up any more.

Out of my confusion , I found solace in 'The Pen and the Gun, Selected Writings by, Saturday Review famous Mr. S. Sivanayagam.

**Quote;**

*One of America's great sons, Martin Luther king, who himself could not survive in his mortal frame beyond his 39th year, having been felled by an assassin's bullet, said and did many things in his brief life that will surely enable the human spirit to survive everywhere in the world. Talking of his own people, the American Negroes, Martin Luther King said: " Like all people, they (the Blacks) have differing personalities, diverse financial interests, and varied aspirations. There are Negroes who will never fight for freedom. There are Negroes who will seek profit themselves alone from the struggle. There are even some Negroes who will co-operate with the oppressors. The facts should not distress no one. Every minority and every people has its share of opportunists, profiteers, free-loaders, and escapists...... No one can pretend that because a people may be oppressed, every individual member is virtuous and worthy. The real issue is whether in the great mass the dominant characteristics are decency, honour, and courage".*

*"Substitute the word Tamil for Negro, and we have an authentic picture of the Tamils in Sri Lanka today. But what is distressing is that the accredited leaders of the Tamils do not seem any more to reflect the dominant characteristics that Martin Luther King spoke of".*

This was written by the Great journalist on November 13, 1982, twenty eight years ago. He knew it then, we know it now!

As an important and timely exercise let us recall the statement made by Lord Malloch-Brown, the Minister of State then, on 21 Jan 2009.

"My right honourable friend the Secretary of State for Foreign and Commonwealth Affairs (David Miliband) has made the following Written Ministerial Statement. The Government have long-standing concern with the promotion of peace in Sri Lanka, where the conflict has claimed at least 70 000 lives during the past 26 years. We are now at an important moment.

Since its abrogation in January 2008 of the 2002 ceasefire agreement, the Sri Lankan government have embarked on a policy of militarily defeating the Liberation Tigers of Tamil Eelam (LTTE). In recent months, the Government have made significant military gains, including the capture of Kilinochchi, the former administrative centre of the LTTE in the north, and the remaining rebel territory in the Jaffna Peninsula. These gains make progress on a political solution even more urgent.

The LTTE is a proscribed terrorist organisation with no democratic mandate to represent the Tamil people. It is responsible for a terrorist campaign that has targeted innocent civilians across all communities in Sri Lanka over the past three decades......"

Can't the Tamils ask Mr. Miliband, where the political solution is? Eelam Tamils know well, that the abrogation of the ceasefire agreement is the work of the UK Government. Ref. The judgement of ' Permanent Peoples' tribunal' , Dublin in Jan 2010. Why is the UK government silent?

When the war was at the peak and while India was killing Tamils, with its infantry and air bombing, UK government is alleged to have provided arms including 'thermobaric' bombs to finish off the Tamils, holding hands with India.

John Pilger, wrote on 14 May 2009, in his column in New Statesman: "The great moral citadels in London and Washington offer merely silent approval of the violence and tragedy. No appeals are heard in the United Nations from them. David Miliband has called for a "ceasefire", as he tends to in places where where British "interests" are served, such as the 14 impoverished countries racked by armed conflict where the British government licenses arm shipments. In 2005, British arms exports to Sri Lanka rose by 60 per cent. The distant voices from there should be heard, urgently."

ஒரு பேப்பர்

ORU PAPER

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
பிரித்தானியா
அ. இரவி - மணி - அகிலன்
மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன்

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சாரதா

விளம்பரம்
சோபனா

அச்சு
தர்சினி (கனடா) பானு

வடிவமைப்பு
மயூரன் - விஜி

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
பானு

வழங்கல்
உதயகுமார்-சிவா-பிரகாஸ்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 813 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com



'Oru Paper' is a bi-lingual paper published from London by Orupaper Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.


# சகல குழப்பங்களில் இருந்தும்...

ஓர் ஊடகவியலாளர் என்பவர் நடுநிலையாளர் என்பதை ஒரு போதும் சேயோன் ஏற்றுக் கொள்ள மாட்டான். ஓர் ஊடகவியலாளன் தான் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ற்கு சப்பாத்து எறிந்ததும், இந்திய உள்துறை அமைச்சர் பா. சிதம்பரத்திற்கு செருப்பை வீசியதும். இவை குறிப்பது எதனை? ஜோர்ஜ் புஷ் கூறியதை, பா. சிதம்பரம் பகிர்ந்ததை அப்படியே பத்திரிகையிலோ தொலைக்காட்சியிலோ பதிந்து விட்டுப் போக வேண்டியதுதானே? சப்பாத்தை எறிவானேன்? செருப்பை வீசுவானேன்?

ஏனென்றால் ஊடகவியலாளர்கள் சமூகத்தின் குரல். நீதியின் குரல். உண்மையின் குரல். மேலாக மனச்சாட்சியின் குரல். மனச்சாட்சியை ஒரு புறத்தே வைத்துவிட்டு, பதவியையும், பணத்தையும் கையில் எடுத்துக் கொண்டு உண்மையான ஊடகவியலாளராய் இயங்க முடியாது. ஆனால் அப்படி இயங்குவோர் பலர். அதனால்தான் என்னை ஊடகவியலாளன் என்று யாரேனும் பட்டம் கட்டினால் கூச்சத்தில் ஒரு கயிற்றைப் போலே நெளிகிறேன்.

இவ்வளவு பீடிகையும் எதற்கு? எதற்கு என்றால் இப்போது எம்மை அலைக்கழிப்பன அனைத்தும் ஊடகங்களே. ஈழத்தமிழரின் அரசியல் அழிவுற்ற பின்னர் ஊடகங்கள் மாத்திரமே அனைத்து கருத்துக்களையும் பரிமாற்றம் செய்கின்றன. பிறர் கருத்தை அறிவதும் எம் கருத்தை தெரிவிப்பதும் ஊடகங்கள் மூலம் மாத்திரமே. எம் கருத்தை உருவாக்குவதும், சிந்திக்கவைப்பதும், குழப்புவதும் ஊடகங்கள் மூலம் மாத்திரமே நிகழ்கின்றன. தவிர்க்கவியலாத வகையில் ஊடகங்கள் ஈழத்தமிழரை அலைக்கழிக்கின்றன. முன்னர் எமக்கு இராணுவ வெற்றிகள் இருந்தன. அரசியல் பாதையில் சக பயணியாக போகக்கூடியதாக இருந்தது. இது தான் வழி என்று கை காட்ட ஒருவர் இருந்தார். கேள்விகள் கேட்காமல் பயணித்தது தவறு என்றாலும், அப்பயணத்தில் நம்பிக்கை முனை இருந்தது. குழப்ப வழிகள் ஏதும் இருக்கவில்லை.

ஆனால், இப்பொழுதோ மகா குழப்பம். ஊடகங்கள் மேலும் மேலும் குழப்புகின்றன. ஊடகங்களை பார்த்துவிட்டோ, படித்துவிட்டோ, கேட்டுவிட்டோ தொலைபேசியிலோ நேரிலோ குழம்புவர்கள் ஏராளம். ஒரு நண்பரிடம் நேரடியாகச் சொன்னேன் 'உன்னிடம் ஏதும் அரசியல் இருந்தால் நேரடியாகக் கதை, மற்றும்படி என்னைக் குழப்ப உனக்கு எந்த அருகதையும் இல்லை'.

நண்பர்கள் சிலர் பணியிடத்திலோ அல்லது பாரிலோ(Bar) சந்திக்கின்ற போது இக்குழப்பங்கள் பற்றி தீவிரமாக விவாதிப்பார்கள். எனக்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது என்று இவர்கள் கதையை காதில் எடுக்க மாட்டேன். ஒரு கருத்தும் கூறமாட்டேன். இப்போது குழப்பத்தின் உச்சத்தில் நிற்கிறோம் நாம்.

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

'நூறு பூக்கள் மலரட்டும்' என்றார் தோழர் மாசேதுங் அவர் சிந்தனைகள் கருத்துக்களையே அவ்வாறு சொன்னார். சிந்தனையில் தெளிதல், கருத்துக்களை பற்றுதல், என யாவும் கேள்வி கேட்பதினூடாகவும், தேடல் தொடங்குவதினூடாகவுமே நிகழும். 'கேட்கப்படாத கேள்விகள் மட்டுமே முட்டாள் தனமானவை' என்று ஓரிடத்தில் வாசித்த ஞாபகம். எல்லா கேள்விகளையும் கேட்க வேண்டும். பதில் வருகிறதோ இல்லையோ, கேட்க வேண்டும்.

ஆனால், நாம் கேட்கிறோம் இல்லை. கேள்விகள் எதனையும் உருவாக்குகின்றோம் இல்லை. மந்தைக் கூட்டங்களாக தலையைக் குனிந்தபடி, புல்லை மேய்ந்தபடி சிறு முணுமுணுப்பும் காட்டாது நகர்கிறோம். இவ்வளவு காலமும் அவ்வாறு இருந்தோம். சரி அதற்கு ஓர் அர்த்தம் இருந்தது. இனியும் அப்படி இருக்கப் போகிறோமா? ஜேசுநாதர் என்ன சொன்னார் 'கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கிடைக்கும்'.

GTV என்ற தொலைக்காட்சியில் நிரேஷ் அவர்கள் நிகழ்த்துகின்ற வெளிச்சம் நிகழ்ச்சி சில பேர்களுக்கு வழிவகுக்கின்றது. அதே தொலைக்காட்சியில் பிரேம் வழங்குகின்ற செய்தி வீச்சு சில ஆய்வுகளைத் தாங்கி நிற்கின்றது. ஆனால் இந்நிகழ்வில் பங்குபற்றுகின்ற நேயர்களில் பலர் தாம் நம்பியவற்றை மாத்திரம் கொட்டுகின்ற குப்பைக் கிடங்காக அதைப் பயன் படுத்தி விடுகின்றனர். தேடலையோ, ஆராய்வையோ முன்னெடுப்பவர்களாக அவர்களைக் காணமுடியவில்லை. நான் நம்புகின்றேன், அவ்வாறு தேடலையோ ஆராய்வையோ முன்னெடுப்பவர்கள் தமக்குள் தாமே புளுங்கிக் கிடக்கின்றார்கள்.

நாம் இன்னொன்றையும் செய்கின்றோம் ஒற்றைத் தராசில் யாவற்றையும் நிறுத்துவிட்டுபோகிறோம். ஒற்றைச் சொல்லில் அனைத்தையும் நிராகரித்து விட்டு போகிறோம். நானும் அவ்வாறு இருந்தவன் என்கின்ற ஆதங்கத்தில்தான் இதனை எழுதுகிறேன். ஒற்றைத் தராசு ஒருபோதும் நிறுவையைக் காட்டாது. ஒற்றைச்சொல் ஒருபோதும் உண்மையை உரைக்காது. உண்மையை உணராது.

இப்பொழுது பாருங்கள், கே.பியை துரோகி என்ற ஒற்றைச்சொல்லால் நிராகரித்து விட்டு போகிறோம். என்னால் அப்படி நிராகரிக்க முடியவில்லை, அவரைக் கவனிக்கிறேன். அவரது பேட்டிகள் யாவையும் வாசிக்கிறேன், அவரைப் புரிந்து கொள்ள முயல்கிறேன். எதிரிகளால் கடத்தப்பட்டு, சிங்களச் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் ஒருவர் வேறெப்படி நடந்துகொள்ள முடியும்? நான் ஒன்று சொல்கிறேன், அவரது பேட்டிகளை வாசிப்போம். அவரது செய்கைகளை கவனிப்போம். அவரது நடத்தைகளை அவதானிப்போம். திறந்த மனத்துடன், பகுத்தறிவின் துணையுடன் அனைத்தையும் அவதானிப்போம். யாவற்றையும் நம்பிக்கையில் இருந்து தொடங்க வேண்டாம். விசாரணையிலிருந்து தொடங்குவோம்.

நெடியவன் என்ற பெயரை கே.பி தன் பேட்டிகளில் தெரிவிக்கின்றார். நெடியவனோ, நெடியவன் குழுவோ அல்லது அக்குழு சார்ந்த அமைப்போ ஒன்றும் பறைகிறார்கள் இல்லையே. சரி கே.பி தான் வெறும் தூசி, பச்சைத் துரோகி அவரைப் பற்றி கதைக்க ஒன்றும் இல்லை என்றால், உங்கள் அரசியல் பற்றியாவது சொல்லுங்களேன். நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள் என்றாவது சொல்லுங்களேன்? எங்கள் குழப்பத்தை அது கொஞ்சமாவது தீர்த்து வைக்காதா?

நீங்கள் என்ன செய்கின்றீர்கள்? கே.பியிற்கு உருத்திரகுமாருடன் தொடர்பு இருக்கிறது அது இது என்று எந்த ஆதாரமும் இல்லாமல் இட்டுக் கட்டிய கதைகளை இணையத்தில் உலா விடுகின்றீர்கள். இதுதானா உங்கள் அரசியல்?

தயவு செய்து நிறுத்துங்கள். ஊடகங்களே ஒன்றை உணருங்கள். தமிழ்நாட்டு தமிழரும் மற்றும் உலக தமிழர்களும் ஒடுக்கப்படுவோர் மீது அக்கறை கொண்டவர்களும் தமிழீழம் கிடைக்குமென்பதில் உறுதியாக இருக்கிறார்கள். ஈழத் தமிழர் நாம் மாத்திரம் தான் சகல வித குழப்பங்களாலும் அரசியலின்மையாலும் தமிழீழத்தை கைவிட்டு விட்டு தலையை மணலில் புதைக்கின்றோம் அவ்வளவுதான்.

# இயற்கையும் மனிதனும்

ஒரு சராசரி மனிதனின் இதயம் ஒரு நாளுக்கு 1,03,689 முறை துடிக்கிறது. அவனுடைய ரத்தம் ஒரு நாளில் 16,80,00,000 மைல்கள் பயணம் செய்கிறது. அவன் 70,00,000 மூளை செல்களைப் பயிற்றுவிக்கிறான். 438 கன அடி காற்றை உள்ளே இழுக்கிறான். 23,000 தடவை சுவாசிக்கிறான். 750 தசைகளை அசைக்கிறான். ஒன்றரைக் கிலோ உணவை உட்கொள்கிறான்.

ஆனால் இத்தனையையும் செய்வதில் அவனுக்குக் களைப்போ, தளர்ச்சியோ ஏற்படுவதில்லை காரணம் இவை எல்லாம் அவன் முயற்சியில் நடப்பதில்லை. தன்னிச்சையாகவே நிகழ்கின்றன.

இந்தச் செயல்கள் ஒவ்வொன்றையும் மனிதன் தானாக பிரக்ஞையோடு செய்ய வேண்டுமென்றால் மனிதன் ஒரு நாள் கூட வாழ முடிவது சந்தேகமே. அவனுக்குள்ளே இயற்கையாகவே இருக்கும் ஒரு கிரியா சக்தி இவை அனைத்தையும் பார்த்துக் கொள்கிறது. அனைத்தையும் சீராகவும், ஒழுங்கு முறையுடனும், தொடர்ந்தும் இவை நடக்கும் படியே அவன் படைக்கப்பட்டு இருக்கிறான்.

இயற்கையாக நடக்கும் இந்த செயல்களில் குளறுபடி இல்லாமல் போக இன்னொரு முக்கிய காரணம், இயற்கை தன் செயல்களை அடுத்தவருக்காகவோ, சாதனை புரிந்து காட்டுவதற்காகவோ, போட்டிக்காகவோ செய்வதில்லை. எதெல்லாம் அவசியமோ அதை மட்டுமே சீராக இயற்கை செய்கிறது. இன்னொரு இதயம் நூறு முறை அதிகம் துடிக்கிறது, நானா சளைத்தவன் இதோ இரு நூறு முறை அதிகம் துடித்துக் காட்டுகிறேன் என்று எந்த இதயமும் போட்டி போட்டு துடிப்பதில்லை. அடுத்த மனிதனுடைய ரத்த ஓட்டத்தை விட ஆயிரம் மைல் அதிகம் நான் ஓடிக் காட்டுவேன் எந்த மனிதனுடைய ரத்த ஓட்டமும் வேகம் அதிகரித்துக் காட்டுவதில்லை.

இன்னொரு முக்கிய காரணம், தன் செயல்களை இயற்கை பெரிதாக நினைப்பதோ, அதனால் சலிப்படைவதோ இல்லை. தொடர்ந்து நூறு நாள் துடித்தாயிற்று, நான் என்ன எந்திரமா?, இரண்டு நாள் ஓய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்து இதயம் இயங்க முரண்டு பிடிப்பதில்லை. அது சக்தியுள்ள காலம் வரை தன் வேலையை ஒழுங்காகச் செய்ய முடிவது அதனாலேயே.

இயற்கை மனித உடல் இயக்கத்தில் இத்தனை சாதனைகளை சத்தமில்லாமல், ஆர்ப்பாட்டமில்லாமல் செய்கிறது. அவனாக அவன் பழக்க வழக்கங்களாலும், தவறான உணவுப் பழக்கங்களாலும் அந்த உடலைப் படாதுபாடு படுத்துகிறான்.

அந்த உடலுக்குத் தேவையானதைத் தராமல், தேவையில்லாததைத் திணித்து அதன் எல்லா செயல்பாட்டுக்கும் ஏகப்பட்ட இடைஞ்சல்கள் செய்கிறான். அத்தனையையும் சமாளித்துக் கொண்டு அது முடிந்தவரை ஒழுங்காக இயங்கப் பாடுபடுகிறது.

மனிதன் தன் உடல் இயக்கத்தில் இருந்தே ஏராளமான பாடங்களைக் கற்றுக் கொள்ளலாம். ஒழுங்கு முறை, சலிப்பின்மை, எல்லாத் தடைகளையும் மீறி சிறப்பாகச் செயல்படுதல் போன்றவை அந்தப் பாடங்களில் அடங்கும். இயற்கையின் செயலில் அவசரமில்லை. அதே நேரத்தில் தேக்கமும் இல்லை.

தேவையானதை தேவையான வேகத்தில் செய்கிறது. இதுவும் மனிதன் கற்றுக் கொள்ள வேண்டிய மிகப்பெரிய பாடம். மனிதன் இயற்கையைப் பின்பற்றுவது முடியாத காரியம் அல்ல. ஏனென்றால் அவனும் இயற்கையின் படைப்பே. இயற்கையோடு ஒட்டியும் தன் இயல்பை உணர்ந்தும் செயல்பட்டால் அவன் அடைய முடியாத சிறப்பில்லை.

இயற்கை இதுவரை படைத்த பல்லாயிரக்கோடிக் கணக்கான மனிதர்களில் ஒருவர் போல் இன்னொருவரைப் படைத்ததில்லை. இது பிரமிப்பூட்டும் உண்மை. சமூகம் தான் சில சமயங்களில் எல்லோரையும் ஒரே வார்ப்பில் வார்த்து விடும் முயற்சியில் ஈடுபட்டு மனிதர்களைக் குழப்புகிறதே ஒழிய இயற்கை அந்த முட்டாள்தனத்தை இது வரை செய்ததில்லை.

இயற்கையின் தனிப்பட்ட முத்திரை தனித்தன்மையே. இயற்கை மனித உடல் இயக்கங்களை ஒரே போல் உருவாக்கி இருந்தாலும் மற்ற விஷயங்களில் தன் தனி முத்திரையைப் பதித்தே அனுப்புகிறது. ஒவ்வொரு மனிதனும் இயங்கத் தேவையான நுண்ணறிவை அவன் உடலுக்குத் தன்னிச்சையாக ஏற்படுத்தி உயிர்க்கு அனுப்பி இயற்கை தன் பங்கைக் கச்சிதமாகச் செய்து விடுகிறது. இங்கு வந்தபின் வாழ வேண்டிய தன் பங்கை மனிதன் அதே கச்சிதத்துடன் செய்ய ஆற்றலையும் தந்து உதவியிருக்கிறது.

அவனுக்குள்ளே தனித் திறமைகளையும் ஏற்படுத்தி அவன் பிரகாசிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. மனிதன் பிரகாசிப்பதும், மங்கிப் போவதும் அவன் அந்தத் திறமைகளைப் பயன்படுத்தி வாழும் விதத்தில் தான் தீர்மானமாகிறது.

இயற்கையை ஒட்டி மனிதன் வாழும் போது, தெளிவாக ஆழ்ந்து சிந்திக்கும் போது தனக்குள்ளே இருக்கும் தனிச்சிறப்புகளை மனிதன் உண்மையாக உணர்கிறான். அப்படி உணரும் போது அதை வெளியே கொண்டு வர என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய முற்படுகிறான். விதைக்குள் இருக்கும் செடி வெளியே வராமல் வேறெங்கு போகும்? அவனாகவே அலட்சியப்படுத்தி அழிக்காத வரை எந்த திறமையும் அழிந்து போவதில்லை.

சரி இயற்கையை ஒட்டியோ, பின்பற்றியோ வாழ்கிற விதம் தான் என்ன? அதற்கு அடையாளங்கள் தான் என்ன? உங்கள் லட்சியங்கள் உங்கள் இயற்கையான இயல்பை ஒத்து இருப்பது, அவற்றில் ஈடுபடும் போது சலிப்பு தோன்றாமல் இருப்பது, அடுத்தவனுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதை விட இதை நான் சாதித்து விட வேண்டும் என்ற எண்ணம் பிரதானமாக இருப்பது, சில்லறை அசௌகரியங்களைப் பெரிது படுத்தி குற்றச்சாட்டுகளைத் தயார் செய்வதை விட அதிகமாக அவற்றை நீக்கும் வழிகளை ஆராய்வது, அடுத்தவர்கள் சாதனைகளில் வயிறெரியாமல் இருப்பது, தன்னைப் போலவே அடுத்தவர்களையும் மதிப்பது, அடிக்கடி மனநிறைவை உணர்வது, விடாமுயற்சியுடன் உற்சாகமாக உழைப்பது இதெல்லாம் சில அடையாளங்கள்.

இயற்கையிடம் இருந்து கற்றுக் கொண்டு நாமும் இயற்கையாக சிறப்பாக வாழ்வோமா?

*- என். கணேசன்*

# பலமடையும் மகிந்தரின் குடும்ப ஆட்சி இந்தியாவிற்குச் சவாலாக மாறுமா ?



தனியொரு மனிதருக்காக, அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்றும் விசித்திரம், இலங்கையில் நடைபெறப் போகிறது.

சனாதிபதி ஆட்சி முறைமையை ஜே.ஆர் ஜெயவர்தனா கொண்டுவந்த போது, விகிதாசார தேர்தல் முறைமையின் படி, நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறமுடியாதென்கிற நிலை வலியுறுத்தப்பட்டது.

ஆனாலும் யுத்த வெற்றி மூலம் பெரும்பான்மை பலத்தை பெற்றுவிடலாமென்று மகிந்த இராஜபக்ச போட்ட கணக்கு, தவறிவிட்டது.

இருப்பினும் சிறுபான்மை இனகட்சிகளை உடைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாமென்ற வியூகத்திற்கு முதற் பலியானது மனோ கணேசனின் கட்சி.

பிரபா கணேசன் மற்றும் திகாம்பரத்தின் கட்சித் தாவலோடு, முஸ்லிம் காங்கிரசின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை தம்மோடு இணைத்துக் கொள்ள மகிந்த கொம்பனி திட்டம் தீட்டிய வேளையிலே, ஒட்டுமொத்த முஸ்லிம் காங்கிரசும், மகிந்தரிடம் சரணடைந்தது.

ரவூப் ஹக்கீம் அவர்கள், கட்சியின் உடைவினைத் தற்காலிகமாகத் தடுத்தாலும், எதிர்காலத்தில் அது பிளவுறாது என்று அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது.

அஷ்ரப்பின் மறைவின் பின்னர், முஸ்லிம் காங்கிரஸ், பல துண்டுகளாக உடைக்கப்பட்டு, மீளவும் ஒருங்கிணையக் கூடிய சாத்தியப்பாடுகளை இழந்து நிற்பதனைக் காணலாம்.

மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணியில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

எத்தனை தடவையும், மகிந்தர் அதிபராக முடியும் என்கிற விவகாரம் அரசியல், யாப்பு மாற்றத்தில் உறுதிப்படுத்தப் படுமாயின், பல எதிர்க் கட்சிகள் உதிரும் நிலை ஏற்படும்.

சிங்களத்தின் அடுத்த இலக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில், கூட்டமைப்பின் உடைவு ஆரம்பமாகி விட்டது.

அதேவேளை நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை ஆளும் தரப்பினர் பெற்றாலும், தமிழ்த்தேசிய அரசியலை சிதைக்கும் நடவடிக்கைகளை சிங்களம் கைவிடாது.

அரசு சார்பு தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஊடாக நிறைவேற்ற முடியாத சிதைவினை, வேறு வழிகளில் சாத்தியமாக்க சிங்களம் முயற்சிக்கும்.

இந்திய தூதுவர்களின் இலங்கை விஜயத்தின் போது, இதற்கான அடித்தளத்தை அமைப்பதற்கு மகிந்தர் முயல்வதாகக் கூறப்படுகிறது.

தி.மு.க வின் மத்திய அமைச்சர் டி.ஆர் பாலு, ஈழத் தமிழர்களின் காவலனாக இந்தியா செயற்பட முடியாதெனக் கூறும் அதவேளை, சிறிலங்கா அரசுடன் தமக்குள்ள உறவுதான் மிக முக்கியமானது என்கிற வகையில் விளக்கமளிக்கிறார்.

சர்வகட்சிகளின் குழுவினை இலங்கைக்கு அனுப்பி, மீள்குடியேற்றங்களைப் பார்வையிடப் போவதாக வெளி வந்த செய்திகள் அழிந்து வந்த நிலையில், பாதுகாப்புச் செயலாளரும் இந்திய இராணுவ தளபதியும் இலங்கைக்கு வருகை தரும் நோக்கம் புதிய செய்திகளைக் கூறுகின்றன.

பொருளாதார முற்றுகைக்கு ஊடாக இலங்கையைத் தனது கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருவதும், பாதுகாப்பு ஒப்பந்தமொன்றினை நிறைவேற்றுவதன் மூலம் ஏனைய பிராந்திய நலன் பேண விழையும் வல்லரசாளர்களின் உள் நுழைவினை முறியடிப்பதுமே, இந்தியாவின் தற்போதைய இராஜ தந்திர நகர்வாக இருக்கிறது.

## அரசியல் அலசல்

இதயச்சந்திரன்

இந்தியாவின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ளும் சிங்களம், தனது ஆட்சியதிகாரத்தை பலப்படுத்துவதிலும், தமிழ்த் தேசிய அரசியலை வட-கிழக்கில் நீர்த்துப் போக வைப்பதிலுமேயே தனது வியூகத்தை வகுத்துக் கொள்கிறது.

அதாவது எதிர்க்கட்சிகளை உடைத்துப் பலவீனமாக்குவதன் மூலம், மாற்றுத் தீர்வொன்றை நாடி, வல்லரசாளர்கள் செல்ல முடியாதவாறு தடுத்திடலாமென்று மகிந்த கொம்பனி கணிப்பிடுகிறது.

அடுத்து வரும் 10 ஆண்டுகளிக்கு, ஆட்சியதிகார மாற்றம் சாத்தியமில்லை என்பதனை உணர்த்துவதே, மகிந்த சகோதரர்களின் அரசியல் உத்தியாக அமைவதைக் காணலாம்.

**போர் முடிவடைந்ததும், சரத் பொன் சேகாவின் அதிரடி அரசியல் பிரவேசம், மகிந்த சகோதரர்களின் குடும்ப ஆட்சிக்கு பெரும் சவாலாக விளங்கியதை மறுக்க முடியாது.**

வேறு தெரிவற்ற நிலைக்குத் தள்ளப்படும் இந்தியாவும், மேற்குலகமும், சிங்களத்தின் மீது இராஜ தந்திர அழுத்தங்களை திணிக்க முடியாத கையறு நிலைக்குத் தள்ளப்படுமாயின், தமிழ் மக்களிற்கான அரசியல் தீர்வு என்கிற விவகாரமும் கவனிப்பாரற்று கைவிடப்படும்.

14 எம்பிக்களைக்கொண்ட தமிழத்தேசியக் கூட்டமைப்பும், நாடாளுமன்றத்தில் விவாதங்களை நடாத்துவதோடு, ஊடகங்களுக்கு அறிக்கை விடும் அரசியலை மட்டுமே முன்னெடுக்கும் நிலை ஏற்படலாம்.

காங்கேசன்துதுறை துறைமுகத்தை ஆழப்படுத்தும் ஆய்வுகளிலும், பலாலி விமானப்படைத் தள ஓடுபாதைகளை சீர் செய்வதிலும், யாழ் குடாவில் துணை தூதரகம் மற்றும் வங்கிகளை நிறுவுவதிலும்தனது கவனத்தைச் செலுத்தும் இந்திய அரசு, தாயகத் தமிழ் மக்களிற்கான நிரந்தர அரசியல் தீர்வு குறித்து அக்கறை கொள்வது போல் தெரிவதில்லை.

இன நல்லிணக்கத்தை உருவாக்குவதற்காக, கற்றுக் கொண்ட பாடங்கள் நாடாத்தும் சிங்கள தேசம், ஆயுதம் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட விதம் குறித்து கற்றுக் கொள்வதற்காக, இந்திய இராணுவத் தளபதி வி.கே.சிங்கை வட பகுதிக்கு அழைத்துள்ளது.

அதேவேளை சர்வதேச இராஜ தந்திரங்களைக் கற்றறிந்து கொள்ள, இறுதிப் போரில் இனவழிப்பை நடாத்திய பல கட்டளைத் தளபதிகளை, ஐ.நா.விற்கும் மேற்குலக நாடுகளுக்கும் தூதுவர்களாக அனுப்புகிறார் மகிந்தர்.

இனப்படுகொலைகளில் ஈடுபட்ட தனது படைப் பிரிவுத் தளபதிகளை, தூதுவர்களாக நியமிக்கும் மகிந்தரின் நகர்வுகளில், பல உண்மைகள் மறைந்துள்ளது.

இன அழிப்பில் பங்குகொண்டவர்களுக்கு சர்வதேச இராஜதந்திர அஸ்திரத்தினை பெற்றுக் கொடுப்பதும், புலம் பெயர் நாடுகளிலுள்ள தமிழின விடுதலைச் செயற்பாடுகளை அழிப்பதும், இதில் உள்ளடங்கும்.

**இனிமேல், புதுடெல்லிக்கு அடிக்கடி ரணில் மேற்கொள்ளும் பயணங்களும் குறைவடைந்து விடும்**

அதே வேளை, சர்வதேச அரசியல் அரங்கில், இலங்கைக்கு எதிராக கிளம்பியுள்ள போர்குற்ற விசாரணைகளில், இத் தளபதிகளை பலிக்கடாவாக்கி, தாம் தப்பித்துக் கொள்ளும் உத்தியையும், மகிந்த சகோதரர்கள் இந்த நியமனங்கள் ஊடாக பிரயோகிக்க முயற்சிப்பதாகவும் ஒரு பார்வை உண்டு. இவை தவிர சரத் பொன்சேகாவை விட, இறுதிப் போரை களத்தில் நின்று நடாத்திய மேஜர். ஜெனரல் சவேந்திரா சில்வா மீது சிங்கள இனப்பற்றாளர்களின் ஈடுபாடு அதிகரித்திருப்பதை மகிந்தர் உணர்ந்துள்ளார்.

ஐ.நா சபைக்கான உதவி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி பதவியை சவேந்திரா சில்வாவிற்கு அளித்து பொன்சேகா போன்று ஒரு அதிகாரப்போட்டியாளராக மாறுவது தடுக்கப்பட்டுள்ளது.

அதாவது போர் முடிவடைந்ததும், சரத் பொன் சேகாவின் அதிரடி அரசியல் பிரவேசம், மகிந்த சகோதரர்களின் குடும்ப ஆட்சிக்கு பெரும் சவாலாக விளங்கியதை மறுக்க முடியாது.

பாதுகாப்புத் துறை தம் வசம் இருந்தாலும், போரை நடாத்திய தளபதிகள், தமக்குப் போட்டியாக அரசியல் களத்தில் குதிக்கலாமென்பதை, சரத்பொன்சேகவிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள் மகிந்த கொம்பனிக்கு புரிய வைத்திருக்கும்.

ஜே.வி.பியின் பலத்தில் தொங்கிக் கொண்டிருக்கும், பொன்சேகா குறித்த அச்சம் அகன்றிருக்கும் இவ்வேளையில், முஸ்லிம் காங்கிரசின் நிபந்தனையற்ற ஆதரவினால் புத்துணர்ச்சி பெற்றுள்ள மகிந்த சகோதரர்கள், யூ.என்.பியிலிருந்து ரணிலிற்கு எதிராக போர்க்கொடி தூக்கும் சஜித் பிரேமதாசா போன்ற இளையோரை தம்வசம் இழுக்க ஆரம்பித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இனிமேல், புதுடெல்லிக்கு அடிக்கடி ரணில் மேற்கொள்ளும் பயணங்களும் குறைவடைந்து விடும்.

இந்தியக் கடற்படைத் தளபதி நிர்மல் வர்மாவின் அண்மைய விஜயத்தைத் தொடர்ந்து, இந்திய இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதிகளின் பயணங்கள் இனி ஆரம்பமாகின்றன

தமிழர் தாயகத்திலுள்ள இராணுவநிலைகளைத் தம்வசமாக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, இவர்கள் வருகை தரவுள்ளனர்.

கடலோரப் பாதுகாப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வு போன்ற விவகாரங்களை முன்னிறுத்தியவாறு, நிறைவேறாத 'சீபா' ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட விடயங்களை, ஓரளவிற்காகவாவது நடைமுறைப்படுத்த இந்தியா முற்படுவது போல் தெரிகிறது.

ஆனாலும், தனிப்பெரும் அரசியல் சக்தியாக உருவெடுக்கும் மகிந்த ஆட்சியானது, இந்தியா விரிக்கும் பொறிக்குள் வீழ்ந்து விடாமல் இருப்பதற்கு, சீனாவின் அநுசரணையை எவ்வாறு பெற்றுக் கொள்ளப் போகிறதென்பதை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

எது இலக்கு எனத்
தெளிவு கொண்டு
எட்டி நட
வீரமும் ஓர்மமும்
விசையாய்க்
கொண்டு
வெற்றி எடு
ஒரு பேப்பர்
ORU PAPER


www.gold-factory.co.uk.
GOLD FACTORY
Importers & Manufatures of 22ct Gold jewellery
Visit us for the latest designs and best prices in 22ct gold and Diamond Jewellery
22ct gold jewellery sold at the best prices WE BUY GOLD for CASH
We LOAN cash against GOLD for small interest rates.
All types of jewellery made and repairing.
Importers and exporters of gold and diamond jewellery.
No VAT for overseas visitors
பழைய தங்கம் நியாயமான விலைக்கு வாங்கப்படும் பழைய தங்கத்திற்க்கு புதிய தங்கம் கொடுக்கப்படும்
உடனடியாகப் பணம் தேவையா? சிறிது வட்டியுடன் உங்கள் நகைக்கு ஈடாகப் பணம் கொடுக்கப்படும்.
நகைகள் யாவும் திருத்தி அமைத்துக் கொடுக்கப்படும். அதிஷ்டக் கற்களை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
Please come to us for all your jewellery requirement
Gold Factory Limited
149, The Broadway, SOUTHHALL, UB1 LP
Also at 294 Farnham Road, SLOUGH, SL1 4XL
Tel : 01753 536 800
மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
TEL: 020 8813 8979

# மறந்துவிடலாம், ஆனால்...



கோபி
ஒரு பேப்பர்

'ஜே.ஆர். ஜயவர்தன ஒரு உண்மையான பௌத்தராக இருந்தால் நான் ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது'

*- தேசியத் தலைவர்*
*வேலுப்பிள்ளை பிரபாகரன்*

1984ம் ஆண்டு இந்தியாவிலிருந்து வெளியாகும் 'The Sunday' என்ற வார இதழுக்கு வழங்கிய செவ்வியில் திரு. பிரபாகரன் மேற்கண்டவாறு கூறியிருந்தார். இதற்கு முன்பதாக வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு சிறிலங்காவின் முன்னாள் சனாதிபதி ஜயவர்தன வழங்கிய செவ்வியில், தமிழ் மக்கள் பௌத்த மதத்தைத் தழுவியவர்களாக இருந்திருந்தால், இன நெருக்கடி தோன்றியிருக்காது என தான் நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். அடிப்படையில் இருவருமே ஒரு விடயத்தை பற்றியே குறிப்பிட்டிருந்தாலும், பிரபாகரன் உண்மையான என்ற அடைமொழியை உபயோகித்ததன் மூலம், வெறுமனே பெயருக்கு பௌத்தர்களாக இல்லாமல் புத்தபிரான் போதித்த நெறிகளைக் கடைப்பிடிக்கிறவர்களாக இருந்திருந்தால் சமாதானம் சாத்தியப்பட்டிருக்கும் என்பதனை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

போர்க் குற்றவாளி கோத்தாபாய இராஜபக்சவின் பணியகத்தில் புத்தர் சிலை காணப்பட்டதாகவும், ஆதலால் அவர் பௌத்த நெறிகளை பின்பற்றுகிறார் எனத் தான் ஆறுதல் கொண்டதாக அவரது நட்புக்குரிய 'கைதியாக' இருக்கும் கே.பி., டி.பி.எஸ். ஜெயராஜுக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்திருக்கிறார். (ஈழத் தமிழ் மக்களின் அதிர்ஸ்டம் இந்த 'அறிவுக் கொழுந்து' அவர்களின் தலைவராக வந்து தொலைக்கவில்லை)

அமைதிக்கும், சகோதரத்துவத்துக்குமான பௌத்த மதம், சிறிலங்காவில் ஒரு சிங்கள பௌத்த அடிப்படைவாதமாக மாற்றப்பட்டமை ஒரு துரதிர்ஸ்டமான வரலாறு. இதனை அமெரிக்காவில் வசிக்கும் கல்வியாளர் ஸ்ரான்லி தம்பையா Buddhism Betrayed என்ற தனது நூலில் முழுமையாக விபரித்துள்ளார். (கே.பி., முன்னர் இந்நூலை படித்திருக்காவிடில், சிறிலங்காவில் அது தடை செய்யப்பட்டுள்ளமையால், அதனை படிக்கும் சந்தர்ப்பம் அவருக்கு கிடைக்க வாய்ப்பில்லை)

கைதியாயிருக்கும் கே.பி. மட்டுமல்ல, வேறும் சிலரும் 'நடந்தவற்றை மறந்து விடுங்கள். எதிர்காலத்தை பற்றிச் சிந்திப்போம்' என்ற பாணியில் பேசத் தொடங்கியுள்ளார்கள். இவ்வாரம் யாழ்ப்பாணத்திற்கு பயணம் மேற்கொண்ட இந்திய வெளியுறவுச் செயலாளர் நிருபமா மேனன் இராவும் இக்கருத்தையே வெளியிட்டிருக்கிறார். நிருபமாவிடம் ஒரு கேள்வி. நடந்தவற்றை தமிழர்கள் மட்டும்தான் மறக்க வேண்டுமா? அல்லது பரஸ்பரம் இரண்டு தரப்பும் மறந்து விடுவோமா?

2002ம் ஆண்டு ரணிலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், இவ்வாறான ஒரு வேண்டுகோளை பிரபாகரன் விடுத்தபோது, அதனை ஏற்றுக் கொள்ள இந்தியா மறுத்ததேன்?

இவற்றிற்கு இன்னொருபடி மேற்சென்று, 'ஆயுதப் போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்கள் பற்றி விவாதித்து நியாயப் படுத்துவதற்கான காலம் இதுவல்ல' என ஒரு தமிழ் மருத்துவர் இணைய தளமொன்றில் எழுதியுள்ளார். மருத்துவர் பற்றி விசாரித்ததில், அவர் சவுதி அரேபியாவில் விலங்கு மருத்துவராகப் பணிபுரிகிறார் எனத் தெரிய வந்தது. ஆகவே மனிதவுரிமைகள், அரசியல் உரிமைகள் பற்றி இந்த விலங்கு மருத்துவர் அக்கறைப்படாததையிட்டு ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஆகையால் அவரை விட்டு விடுவோம்.

சிங்கள இனவாதியான தயான் ஜயதிலக அவரது அண்மைய கட்டுரை ஒன்றில் 'சிங்களவர்களுக்கு தாராள மனப்பான்மையும் தமிழர்களுக்கு நடைமுறை யதார்த்தத்தை புரிந்து கொண்டு நடக்கும் பக்குவமும் வேண்டும்' எனக் குறிப்பிடுகிறார்

இவர்கள் சொல்வதைக் கேட்டு தமிழர்கள் அனைவரும், 'நமோ நமோ மாதா அப சிறிலங்கா .. சுந்தர சிறி பரினி...' எனப் பாடிக் கொண்டு, வாளேந்திய சிங்கக் கொடிக்குப் பின்னால் அணி திரண்டு நின்றால் என்ன நடக்கும்? இது ஒரு கற்பனைதான் இருந்தாலும் எப்படியிருக்கும் என்று சிந்தித்துப் பார்த்தால் என்ன?

அதற்கு உதவியாக, இலங்கைத் தீவில் தமிழர்களையும் அவர்களது விவகாரங்களையும் தவிர்த்து விட்டு, மற்றயவர்களையும் அவர்களது விவகாரங்களையும் மட்டும் பார்ப்போம்.

சட்டம், நீதி பரிபாலனம் அங்கு ஒழுங்காக நடை பெறுகிறதா என ஆய்வினை மேற் கொண்ட பிரித்தானியாவில் இயங்கும் International Bar Association – Human Rights Association என்ற அமைப்பு சிறிலங்காவின் நீதிபரிபாலனம் தொடர்பாக அங்கு ஆய்வுகளை மேற்கொண்டு வெளியிட்ட அறிக்கையில், நீதித்துறையில் அரசியல் தலையீடு நிறைந்து காணப்படுவதனைச் சுட்டிக்காட்டி நீதிமன்றங்கள் சரியான தீர்ப்புகளை வழங்குவதில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைப் புரிந்து கொள்ள நாம் பெரும் ஆய்வுகளை மேற்கொள்ளத் தேவையில்லை, ஒரு உதாரணம் போதும். ஜெயப்பிரகாஸ் திசாநாயகம் என்ற ஊடகவியலாளர் வருடக் கணக்கில் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் அவருக்கு இருபது வருட கடுழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. இத்தனைக்கும் அவர் விடுதலைப் புலிகள் அமைப்பிடமிருந்து ஒரு இலட்சம் சிறிலங்கா ரூபா பணம் பெற்றதாக அவர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் பல மில்லியன் டொலர்கள் பணத்தில் மிதந்தவர் மீது ஒரு வழக்குத் தானும் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை.

இனி, 20 மில்லியன் சனத் தொகையைக் கொண்ட பௌத்த நாடெனக் கூறப்படும் சிறிலங்கா பற்றிய சில புள்ளி விபரங்கள்.

- அண்ணளவாக 50,000 பேர் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் (பாலியல் தொழில் செய்வது அங்கு சட்ட விரோதமான செயற்பாடு)
- மத்திய கிழக்கு நாடுகளில் 1.8 மில்லியன் பேர் தொழிலாளர்களாகப் பணிபுரிகிறார்கள் இவர்களில் 70 விழுக்காடானவர்கள் பெண்கள்
- மாதாந்தம் 18 ஆயிரம் பெண்கள் பணிக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்கிறார்கள். (GSP வரிச் சலுகை நீக்கத்துடன் இத் தொகை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது)
- தேசிய வருமானத்தை ஈட்டித் தருவதில் பணிப் பெண்கள் முக்கிய இடம் வகிக்கிறார்கள்.

கூடவே வேறும் சில தகவல்கள்:

- 2010 இல் இராணுவச் செலவிற்கான பாதீடு 210 பில்லியன் ரூபாய்கள், யுத்தம் முடிவுற்றதாக கூறப்பட்டதின் பின்னர் 45 பில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது
- 25 ஆயிரம் சீனத் தொழிலாளர்கள் (பெரும்பாலனவர்கள் கைதிகள்) பணிபுரிகிறார்கள்
- 20 ஆயிரம் இந்திய கட்டிடத் தொழிலாளர்கள் விரைவில் வரவிருக்கிறார்கள்.
- தோல்வியடைந்து கொண்டிருக்கும் சிறிலங்காவின் தேசிய நீரோட்டத்தில் தமிழர்கள் இணைந்து கொண்டு எதைத்தான் சாதிக்கப் போகிறார்கள்? ஆதலால் சிந்தனையை மேலும் விரிக்க முடியவில்லை.

## பெருநிலம்

கனவுச் சாம்பல் படர்ந்த மனிதர்கள்
இறந்தபடியே திரிகிறார்கள்...
உயிரைத் தேடும் ஆர்வமின்றி
தேய்ந்த உடல்களை அலையவிட்டபடி
தினமும் அவர்கள் வாழ முனைகிறார்கள்...
இறந்தபடியே வாழ்வது இப்போ
அவர்களுக்கு வசதியாயிற்று..!

மீண்டும் உயிரைச் சுமக்கும் எண்ணமேதும்
இப்போதைக்கில்லை....
உயிர்கள் அவர்களுக்கு மிகவும் பாரமாயிற்று..
அவற்றின் காவுதல்கள் பெரும் அபாயமாயிற்று..!

அவை பற்றிப் பேசுவதும் விவாதிப்பதும் கூட
கடும் பயங்கரவாதமாயிற்று..!
மௌனத்தை இறுகப்பற்றியபடி
இறந்தபடியே நடப்பது வசதியாகப் போயிற்று...!

இறந்தபடியே வாழும் மனிதர்களின்
இனப்பெருக்கம்
வரலாற்றைத் தொலைத்தபடி சிதறிச் செல்கிறது...
சிதைந்த கனவுகளும் நசிந்த நினைவுகளுமாய்
பாரெங்கும் பரவி நீள்கிறது!
மெல்லத் தலை நீட்டிப் பேச விரும்புவோரை..
அவ்வப்போது அமைதிப்படுத்தி மௌனம்
போதிக்க
ஆயிரம் புத்தர்களும் பத்தாயிரம் புனிதர்களும்!

கனவுச் சாம்பலின் வாசனையில்
பேருலகம் களிப்பெய்துகிறது....
அழகிழந்த நகரங்கள் அவர்களின்
கேலிக் கவிதைகளாகின்றன...!
சாம்பல் மேடுகள் கவர்ச்சி மிக்க
கதைக் களங்களாகின்றன....!

பட்டிமன்றம் செய்வதற்கும்
பரிசில்கள் பெறுவதற்கும்
புதையுண்ட பெருநிலங்கள்
புனைக் களங்கள் ஆகின்றன...!
காலம் காலமாய் மௌனிகளாய் இருந்தவர்கள்
கானமிசைக்கப் புறப்பட்டு விட்டார்கள்!


வாழ்வும் வளமும் மிக்க பெருநிலமொன்று
வாயும் கண்ணும் இழந்து
சாவின் வலிகளைக் கயிறுகளாக்கி
இறந்தபடியே வாழும் மனிதர்களை
விழுந்து விடாமல் இழுத்துச் செல்கிறது...!

இந்து சமுத்திரத்தின் இரத்தப் புகாரில்
ஏராளம் பிணந்தின்னிகள் இன்னமும்
நீச்சலடித்தபடி...!
நீச்சலின் வீச்சினைப் போற்றிப் பாட
நீள் வரிசையில் நிறை வித்தகர்கள்....!

பெருநிலத்தின் பேரும் புகழும்
புதை குழியுள் உரமாகும்...
வலு நிறைந்த வாழ்வுகள் அங்கு
விதைகளாகும்..
வலிகளினாலான கயிறுகள் வடங்கள் ஆகும்...
நீச்சலடிப்புகளை நிறுத்தும் நங்கூரங்களுமாகும்..
பெருநிலம் மீண்டும் துளிர் விடும்....!

- சந்திரா ரவீந்திரன்



# எங்கள் குரலாய் ஒலிக்கும் பேராசிரியர் சிற்றம்பலம் - தமிழனாய் பெருமைப்படுகிறேன்

பேராசிரியர் என்று பலர் இருந்தாலும் இன்றைக்கு எங்கள் குரலாய் ஒலிக்கும் பேராசிரியர் சிற்றம்பலம் போன்றோரை பார்த்து நான் தலை வணங்குகிறேன். கற்ற கல்வி எனும் ஆயுதம் என்றைக்கும் அடக்கப்பட முடியாதது. அடக்குமுறையில் ஒடுக்க பட்டு , மனித பலத்தின் ஆத்ம உறுதியில் நடந்த உரிமைப்போர், அடங்கி விட்டதாய் சிங்கள தேசம் கூவி திரியும் வேளையில் , உயிருக்கு அபாயம் நிறைந்துள்ள யாழ் மண்ணில் ஒலித்த அந்த பெரியவர் நிச்சயம் ஒரு உதாரணமே! வரலாற்றில் இவர் போன்ற கற்ற வீரர் வாழ்ந்த இனத்தில் பிறந்த பெருமை எங்களுக்கு வரட்டும் . பல பேராசிரியர்கள் வாழ்ந்த பூமியில் இனத்துக்காக குரல் கொடுப்பவர்கள் ஒரு சிலரே. அதிலும் கடைசி காலத்தில் வரலரற்றை கைவிட்டு தமிழின உணர்வை கைவிட்டு, பெயருக்கும் புகழுக்கும் தமிழை வளர்ப்பதாய்க் கூறி இறக்கப் போகும் அந்த 'தம்பி' களை விட இந்த பேராசிரியர் பெரியவரே!. இடது சாரிக் கொள்கை, என்று யதார்த்தத்தை மறந்து பாமரரைப் போல கதை எழுதும் பல 'சிவன்களும்', புலி எதிர்ப்பு கொள்கை என்று தமிழின போராட்டத்தை கொச்சைப் படுத்தும் எங்கள் ரத்தத்தில் கூழ் காய்ச்ச துடிக்கும் 'யேசுக்களும்' இனியாவது கொஞ்சம் வாயைத் திறவுங்கள். புலிகளின் ஆயதப் போரைத் தாண்டி மக்கள் போராக, போராட்டத்தின் அடுத்த நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் வேளையில் உங்கள் அறிவையும், எழுத்தாற்றலையும் கொஞ்சம் தெளிவாக உபயோகியுங்கள். கற்றவன் என்ற சிறப்பும், எங்கள் வரலாற்றில் ஒரு இடமும் உங்களுக்கும் கிடைக்கட்டும்.

தமிழ் தேசிய கூட்டமைப்பை வாயைத் திறவுங்கள் -என்று நாங்கள் கத்தியபோது, எனக்கு கூறினார்கள் 'தம்பி அங்க வாயை திறந்தால் சுட்டு போடுவாங்கள் , இங்கே இருந்து நீர் கத்துற மாதிரி அங்க ஒண்டும் புடுங்க ஏலாது ' என்று. நாங்கள் ஒன்றும் புலிக்கொடியை தூக்கி பிடியுங்கள் என்று கேட்கவில்லையே. நாங்கள் கேட்பது எங்கள் உரிமையின் குரலாக, எங்கள் மக்களின் உரிமைக்காக குரல் கொடுங்கள். அந்த பேராசிரியர். இந்திய பேரரசின் தூதுவர் முன்னால், உள்ள பிரச்சினையை உரக்கக் கூறினார். சொல்ல வேண்டியவற்றை மேடையில் கத்திச் சொன்னார். கூட்டமைப்பு என்ன செய்கிறது? பயந்து ஒடுங்கி என்ன புடுங்க போகிறோம்? கேட்டால் சாணக்கியம் என்கிறார்கள் , அரசியல் என்கிறார்கள்.

இன்றைக்கு கூட்டமைப்பு தமிழ் நாட்டில் செய்ய கூடிய பல விடயங்கள் உண்டு. புலம் பெயர் மண்ணில் உள்ள உறவுகளோடு செய்ய கூடிய பல விடயங்கள் உண்டு. கடைசி ஒரு சிறிதரன் எம் பி செய்யும் தொண்டைக்கூட இவர்களால் இன்னமும் செய்ய முடியவில்லை. கேட்டால், சூடு விழும் என்கிறார்கள்.

இன்றைக்கு கூட்டமைப்பின் அமைதியால், இருக்கும் இடத்தில் கூட அவர்களுக்கு மரியாதை இல்லை. நிருபமா ராவ் கூட இவர்களைக் கணக்கில் எடுக்கிறார் இல்லை. சிங்களவனோ இன்னமும் மக்களின் பிரதிநிதியாக உங்கள் தமிழ் தேசத்தில் உலா வர கூட அனுமதி தரவில்லை. தடுப்பு முகாங்களுக்கு செல்லவும் கெஞ்சி பார்த்தும் முடியவில்லை. தமிழ்நாட்டிக்கு சென்றாவது கொஞ்சம் ஈழ தமிழுணர்வை வளர்க்கவும் பயம். புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர் அமைப்போடு தொடர்பு இருப்பதாக காட்டி கொள்ளவும் தயங்குகிறார்கள்.

சும்மா வெட்டியாக இருக்கும் நேரத்தில் அமெரிக்க தூதுவரை, பிரித்தானிய தூதுவரை சந்தித்து கொஞ்சம் எங்கள் உரிமைப் போரின் நியாயத்தைச் சொல்லலாமே?

நாங்கள் செய்யும் போராட்டத்திற்கு பக்கபலமாக நின்று உள்ளூரில் கொஞ்சம் குரல் கொடுத்தால் போதுமே!

புலத்தில் உள்ள புலிகளின் பிரிவுகளும் இதற்கு முன் வரவேண்டும்! தேசியத் தலைவரின் பாதையில் பயணிக்க, சகல மக்களுக்கும் இடம் தர முன்வர வேண்டும். அதிவேக நெடுஞ்சாலையில் உள்ள சமாந்தர பாதைகளில் உள்ளது போல பயணிக்க சகலருக்கும் உரிமை உண்டு. இங்கே சகல ஒழுங்கைகளும் பாவிக்க பட வேண்டும். ஆயுதம் ஏந்தி போராட வேண்டும் என்று பயணிப்பவன் பயணிக்கட்டும். அது அவன் உரிமை. அதே நேரம், மற்றவர் ஒழுங்கைகளில் குறுக்கிடாத மன பக்குவம் வேண்டும்.

தமிழீழ பயணம் குச்சொழுங்கையில் இருந்து அதி வேக நெடுஞ் சாலைக்கு மாற்ற படவேண்டும். அங்கே சமாந்தரமாய் பயணிப்பவரை முட்டி மோதாமல், உங்கள் பாதையில் பயணிக்கும் எண்ணம் வேண்டும். இங்கே எங்களுக்குள் முட்டி மோதுவதால் எல்லாருடைய தமிழீழ பயணமும் தாமதமாகிறது. இந்த தாமதம் பல மக்களை நம்பிக்கை இழக்க வைத்து விடும். பலர் பயணத்தை கைவிடக் கூடும்! இதைத் தவிர்ப்போம்!

ஜனநாயக பாதை என்பது ஒன்றிணைக்கப் பட வேண்டும். நாடு கடந்த தமிழ் ஈழ அரசு பலப் படுத்தப் படவேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு பயணிக்க ஒரு இடம் வேண்டும். துரோக சக்திகள் தனிமைப்படுத்தப்படும் போது, அவர்களும் மனம் திருந்தி இணைந்தால் அவர்களையும் இணைக்கும் பணிகள் முன்னெடுக்கப் படவேண்டும். தலைவர் அன்று ஏற்று கூட்டமைப்பை உருவாக்கிய அந்த மனப்பாங்கு வளர்க்கப் படவேண்டும். இன்றைக்கு தலைவர் வளர்த்த தமிழ் தேசியம் உலகளாவிய ரீதியில் பெரும் விருட்சமாய் வளர்ந்துள்ள நேரத்தில் புத்திஜீவிகள் அதனோடு இணையட்டும். அச்சம் கொஞ்சம் கொஞ்சமாய் கலையட்டும்.

இன்னும் ஒரு போர் நடை பெறாமல் எங்கள் மக்கள் அமைதியான வழியில் வாழ வேண்டும் என நினைப்பவர்கள் நிச்சயமாய் ஜனநாயக வழிகளுக்கு உதவ வேண்டிய கட்டாயத்தில் உள்ளீர்கள். தமிழீழம் தேவையா இல்லையா என்று வீணாக வாதிடாமல், அதை தீர்மானிக்கும் உரிமையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று போராடுங்கள் .

மீண்டும் ஒரு யுத்தத்திற்கு சிங்கள பேரினவாதம் தள்ளுகிறது என்பது வெளிப்படை. அந்த யுத்தம் நிச்சயம் இன்னமும் பல உயிர்களைக் குடிக்கும், அதனால் இன்றே போராடுங்கள். உலக நாடுகளுக்கும் மீண்டும் மீண்டும் எடுத்துக் கூறுங்கள்! எங்கள் மக்களை யுத்தத்திற்கு தள்ள வேண்டாம் என்று உரிமையோடு கூறுங்கள். சிங்கள பேரினவாத வெறியை தடுத்து நிறுத்த நாங்கள் இணைய வேண்டும்!

மக்கள் போர் வெடிக்கட்டும்! தலைவரின் பாதையில் பயணம் தொடரட்டும்! இந்த உலகளாவிய ஜனநாயக போர் தோற்றால் முடிவு எப்படி இருக்கும் என உலகத்துக்கு தெரியப்படுத்துங்கள். எந்த ஒரு இனமும் பல காலம் அடிமையாய் வாழ முற்படாது !

கடைசிச் சிங்கள காடை இராணுவ வெறியன் எங்கள் மண்ணில் இருக்கும் வரை ஓயாது எங்கள் போர்! வணங்காது எங்கள் தலை!

- *இராஜ்*

## நமீதாத்துவம்

உன்னிடம் இருப்பதை நீ உலகத்திற்கு காட்டு..
இந்த உலகம் உன்னை நேசிக்கும்..
– சொன்னவர் நமீதா.



வாழ்கையில் சின்ன சின்ன விசயங்கள் தான் பெரிய் மாற்றங்களைக் கொண்டு வரும். உதாரணமாக நமீதா இவ்ளோ பெரிய ஆளானதுக்கு அவங்களோட சின்ன சின்ன ட்ரெஸ் தானே காரணம்.




# யாழ்ப்பாணத்துப் புதினங்கள் - கோள் மூட்டல் 2

**கானா பிரபா**
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*

*எனது முந்திய பதிவில் 'தயவு செய்து பாதணிகளோடு உட் செல்லாதீர்' என்று இன்ரநெற் கபே போன்ற இடங்களில் போட்டிருந்ததாகச் சொல்லியிருந்தேன். பதிவு போட்டு அடுத்த நாள் யாழ்ப்பாணம் ரவுணுக்குப் போய் விட்டுத் திரும்புகையில் ஒரு கடையில் இப்படிப் போட்டிருந்ததைப் பார்த்தேன் 'நீங்கள் பாதணிகளுடனும் உள்ளே வரலாம்' அவ்வ்வ் :-((((*

## வெள்ளைக் கார்ட் வெள்ளாளர்

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போய் விட்டு கே.கே.எஸ் றோட்டில் ஆட்டோவில் பயணித்துக் கொண்டிருக்கிறேன். மருதனார்மடம் இராமனாதன் கல்லூரியில் இருந்து சாரி சாரியாக செம்பாட்டு மண் பரவிய உடுபிடவைகள் அணிந்து ஒரு ஐம்பது பேருக்கு மேற்பட்ட ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், சிறுவர்கள் அடங்கலாகப் பயணிக்கிறார்கள். 'எங்கே போய் விட்டு இவர்கள் போகிறார்கள்' என்று ஆட்டோக் காரரின் வாயைக் கிளறுகிறேன்.

இவர்கள் வருமானம் குறைந்த சனம், வெள்ளைக் கார்ட்டுக்கு நிவாரணக்காசு வாங்குபவர்கள். வெளி நாடுகள் செய்யும் நிதியுதவியை இங்கேயுள்ள விதானை மார் (கிராம சேவகர்) இப்படியான சனத்துக்குக் கொடுக்கும் போது சும்மா கொடுத்தோம் என்றிராமல் ஏதாவது தோட்ட வேலையைச் செய்ய வைத்துக் கொடுப்பார்கள்' என்று சொல்லிய அவர் 'இந்தச் சட்டம் எல்லாம் தாழ்த்தப்பட்ட சனத்துக்குத் தான் தம்பி, என க்குத் தெரிய எத்தனையோ வெள்ளாம் ஆட்கள் இந்த வெள்ளைக் கார்ட் நிவாரணம் எடுக்கிறவை ஆனால் 'விதானையாரை தங்கட அணைவுக்குள்ள வச்சிருக்கினம் என்பதால ஓசியில் அவைக்குப் பணம் கிடைக்கும்' என்று பெருமினார். அந்த நேரம் சாதி ஒழிப்புப் போராளி எழுத்தாளர் டானியல் என் நினைவுக்கு வந்தது தவிர்க்க முடியாது இருந்தது.

## யாழ் நிலம் வேணும் பராசக்தி யாழ் நிலம் வேணும்

யாழ்ப்பாணத்துக்கு ஆயுட் காப்புறுதி நிறுவனங்கள் முதல் லொட்டு லொசுக்குக் கடைகள் எல்லாம் சமீப காலமாக முற்றுகையிடுக்கின்றன. கஸ்தூரியார் வீதி போன்ற பிரதான வீதிகளின் கட்டிடங்களின் அடுக்குகள் மூன்று, நான்கு என உயருகின்றன.

இடிபாடான கடைகளின் சொந்தக்காரரை 'நாளை நமதே' பாட்டுப் பாடி சேர்ந்த சகோதரங்கள் மாதிரி தேடிப்பிடிக்கிறார்கள். ஒரு வர்த்தகர் என் காதில் போட்ட சமாச்சாரம் இது. யாழ்ப்பாணத்தில் இருந்த தன் கடையை 35 லட்சத்துக்கு விற்க இருந்தாராம் ஒருவர். இப்போது அந்தக் கடையை தென்னிலங்கையின் ஒரு பெரும் வர்த்தக நிறுவனம் வருஷம் 18 லட்சத்துக்கு வாடகைக்குக் கேட்டிருக்கிறதாம் என்றால் பாருங்களேன்.



படத்தில் வின்சர் தியேட்டருக்குப் பக்கமாக எழுப்பப் பட்டுக் கொண்டிருக்கும் அடுக்கு மாடிக் கடைத் தொகுதி ஒன்று

இந்த நிலையில் தமது வீடுகளை 30 லட்சத்துக்கும் குறைவாக விற்று விட்டு தப்பினோம் பிழைச்சோம் என்று கொழும்பில் அடுக்கு மாடியில் முதலிட்டுக் கொண்டவர்களும் வெளிநாட்டில் தமது வீட்டின் மோர்ட்கேசுக்குப் போட்டவர்களும் நாடு திரும்பி மூக்காலும் வாயாலும் அழுகின்ற நிலமையைப் பார்க்கக் கூடியதாக இருந்தது. வெறுங்காணிகளுக்கு இருக்கும் மவுசு தமன்னா கால்ஷீட் போல எகிறிவிட்டது.





*எங்கட ஊர் லக்சறி கார் வகைகள் இவை தான். வெளிநாடுகளில் இந்தக் காரெல்லாம் லட்சக்கணக்கான டொலர் பெறுமே?*

## மருதனார்மடச் சந்தைக் காட்சி

வெளிநாடுகளில் shopping mall எனப்படும் கடை வளாகங்கள் ஒவ்வொரு நகரிலும் இருப்பது தவிர்க்க முடியாதது. யாழ் நகரச் சந்தைப் பகுதி நெருக்கடி நிறைந்த பகுதியாக மாறும் போது அதைச் சூழவுள்ள பகுதிகள் மெல்ல மெல்ல நகரமயமாகிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் கீழேயுள்ள படத்தில் இருப்பது நாவலர் றோட்டில் உள்ள லக்சன் பிளாசா




## நாம வேற வீட்ல பிறந்திருக்கலாம்டா

அழகன் படத்தில் மம்முட்டிக்கு நிறையக் குழந்தைகள், அவரின் கண்டிப்பினால் மனம் வெதும்பி ஒரு பையன் சொல்லுவான் 'நாம வேற வீட்ல பிறந்திருக்கலாம்டா' இதே மாதிரியான ஒரு உரையாடலை சமீபத்தில் கேட்டேன். தற்போது தமிழில் ஆடி கழிந்து ஆவணி பிறந்திருக்கிறது, ஏகப்பட்ட கல்யாண வீடுகள், சாமத்தியச் சடங்குகள், குடிபுகுர்தல்கள் இவற்றை விட நல்லூர் கந்தசுவாமி கோயில், செல்வச்சந்நிதி முருகன் ஆலயம், மஞ்சவனப்பதி முருகன் ஆலயம். தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில் மகோற்சவங்கள் இவற்றையும் விட சின்னச் சின்னக் கோயில்களுக்கும் மகோற்சவங்கள் களைகட்டுகின்றன.

இதனால் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக புலம்பெயர் தமிழர்கள் படையெடுக்கிறார் கள். நமது சமூகத்தில் புதிதாக முளைத்திருக்கும் சாதி 'பொறின் சனம்'. இதனைக் கவனித்த, இவ்வளவு நாளும் போர்க்காலத்தில் எல்லாம் தன் நிலத்தை விட்டு அகலாத சிறீமான் பொதுஜனம் ஒன்று மடத்துவாசல் பிள்ளையாரடியில் வைத்து இப்படிச் சொன்னது தன் நண்பரிடம் 'டோய் மச்சான்! வெளிநாட்டுச் சனம் நிறை ஞ்சு போச்சு இப்ப , பேசாம நாங்கள் இந்த இடத்தை விட்டு இடம்பெயரவேணுமடாப்பா'

அடுத்த கோள் மூட்டலில் செல்வச் சந்நிதியானுடன் சந்திக்கிறேன்..




Experienced Expertise
only a phone call away

One-off specific instructions are welcome, You can keep your own accounts, but we can provide extra help to tackle problems with Inland Revenue and Customs & Excise.

We are specialists in solving Tax Investigations, Negotiations & Settlements.

- Tax Solutions
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation

- Chartered Accountants & Registered Auditors
- Accountancy / Audit / Business Startup & Consultancy
- Solicitors Rules Audit

- IT Solutions Supply
- Install, Advice / Train & Support
- IRIS, SAGE, MYOB, DELL
- **up to 40% discount** on retail prices

- Licensed Insolvency Practice, Liquidation and for all insolvency advice

For FREE initial consultations, contact: **David Beckwith, Sabia Sahota** or **Ananthan Arnold**

**BBK Partnership**
Chartered Accountants & Business Strategic Solutions

1 Beauchamp Court, Victors Way, Barnet, Herts EN5 5TZ
Telephone: **020 8216 2520** Fax: **020 8216 2521**
Web: **www.bbkca.com**

# ஓராயிரம் ஆரியவதிகளும்... ஒரு லட்சம் வன்னிப் பெண்களும்



கருணையும் கண்ணீரும் கூட அதிகாரம் அனுமதிக்கிற வரைதான். கண்ணீருக்கும், கருணைக்கும், நீதிக்கும் தன் எல்லை எது வரை என்பது தெரியும். எங்கே பாய வேண்டும் எங்கே பதுங்க வேண்டும் என்பதும் தெரியும். அது தெரியாமல் போனால் நீங்கள் ஆரியவதிக்காக மட்டுமல்ல வன்னி செல்வீச்சில் கருவோடு சேர்த்து கொல்லப்பட்டாளே ஒரு தாய் அவளுக்காகவும் போராட வேண்டும். இந்த கருணையும் நீதி கோரலும் நெருப்பு போன்ற ஒளியை அந்த மக்களுக்காக ஏற்றும் என்றால் அது மட்டுமே அறம்.

ஆரியவதிக்காகக் கோரும் நீதியின் மூலம் நாம் நிறுவ நினைக்கும் ஜனநாயகம் எல்லோருக்குமானதாக மாற வேண்டும். அந்த ஏழையின் உடம்பில் ஏற்றப்பட்ட ஆணிகளைப் போல பல நூறு துப்பாக்கிக் குண்டுகளை உடலில் சுமந்தபடி வன்னிப் பெண்கள், குழந்தைகள் அலைகிறார்கள். அவைகளை எப்போது நாம் அப்புறப்படுத்தப் போகிறோம். ஆரியவதி மீது ஏற்றப்பட்ட வர்க்கத் திமிர் ஆணிகளை அகற்றக் கோரும் நமது குரல்கள் வன்னியின் மீது ஏற்றப்பட்ட ஆணிகளை அகற்றக் கோரினால் அதை எங்கள் உள்ளூர் எஜமானர்கள் அனுமதிப்பார்களா?

தென்னிலங்கையின் உடதெனிய எனும் இடத்தை பிறப்பிடமாகக் கொண்டவர் ஆரியவதி வயது 49. மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த ஆரியவதி சவுதியில் வீட்டுவேலைக்காகச் செல்கிறார். கடந்த மார்ச் மாதம் 25-ஆம் திகதி சவுதி புறப்பட்டுச் சென்ற ஆரியவதி இம்மாதம் 21-ஆம் திகதி கொழும்பு திரும்பியிருக்கிறார் உடலில் 23 ஆணிகளுடன். சவுதியில் ரியாத் நகரத்தில் இருந்த எஜமானரின் வீட்டில் 5 பிள்ளைகளுக்கும் பணிவிடை செய்து வீட்டை சுத்தமாக பராமரித்து, உடுதுணி துவைத்து, கார் கழுவி, கக்கூஸ் கழுவி, தரையை துடைத்துப் பளபளப்பாக்கி, என எல்லா வேலைக்காரிகளும் நகர்ப்புற ஆண்டை வீட்டில் என்ன செய்வார்களோ அதுவே ஆரியவதிக்கும் நடந்தது.

மூன்றாம் உலக நாடுகளில் உள்ள பெண்களின் வறுமையப் பயன்படுத்திக் கொள்ளும் வளைகுடா எஜமானர்கள் வீட்டுவேலைக்கு, லாய வேலைக்கு, மருத்துவமனை சுத்தப்படுத்தும் வேலைக்கு என்று எடுத்துக் கொள்கிறார்கள். பெரும்பலான மூன்றாம உலக நாட்டுப் பெண்களின் பாலியல் உரிமைகள் அங்கே பறிக்கப்படுகின்றன. பல நேரங்களில் சில முதிய ஷேக்குகள் இளம் இந்தியச் சிறுமிகளை திருமணம் செய்து கடத்திச் செல்வதையொத்த சித்திரவதைகளும் உண்டு. வறுமை, அந்நிய தேசம், முற்றிலும் புதிய கலாசாரம், பிள்ளைகளை, கணவனை பிரிந்த ஏக்கம் என இதை எல்லாம் விட சென்ற உடனேயே பாஸ்போட்டை பிடுங்கி வைத்துக் கொள்ளுதல் என எந்த வகையில் நோக்கினாலும் இந்த கொடூர சுரண்டல் வடிவத்திற்கு அதிகம் பலியாவது மூன்றாம் உலகப் பெண்கள்தான். ஆனால் இம்மாதிரியான சித்திரவதைகள் நடப்பது பிழைக்கப் போன அந்நிய தேசத்தில் என்பதால் நமக்கு பதட்டமும் கோபமும் தொற்றிக் கொள்கிறது.

சென்னை, கொழும்பு, மும்பை, பெங்களூர் போன்ற நகர்புறங்களில் எங்கள் கிராமத்துக் குழந்தைகளைக் கொண்டு வந்து எஜமானிகளின் மேனி அழகைப் பேண ஏவல் நாய்களாக வைத்திருக்க வில்லையா? உங்களின் குழந்தை கான்வென்ட் செல்ல எங்கள் குழந்தை புத்தக மூட்டையைச் சுமக்கவில்லையா? இது வேலைக்காரி, இது வேலைக்காரியின் மகள் என்று வெளியில் சென்றால் வித்தியாசம் தெரியும் படி எங்கள் குழந்தைகளின் தலைகள் பரட்டையாக இருக்கும் படி நீங்கள் பார்த்துக் கொள்ளவில்லையா? ஆமாம் ஆணியேற்றப்பட்ட ஆரியவதிகளை விட ஆணியேற்றப்பட்டு தப்பிவிட முடியாத படி கொலைக் களத்தில் தொங்கவிடப்பட்டுள்ள ஆரியவதிகள் மீது சாத்தப்பட்டுள்ள ஆணிகள் பிடுங்கப்பட வேண்டுமா இல்லையா? ஆமாம் எல்லா ஆணிகளும் பிடுங்கப்பட வேண்டும். அது ஆரியவதியாக இருந்தாலும் வன்னிப் பெண்களாக இருந்தாலும், திருப்பூரில் சுமங்கலித் திட்டத்தில் அடிக்கப்பட்டிருக்கும் பெண்களாக இருந்தாலும் ஆணிகள் எல்லாம் ஒன்றுதான். சில ஆணிகள் ஸ்கேன் செய்தால் தெரிந்து விடுகிறது பல ஆணிகள் ஸ்கேன் செய்தாலும் தெரிவதில்லை. அல்லது சில ஆணிகள் குறித்து நாம் பேசுவதில்லை. ஆணிகளை பேரினவாத அதிகாரம் மறைத்திருக்கிறது.

கடந்த 21-ஆம் தேதி நாடு திரும்பிய ஆரியவதி குறித்த உலுக்கும் கதைகளை எல்லா சிங்கள ஊடகங்களும் முக்கியமாக வெளியிட்டன. பௌத்த பிக்குமார்கள் ஆரியவதிக்கு நடந்ததை நாட்டின் கௌரவப் பிரச்சனையாக்கினார்கள். கொழும்பில் சிங்களர்கள் வீட்டில் மலைநாட்டுப் பணிப்பெண்களை வீட்டு வேலைக்கு வைக்கக் கூடாது என்று மலைநாட்டுப் பெண்களுக்கு எதிராக இயக்கம் எடுத்தவர்களின் வாரிசுகள் ஒரு ஏழை பணிப் பெண்ணுக்காக தெருவுக்கு வந்தார்கள். கண்ணிமையில் எத்தனை ஆணிகள், கையில் எத்தனை ஆணிகள், காலில் எத்தனை ஆணிகள் என்று எண்ணிக்கையை சரியாகவேச் சொல்கிறார்கள்.

இனி ஆரியவதியின் உடலில் இருந்து எடுக்க முடியாத ஆணிகள் பற்றி மருத்துவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதும் அதன் ஒரு பாகம். சவூதி அரேபியத் தூதரகம் முன்னால் போராட்டம். பெண்கள் வீர முழக்கங்களை இட்டார்கள். அவர்களோடு பிக்குமாரும் பெண்ணின் கௌவரத்திற்காக வந்து போராடினார்கள். தூதகரம் மூலமாக எடுத்த முயர்ச்சியில் அந்த எஜமானர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊர்ஜிதமாகாத தகவல்கள் தெரிவிக்கின்றன.



அது உண்மையோ பொய்யோ தெரியாது. ஆனால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுநிச்சயம் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவர்கள் தான் அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் ஆரியவதியின் உடலில் ஆணியேற்றியவர் மீதான கைது நடவடிக்கை எங்கே பிறக்கிறது என்றால் ஆரியவதிக்காக உரிமைக்குரல்கள் எழுப்பியதால்தான். இந்த உரிமைக்குரல்கள் எழுப்பப்படாமல் போயிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பதோடு இந்தியாவிலிருந்தோ, பாகிஸ்தானில் இருந்தோ பங்களாதேஷில் இருந்தோ சில பத்து ஆரியவதிகளை இறக்கி ஆணியடிப்பது அந்த வர்க்கத்திற்கு ஒன்றும் முடியாத காரியமல்ல. ஆக ஆணிக்கு எதிராக எழுந்த குரல்களை வரவேற்கிற அதே நேரம் வன்னிப் பெண்கள் மீது ஏற்றப்பட்டுள்ள ஆணிகளுக்காக ஏன் எழுவதில்லை. அல்லது அழுவதில்லை என்பதே எனது கேள்வி.

போர் முடிவுக்கு வந்த காலத்தில் இரு யானைக்குட்டிகளுக்காக சிங்கள ஊடகங்கள் அழுததை போர் முடிவுக்கு வந்த காலத்தில் கண்டேன். தலதா மாளிகையின் பௌத்த மத வைபவங்களில் பயன்படுத்துவதற்கு கொம்பன் யானைகள் போதாமல் இருப்பதால் சிறு பிராயத்தில் இருந்தே பயிற்சியளித்து வளர்ப்பதற்காக இரு குட்டி யானைகளை பின்னவல யானைகள் சரணாலயத்தில் இருந்து தாயிடம் இருந்து பிரித்தெடுத்துக் கொண்டு வந்து விட்டதாக சிங்கள ஊடகங்கள் தலையங்கம் எழுதின. மூன்று வயதைக் கூட கடக்காத பால்குடி மறவாத அந்தக் குட்டிகளுக்காக மிருக ஆர்வலர்கள் கண்ணீர் விட்டார்கள். மனித உரிமை ஆர்வலர்கள் குட்டி யானைகளின் உரிமை குறித்துக் கசிந்தார்கள். தாயின் அரவணைப்பு இல்லாமல் ஏங்கிய அந்த இரண்டு குழந்தைகளும் தாயிடம் சேர்க்கப்பட்டன. போராட்டங்களால் அது சாத்தியமானது பேரினவாதிகளின் மனதை அது கரைத்தது. இந்த யானைக் குட்டிகளிடம் காட்டிய இரக்கம் ஏன் கொழும்பு மனித உரிமை ஆர்வலர்களுக்கு மக்களிடம் இல்லாமல் போனது?

ஆக இரக்கம், கருணை, கோபம், போராட்டம், எல்லாமே இன்றைய இலங்கையில் அதிகாரத்திற்குட்பட்டதுதான். அது தன் எல்லையைத் தாண்ட மறுக்கிறது. வடக்கிலும் கிழக்கிலுமாக 89,000 விதவைகள் இருக்கிறார்கள் என்கிறது அரசு. இது ஒரு உத்தேச மதிப்பீடுதான். சுமார் ஒரு லட்சத்திற்கும் அதிகமான விதவைகள் தமிழ் பகுதியில் இருக்கக் கூடும். அவர்களின் பிள்ளைகளை, கணவனை காலம் முழுக்க அவர்கள் தேடிக் கொண்டிருக்க வேண்டும்,

வாழ்வின் ஒட்டு மொத்த சேமிப்புகளையும் இழந்து விட்டார்கள், அவர்களிடம் எதுவுமே இல்லை, கொலையுண்ட மக்களுக்காகப் பேசுவதா? கொலைகாரர்களை தண்டிக்கக் கோருவதா? அல்லது பாதியில் விட்ட ஈழத்திற்காகப் பேசுவதா? என ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும் இந்த விஷயங்கள் குறித்து பேசுவதையே இன்று கூச்சலாகப் பிரகடனப்படுத்துகிறார்கள்.

ஏதோ வன்னி மக்களை நாமே கொலை செய்து கொன்று புதைத்தது போலவும். அவர்களை நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தி நாடற்றவர்களாக்கியது நாம்தான் என்பது போலவும் பேசுகிறார்கள் கே.பியில் தொடங்கி தமிழகத்தின் பல முற்போக்கு அறிவு ஜீவிகளும் இதையே வாந்தி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சிலரின் அறிவும் அதன் மேதமையும் எவ்வளவு வன்முறையானது, ஆபசாமானது, வக்கிரமானது? என்பதை நான் ஈழ விஷயத்தில்தான் கண்டேன். கருணை, இரக்கம், நெகிழ்சித்தன்மை, இவைகளை தந்திரமான வடிவங்களைக் கொண்டு பின்னி விட முடியும். எச்சரிக்கையாக இல்லாது போனால் நாம் அடைய விரும்பும் கருணை ஒளிவட்டம் நம்மை குருதியில் கை நனைக்கச் செய்து விடும் ஆபத்துக் கொண்டது.

பௌத்த மேலாதிக்க சிங்கள பாசிஸ்டுகளுக்கு எதிராக ஒரு துரும்பையேனும் கிள்ளிப் போடாத இவர்கள் 'போராடும் சக்திகளை குற்ற உணர்ச்சிக்குள்ளாக்குகிறார்கள். போராடும் சக்திகளாக தங்களை காட்டிக் கொள்கிற தேசியவாதிகளோ தங்களை சுய பரிசோதனைக்குள்ளாக்கத் தயாரில்லை வெட்டி வீரமரபும், சேர, சோழ, பாண்டிய அபத்தங்களுமே அவர்களுக்குப் போதுமானதாக இருக்கிறது.

- ஏழிலன்


## Vacancy!.. Vacancy!

An Immigration Law Firm in South west London specialising in Sri Lankan Tamil asylum cases is looking for full time Administrator preferable female, who is bilingual (Tamil & English). A Degree level qualification and additional foreign language is advantageous.

We are also looking for an Immigration Caseworkers/Trainee Lawyer. UK Law Degree essential, LPC/BVC is desirable and would be an advantage

Contact : 020 8544 9285



# "Who wants to portray the boat people as a security threat?"



By Gordon Weiss

The Globe and Mail

The Tigers are history and Sri Lanka's ethnic minority remains under the government's thumb. Think about it – who wants to portray the boat people as a security threat?

As the debate about Tamil boat people plays out, Canadians might ask themselves, "In whose interest?" Who has muddied the debate with suggestions that the boats are filled with criminals and terrorists, and why? Again, why all the fuss over an insignificant number of people, when Canada does not have a boat-people problem of the magnitude of Australia's? Government of Sri Lanka warnings that Tamil boat people are a threat to Canada's interests are calculated to provoke the kind of public response seen in recent weeks.

Canadians are right to be concerned about the security of their borders. Globalized terrorism is a threat to Canadians, as it is to Australians. And national identities are a precious commodity. In an unsteady world, and with a rising backlash in Europe directed at Muslim immigration, both Canadian and Australian governments are obliged to soothe these concerns, with measured immigration and refugee intakes. Both countries need strong border protection policies that deter human smuggling and provide a sense of security to their citizens. Somehow a balance must be struck with our international obligations. That is all the more reason why Canadians must resist letting the debate become confused by wild claims.

Sri Lankan government officials and self-proclaimed experts played the understandable worries of Australians like a fiddle as boats neared their shores. Australians were told that these were economic migrants, taking advantage of their country's generosity and slack intake laws – in fact, among the toughest in the world. Sri Lankan diplomatic representatives asserted that those on board had terrorist links. Finally, the plainly unfounded claim was made that fully half were terrorists and criminals. Actually, nobody knew who was on board, why they were there or who was behind these voyages.

Let's be clear: The Tamil Tigers were a menace, and there is reason for sensible precaution. In the 1990s, they set the pace for globalizing terrorist networks. In countries such as Canada, they provided seed money for legitimate businesses, and then skimmed the profits. They packaged arms deals, and maximized their purchases by selling onward to other insurgent and terrorist groups in places like the Horn of Africa. They cleverly exploited that least governed of places, the ocean, purchasing a fleet of a dozen merchant ships with which they collected and delivered those arms. The profits were used to buy more weapons, communications equipment and industrial machinery for their own nascent village-based arms industry. They manufactured rudimentary submarines and attack boats, and converted Czech-made leisure planes into an air force of sorts.

During three decades of insurgency, millions of ordinary Sri Lankans lived in fear that they might be caught up in the violence. But what of the experts' suggestion that the Tamil Tigers were linked to al-Qaeda?

As Michael Ignatieff says of the troublesome "terrorist" word, the equally fuzzy "link" word ought to be banned from the fraught boat-people debate. It is a word better suited to tabloids and gossip columns. True, in the late 1970s, a handful of Tamils trained with Palestinian factions in Lebanon. But "links" to al-Qaeda look rather shaky if one considers that every other terrorist group was there at the same time. The IRA was there, and Gerry Adams is not "linked" to al-Qaeda.

**Apart from all that, should Canadians consider the Tamil Tigers a threat to their own security today? The answer is no.** Aside from the 1991 assassination of Indian prime minister Rajiv Gandhi, their violence was shrewdly confined to Sri Lanka. The Tamil Tigers were a textbook insurgent group that resorted to terrorist tactics. Like the Kurds, Palestinians, Irish Catholics, the Karen of Burma or the Uighurs of China, the Tamils harboured a grievance born of both perceived and actual injustices. The Tigers mobilized those grievances into a broad-based revolution against the Sri Lankan state.

*The basis of their gripes is a no-brainer.* In 1956, the Sinhalese-dominated government made Sinhala the official language. Tamil passports, degrees, legal judgments and land titles were issued in a language they could not understand. In 1972, the government further marginalized Hindu Tamils by making Buddhism the state religion. That same year, the government introduced legislation that discriminated against Tamil entry to university. In 1983, an orchestrated pogrom killed between 2,000 and 3,000 Tamils, and burned tens of thousands of others out of their homes and businesses. Over the following year, the Tigers grew from a rag-tag team of 50 men into an army of thousands.

For years, few people across the world took much notice of the remote war that followed the pogrom in Sri Lanka. In October, 2001, the United States, concerned about the murky and poorly understood cross-pollination among terrorist organizations, finally began to crack down on Tamil Tiger fundraising activities on U.S. soil. **They had not bothered much before, and did not consider them a threat to American interests.** But with the global war on terror afoot, it seemed a bit rich to ignore the terrorist problem of one country, while asking them to take the U.S. war seriously.

In May, 2009, through a confluence of good management, foreign assistance and a series of Tiger strategic errors, the insurgents were crushed by the dogged brawn of the army of Sri Lanka. Their leader, Velupillai Prabhakaran, was killed, and the population they had controlled for almost two decades rounded up. Tiger territory was subsumed once more into the Sri Lankan state. A few months later, a dazed Kumaran Pathmanathan, the kingpin of the Tigers' global finance operation, was caught. The government and its military leaders boasted that the highly centralized organization was finished. Nobody seriously believes that the Tamil Tigers are a threat any more.

By late 2009, 50 boats had been intercepted by Australian customs. In that bumper year, around 3,500 refugees made the perilous journey, and arrived safely. Even at that rate, the Australian prime minister conceded that it would take 20 years to fill Australia's largest sports stadium with boat people. Of the Tamils who made it, spurious claims of terrorism, criminality and association with al-Qaeda were levelled, similar to allegations made in Canada.

Guided by its international legal obligations, Australia does not grant refugee status if it believes that a person has committed serious crimes. The vast majority were recognized by Australia as refugees, based on UN Refugee Agency guidelines and the UN Refugee Convention. A handful of arrivals were rejected by the Australian Security Intelligence Organization, the equivalent of Canada's CSIS. To date, nobody knows why. It later emerged that ASIO hadn't bothered to interview those who were rejected, so it seems likely (and odd, under the circumstances) that they largely relied on information provided by the Sri Lankan government. Of course, the defining feature of a refugee is that they have a well-founded reason to fear persecution back home.


Persecuted by whom? By the same people who are trying to dupe Canadians into turning the boats back. Sri Lanka is now one of the most highly militarized societies in Asia – quite a claim to fame if one considers China, Burma and Pakistan. It also features on lists of societies that kill their journalists and humanitarian workers. It manages public dissent and supplements law enforcement with death squads. The UN is currently reviewing 5,749 cases of Sri Lanka's "disappeared." The UN has also called for a meaningful inquiry into allegations that thousands of civilians perished in the final months of the war. The government says that it did not spill a drop of civilian blood.

Will things improve? We don't know yet. Fifteen months after the war's end, and with an electoral victory under his belt, there is no serious effort from President Mahinda Rajapaksa to remedy Tamil grievances with a political solution. Although the nastiest of the bloodletting has slowed, Sri Lanka remains a land of low-level repression where men in white vans snatch people curbside. Louise Arbour, now president of the International Crisis Group, says that a fig-leaf government inquiry into accusations that it did spill quite a lot of civilian blood is "bound to fail" because of the government's long history "of denial and impunity."


Recently vanquished, and with hundreds of thousands accused of "links" with the Tamil Tiger cause, many Tamils have a well-founded fear of persecution. It is precisely these types of people who reached Australia by boat, whose claims were ultimately vindicated and who are now settling in, grateful for sanctuary. As for whether the families who arrived in Canada this month were products of a smuggling racket or have jumped a queue, the Canadian interest is to keep an open mind, and to resist a vital debate being hijacked by foreign agendas.

*Gordon Weiss is a former senior UN official in Sri Lanka and author of the forthcoming The Cage: The Fight for Sri Lanka and the Last Days of the Tamil Tigers.*



# Tamils for Obama to Supreme Court: Can the U.S. Arrest Rajapaksa?





Tamils for Obama, a political group of American Tamils, wrote to Chief Justice of the Supreme Court John Roberts asking for his opinion on whether Mahinda Rajapaksa (president of Sri Lanka and possible author of crimes committed during the recent Sri Lankan civil war) can be arrested as he travels through the U.S. this fall.

"The United States has arrested and deported accused war criminals in the past," explained a spokesman for the Tamil American group. "Our country arrested accused Nazis decades after the crimes they were supposed to have committed took place, so this is not unprecedented.

"We guess that this is different because the accusations come from international civilian organizations--the International Crisis Group, Amnesty International, Human Rights Watch, and so forth--rather than courts of law. They say that there is plenty of evidence that Sri Lankan government forces, which were ultimately commanded by President Rajapaksa, committed what would probably be considered war crimes.

"The international organizations mention the government's intentional shelling of civilian refugees in protected areas, intentional shelling of hospitals, and violent actions against humanitarian organizations," the spokesman said. "Those would be war crimes by almost anybody's definition."

The spokesman also said that "There was also evidence of execution without trial of prisoners. The evidence hasn't been tested by any court yet, but we hope an American court will be willing to look at it."

"We also noted that the U.S. and NATO intervened when there were reports of atrocities being committed in Bosnia," the spokesman added. "Armed intervention is at least as serious as legal intervention, or so we think.

"We know we are not legal experts," said the Tamils for Obama spokesman. "Our letter to Chief Justice Roberts is to ask his opinion. This is a complicated matter, so we know that high-level legal knowledge is required. We hoped that Mr. Roberts would share his thoughts with us."

"We also hope this matter will become something for public discussion. If we can get lawyers and judges talking about it, we think that this is a step in the right direction."

The spokesman mentioned that similar letters had been sent to U.S. Attorney General Eric Holder and Acting Solicitor General Neal Katyal, New York State Attorney General Andrew Cuomo, Senator Patrick Leahy (Chairman of the Senate Judiciary Committee) and the other eight Supreme Court justices.

Tamils for Obama's letter to Chief Justice Roberts concluded with web links to accounts of President Rajapaksa's war time behavior.

# Sri Lanka's trade deficit widens over 100 percent in first half of 2010



Sri Lanka's expenditure on imports surpassed the earnings from exports widening the trade deficit by 108.6 percent in the first half of 2010 to US$ 2.844 billion, figures released today by Economic Research Department of Sri Lanka's Central Bank showed.

Cumulative export earnings over the first six months of 2010 grew only 13.7 percent while expenditure on imports rose by 42.1 percent, the External Sector Performance report released today for June 2010 showed.

Higher earnings from the industrial and agricultural exports contributed to a 23 percent growth in export earnings of US$ 697 million in June 2010 but expenditure in all major categories of imports also increased by 32 percent to US$ dollars 1.114 million.

Exports of apparel and rubber products to US and European markets increased the export earnings in June.

Earnings from textiles and garments exports increased by 24 percent to US$ 305 million in June and exports to the United States increased by 34 percent while 8 percent increase was recorded for the European Union.

The European Union withdrew its GSP+ tariff concession to Sri Lanka from August 15. The move is expected to reduce the export earnings from Europe in the months to come.

According to the Central Bank earnings from exports of rubber products increased by 110 percent to US$ 52 million while earnings from agricultural exports, especially in tea exports accounted for 24 percent of export earnings in June 2010.

The rise in crude oil prices has contributed significantly to the increase in expenditure of imports.

The reduction in import duties on motor vehicles and electronic items by the government has lifted the import volumes of these items contributing to the expenditure on consumer goods.

Workers' remittances grew by 13.54 percent in the first half of 2010 over the same period last year bringing in US$ 1.82 billion.


Ariana Travel

ARIANATRAVEL LTD

Book with us and travel with confidence!!!



- Flight Bookings
- Hotels Bookings
- Car Hirings
- Trains Bookings
- Ferry Booking
- Private Jet Charter
- Business Travel Insurance
- Travel Consultancy
- Passport & Visa Service
- Foreign Currency
- Flying Messenger
- Flight Status
- VIP Lounges
- Western Union

- NEW YORK with BRITISH AIRWAYS
GBP 435.00 Inclusive of taxes
mid week travel
01st jan - 31st mar 2011

- BANGALORE with QATAR AIRWAYS
GBP 430.00 Inclusive of taxes
from MANCHESTER AIRPORT
16TH AUG - 09TH DEC 2010

- COLOMBO with QATAR AIRWAYS
GBP 495.00 Inclusive of taxes
from HEATHROW AIRPORT
24TH DEC 2010 - 30TH JUNE 2011
Has to be ticketed by 30th sep 2010

- COLOMBO with GULF AIR
GBP 415.00 All inclusive of taxes for
TRAVEL BETWEEN 05TH OCT 2010 TO 30TH NOV 2010
Has to be ticketed by 30TH SEPTEMBER 2010

- Qatar Airways
- Emirates Aiways
- Virgin Atlantic
- Sri Lankan Airlines
- Air france
- Ariana Afghana Airlines
- Pamir Airways
- Safi Airways
- Kam Air many other Airlines

அழையுங்கள்

IATA

தரமான சேவையைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...!!

PROTECTED

THORNTON HEATH BRANCH
No. 904, London Road,
Thornton Heath, CR7 7PE
Tel : 0208 683 6960
மேலதிக விபரங்களுக்கு ஷங்கரைத் தொடர்பு கொள்ளவும்.
Shankar@arianatravel.uk.com
book.cr@arianatravel.co.uk

Please call us for special fares to colombo

- FLY TO BANGKOK or SINGAPORE or KUALA LUMPUR with SRI LANKAN AIR LINES from GBP 320.00 PLUS TAXES
- FLY TO CHENNAI or MUMBAI or DELHI or THIRUVANANTHAPURAM or TIRUCHIRAPALLY with SRI LANKAN AIR LINES from GBP 320.00 PLUS TAXES

Branches in Southall, Hounslow & Birmingham

Valid for travel 15TH SEP 2010 TO 30TH NOV 2010, 30TH DEC 2010 TO 06TH APR 2011 & 24TH APR 2011 TO 30TH JUN 2011

# KIDS பேப்பர்

## THE STORY OF RAVANAN AND RAMAN

**Part 4**

***Abduction of Seethai***

Ravanann the king of Lanka had a sister named Surpanakai who lived in Panchavati. Ravanann who lived in Lanka was then the most powerful king. One day Surpanakai happened to see Raman and instantly fell in love with him. She wanted Raman to be her husband.

Raman was amused, and jokingly said, "As you see I am already married. You can request Lakshmanan. He is young, handsome and is alone without his wife." Surpanakai took Raman's word seriously and approached Lakshmanan. Lakshmanan said, "I am Raman's servant. You should marry my master and not me, the servant."

Surpanakai got furious with the rejection and attacked Seethai. Lakshmanan swiftly intervened, and cut off her nose with his dagger. Surpanakai ran away with her bleeding nose, crying in pain. Surpanakai was terror stricken. She immediately flew to Lanka to seek her brother Ravanan's protection. Ravanan was outraged to see her sister mutilated. Surpanakai described all that happened. Ravanan became interested when he heard that Seethai was the most beautiful woman in the world. Ravanan decided to abduct Seethai. Raman loved Seethai very much and could not live without her.

Ravanan made a plan and went to see Mareesan. Mareesan had the power of changing himself into any form he wanted along with the appropriate voice imitation. But Mareesan was afraid of Raman. He still could not get over the experience he had when Raman shot an arrow that hurled him far into the sea. This happened in Vashishtha's hermitage. Mareesan tried to persuade Ravanan to stay away from Raman but Ravanan was determined.

"Mareesan!" shouted Ravanan, "You have only two choices, help me to carry out my plan or prepare for death." Mareesan preferred to die in Raman's hand than be killed by Ravanan. So he agreed to help Ravanan in the abduction of Seethai.

Mareesan took the form of a beautiful golden deer and began to graze near Raman's cottage in Panchavati. Seethai was attracted towards the golden deer and requested Raman to get the golden deer for her. Lakshmanan warned that the golden deer may be a demon in disguise. By then Raman already started to chase the deer. He hurriedly instructed Lakshmanan to look after Seethai and ran after the deer. Very soon Raman realized that the deer is not a real one. He shot an arrow which hit the deer and Mareesan was exposed.

Before dying, Mareesan imitated Ram's voice and shouted, "Oh Lakshmana! Oh Seethai,! Help! Help!"

Seethai heard the voice and asked Lakshmanan to run and rescue Raman. Lakshmanan was confident that Raman was invincible and that the voice was only a fake. He tried to convince Seethai but she insisted. Finally Lakshmanan agreed. Before his departure, he drew a magic circle, with the tip of his arrow, around the cottage and asked her not to cross the line.

"As long as you stay within the circle you will be safe with the grace of God" said Lakshmanan and hurriedly left in search of Raman.

From his hiding place Ravanan was watching all that was happening. He was glad that his trick worked. As soon as he found Seethai alone, he disguised himself as a hermit and came near Seethai's cottage. He stood beyond the protection line of Lakshmanan, and asked for alms. Seethai came out with a bowl full of rice to offer to the holy man, while staying within the protection line drawn by Lakshmanan. The hermit asked her to come near and offer. Seethai was unwilling to cross the line when Ravanan pretended to leave the place without alms. As Seethai did not want to annoy the sage, she crossed the line to offer the alms.

Ravanan did not lose the opportunity. He quickly pounced on Seethai and seized her hands, declaring, " I am Ravanan, the king of Lanka. Come with me and be my queen." Very soon Ravanan's chariot left the ground and flew over the clouds on the way to Lanka.

Raman felt distressed when he saw Lakshmanan. "Why did you leave Seethai alone? The golden deer was Mareesan in disguise. "

Lakshman tried to explain the situation when both the brothers suspected a foul play and ran towards the cottage. The cottage was empty, as they feared. They searched, and called out her name but all in vain. Finally they were exhausted. Lakshmanan tried to console Raman as best as he could. Suddenly they heard a cry. They ran towards the source and found a wounded eagle lying at the floor. It was Jatayu, the king of eagles and a friend of Dasharathan.

Jatayu narrated with great pain, "I saw Ravanan abducting Seethai. I attacked him when Ravanan cut my wing and made me helpless. Then he flew towards the south." After saying this, Jatayu died on the lap of Raman. Raman and Lakshmanan burried Jatayu and then moved towards the south.

*(Will be continued in next issue)*

## Jokes

Why did the boy bring a ladder to school?
**He thought it was a high school!**

What do you call a pig with three eyes?
**A piiig**

What starts with T, ends with T and is full of T?
**A teapot**

What travels around the world and stays in a corner?
**A stamp.**

Who earns a living by driving his customers away?
**A taxi-driver.**

Nicole: Today my teacher yelled at me for something I didn't do.
**Amelia: What was that?**
Nicole: My homework!

What runs around a farm but doesn't move?
**A fence.**

What do cars, trees, and elephants all have in common?
**They all have trunks.**

What makes a chess player happy?
**Taking a knight off.**

What kind of driver never gets a speeding ticket?
**A screwdriver.**


## Riddles

1. What goes up and down stairs without moving?
2. Give it food and it will live; give it water and it will die.
3. What can you catch but not throw?
4. I run, yet I have no legs. What am I?
5. Take one out and scratch my head, I am now black but once was red.
6. Remove the outside, cook the inside, eat the outside, throw away the inside.
7. What goes around the world and stays in a corner?
8. What gets wetter the more it dries?
9. The more there is, the less you see.
10. They come at night without being called and are lost in the day without being stolen.

Answers


1. Carpet 2. Fire 3. A cold 4. A nose 5. A match 6. Corn 7. A stamp 8. Towel 9. Darkness 10. Stars

## Colouring



Why not enter our colouring competition? Simply colour me in and send it to *ORU PAPER* and you could be the lucky winner of a water colouring kit.

The winner will be published in the next issue.



## Word Search

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| A | R | S | K | U | M | B | A | M | M |
| S | R | D | V | I | L | A | K | U | V |
| U | F | T | P | O | N | G | A | L | N |
| N | G | E | Q | Y | Z | A | I | U | W |
| D | S | O | M | H | I | B | N | J | E |
| A | U | O | A | K | P | C | X | T | U |
| L | K | A | A | U | R | S | O | P | C |
| X | T | U | L | D | K | L | M | R | D |
| V | F | T | A | A | N | G | U | F | U |
| N | B | R | I | M | A | I | N | W | S |

**Hidden Words:**

**Subject: Tamil Festival Items**

SUNDAL, PONGAL, MAALAI, KUDAM, VILAKU, KUMBAM

**Submitted by:**

***By: Kaarthikayini Sivanesan (Age 6) (Lewisham)***

நீங்கள் இரத்தம் சிந்தி உழைக்கிறீர்கள் என்பது எமக்குத் தெரியும்

உழைத்தவற்றை ஊருக்கும் உறவுக்கும் கொடுத்து களைத்தீர்கள் என்பதும் எமக்குத் தெரியும்

ஒரு நாளில் உங்களுக்கு ஓய்வாகக் கிடைப்பது ஒண்டு ரெண்டு மணித்தியாலங்களே!

இதற்கு அதிகம் செலவழித்து தமிழ்த் தொலைக்காட்சிகளை பார்க்க முடியாது என்பதும் தெரியும்.

ஒரே ஒரு வழிதான் உங்களுக்கு உண்டு

சீவியம் முழுக்க உங்களால் பார்க்க முடிந்த தொலைக்காட்சிகளை பார்த்து மகிழ்ந்திட

அழையுங்கள்

# 020 7183 0367








**புதிய சட்டிலைட்**

**இணைப்புகளுக்கும் அழையுங்கள்**

இந்தப் பொட்டியின் தார்ப்பரியத்தை ஐரோப்பிய நாடுகளில் இருக்கும் உங்கள் உறவினர்களிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்.

http://www.nallatv.com

இது ஒரு தமிழ் பெடியங்களின் தயாரிப்பு


Bringing great
food to life...
நிருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND®
உங்கள் வாழ்க்கைச் சக்கரத்தை திறம்பட இயக்கும்!
Niru BRAND®
Quality • Taste • Value
நிருவின் உற்பத்திச் சக்கரம்
Niru BRAND®
உங்கள் நிறை உணவுச் சக்கரத்தை நிறைவடையச் செய்யும்!
www.niru.co.uk
SGS SGS
Produced in our ISO 22000
HACCP Certified Factory
Design by • Aambal Magazine • www.aambal.co.uk

# ஐபிசி தொடர்ந்தும் தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவாகச் செயற்படும் - சத்தி

IBC SATHY MEDIA www.ibctamil.fm T 020 8863 1837

கடந்த பதின்மூன்று வருடமாக லண்டனிலிருந்து இயங்கிவரும் அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் - தமிழ் (ஐ.பி.சி) புதிய நிர்வாகத்தின் கீழ் இப்போது இயங்கி வருகிறது. முன்னர்போல் மத்திய அலை வரிசையில் அது இயங்காவிடினும். எண்ணியில் ஒலிபரப்பு அலைவரிசையிலும் (DAB), செய்மதியூடாகவும் தினமும் இருபத்திநான்கு மணிநேர ஒலிபரப்பினை நடாத்தி வருகிறது.

இப்புதிய நிர்வாகம் தொடர்பான ஐயப்பாடுகள், வதந்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் இதுதொடர்பாக அவர்களின் கருத்தினை அறிந்து கொள்ளும் வகையில், தற்போது ஐபிசி வானொலியை இயக்கிவரும் சத்தி ஊடக நிறுவனத்தின் அதிபர் திரு. சத்தி அவர்களைச் செவ்வி கண்டோம். எமது வினாக்களுக்கு அவர் வழங்கிய பதில்களை இங்கு பிரசுரிக்கிறோம்.

***ஒரு பேப்பர்***: முதலில், ஐபிசி வானொலியின் புதிய நிர்வாகத்திற்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு விடயத்திற்கு வருகிறோம். ஐபிசி ஒரு தேசிய ஊடகமாக, இன்னொரு விதத்தில் சொல்வதானால் ஒரு மக்கள் ஊடகமாக அறியப்பட்ட ஒரு வானொலி. இன்று அது ஒரு தனியார் நிறுவனத்தால் நிர்வகிக்கப் படுகிறது. இந்தக் கைமாற்றத்திற்கு என்ன காரணம்?

**சத்தி:** ஐபிசி ஒருபோதும் மக்கள் ஊடகமாக இருந்ததாக நான் அறியவில்லை. மக்கள் ஊடகம் என்ற பதத்தை முதன் முதலில் இப்போது, சுயநலம் தேடும் சில குழுக்கள் வாயிலாக கேள்விப்படுகின்றேன். உங்கள் கேள்விக்கு எம்.ஜி.ஆர் இன் பாடல் ஒன்று நினைவு வருகின்றது. ( மக்கள் நலம் மக்கள் நலம் என்பார், தம் மக்கள் நலம் ஒன்றேதான் கருத்தில் கொள்வார்) இதனை, மக்கள், மனைவி பெயர்களில் நிறுவனத்தை உருவாக்கி மக்களால் உருவாக்கப்பட்ட மக்கள் வானொலி என்று ஒலிபரப்பும் ஊடகக் குழுவினரிடம் கேட்பதே பொருத்தமானதாய் இருக்கும்.

***ஒரு பேப்பர்***: ஐபிசி வானொலியில் சத்தி ஊடக நிறுவனம் (Sathy Media) அண்மையில் பெரியளவில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாக அறியக் கிடைக்கிறது, இது இலாப நோக்கினாலான ஒரு நடவடிக்கையா?

**சத்தி:** ஐபிசி யில் இலாபம் ஏற்படுமாயின் அது கின்னஸ் புத்தக்கத்தில் பதியப்படும் சாதனையாகவே இருக்கும்

***ஒரு பேப்பர்***: வெளிப்படையாகவே கேட்பதானால் உங்களது வானொலி நிறுவனத்தில் சிறிலங்கா அரசு சார்பு தமிழ் கட்சியொன்று பங்குதாரராக இருப்பதாக பேசப்படுகிறது ... இதுபற்றி?

**சத்தி:** சத்தி மீடியா ஒருபோதும் பங்குதாரர்களை சேர்த்துக் கொண்டதுமில்லை, அவ்வாறான உத்தேசமும் இல்லை.

***ஒரு பேப்பர்***: தமிழ் தேசிய விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கி, அதன் வளர்ச்சிக்கு ஐ.பி.சி தன்னாலான பங்கினை வழங்கி வந்தது. அந்த நிலைப்பாட்டினை தற்போதைய நிர்வாகம் தொடர்ந்து பேணுமா?

**சத்தி:** ஐபிசி வானொலியை தொடர்ந்து செவிமடுங்கள், எமது நேயர்கள் தெளிவாகவே இருக்கின்றார்கள்.

***ஒரு பேப்பர்***: எதிர்காலத்தில் வானொலியினை விருத்தி செய்வது தொடர்பாக என்ன திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்?

**சத்தி:** காலத்திற்கு ஏற்றபடி திட்டங்கள் மேற்கொள்ளப்படும்.

# ஈழத்தமிழர் புனர்வாழ்வுத் திட்டங்கள்

இனப் படுகொலையின் உச்ச நிலையில் தமிழ் மக்கள் மீது போர்தொடுக்கப்பட்டு, பேரழிவுகள் ஏற்பட்டன. இவ்வழிவுகளிலிருந்து மீண்டவர்கள் வாழ்வாதாரங்களை இழந்து தவிக்கிறார்கள்.

இவர்களுக்கு உரிய உதவிகள் சென்றடைவதில்லை என்பது ஒரு புறமிருக்க, எவ்வகையான உதவிகள் தேவைப்படுகின்றன என்பதிலும் தெளிவான தகவல்களைப் பெற முடியாத நிலையே காணப்படுகிறது. இந்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து ***ஒரு பேப்பர்*** ஐ தொடர்பு கொண்ட ஆசிரியரும், ஊடகவியலாளருமான திரு. பொ. ஐங்கரநேசன் அவர்கள் இரு திட்டங்களை முன்வைத்தார். அவற்றை உங்கள் கவனத்திற்கு முன்வைக்கிறோம். இத்திட்டங்களில் பங்குபற்ற விரும்புவர்கள் எம்மைத் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

வளப் பற்றாக்குறையுடன் இயங்கும் ***ஒரு பேப்பர்*** நிறுவனம் இவ்வகையான செயற்திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வது சாத்தியப்படாது என்பதாலும், நாம் நேரடியாக பங்கேற்றுச் செயற்படுவதற்கான இயங்குதளம் அங்கு இல்லாமையாலும், தாயகத்தில் இவ்வகையான திட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கும் புலம்பெயர் தமிழ்மக்களுக்கும் இடையிலான ஒரு இணைப்புப் பாலமாக மட்டுமே ***ஒரு பேப்பர்*** செயற்படும் என்பதனை அறியத் தருகிறோம்.

திட்டம் 1:

வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் கா.பொ.த சாதரண தர பரீட்சைக்கு வன்னியிலிருந்து தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான விசேட வகுப்புகளை நடாத்துதல். யாழ் மாவட்டத்திலிருந்து ஆசிரியர்களைத் தருவித்து கிளிநொச்சியில் இவ்வகுப்புகளை நாடாத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் போக்குவரத்து, தங்குமிடம், மாதிரி பரீட்சை வினாத்தாள்கள், குறிப்புகள் அச்சிடுதல் போன்றவற்றிற்கு பணம் தேவைப்படுகிறது.

ஏற்கனவே லண்டனில் இயங்கும் தனியார் நிறுவனமான International Tamil Students Organisation Limited இவ்வாறான பணிகளில் ஈடுபடுகிறதே என நாம் திரு. ஐங்கரநேசனிடம் வினவியபோது, அவ்வாறான ஒரு நிறுவனத்தை தாம் அறிந்திருக்கவில்லை எனவும், வடக்கில் எந்தவொரு நிறுவனமும் இவ்வாறான பணிகளில் ஈடுபடவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

திட்டம் 2:

'ஒரு பெண்ணுக்குச் நல்ல இன ஆடு ஒன்றை வாங்கிக் கொடுப்பது பயன்மிக்கதாக இருக்கும்.

அந்த ஆடு குட்டி போடும் போது ஒரு குட்டியை இன்னுமொரு குடும்பத்துக்கு வழங்கலாம். இதன் மூலம் இத்திட்டம் சங்கிலித் தொடராக அநேகம் பேரைச் சென்றடையும்.

இதற்கான நல்ல இன ஆடுகளை தேடி வாங்குவது, உரிய பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களிடம் சேர்ப்பிப்பது, இன விருத்தி செய்வது, மற்றும் திட்டத்தைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பது போன்ற பணிகளை என்னால் செவ்வனே நிறைவேற்றித் தரமுடியும்.

நூற்றுக்கு நூறு தூய யமுனாபாரி ஆடு மிக அதிக விலையுடையது. அதே சமயம் வன்னியின் கடினமான காலநிலைக்கு இந்தத் தூய இனம் பொருத்தப்பாடுடையது அல்ல. இலகுவில் நோய்வாய்ப்பட்டுவிடும். மேலும் பராமரிப்பதும் கடினமுமாகும். இதனால் கலப்பு இன யமுனாபாரியே கூடுதல் பொருத்தமுடையது. இதில் நூறு குட்டிகள் வாங்குவதாயின் (தென் இலங்கையில் இருந்தும் பெற நேரிடலாம்) இலங்கைப் பணத்தில் 5 அல்லது 6 இலட்சம் வரை தேவைப்படலாம்.'

இதுபோன்ற திட்டங்களை தன்னார்வ முயற்சியாகச் செய்ய விரும்புவர்கள் விபரங்களை எமக்கு அனுப்பி வைத்தால் அவற்றை பிரசுரிக்க ***ஒரு பேப்பர்*** தயாராகவுள்ளது.


VINCENT SOLICITORS



- ✓ இந்த நாட்டில் பல வருடங்களுக்கு மேல் அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டோருக்கு உத்தரவாதத்துடன் கூடிய நிரந்தர வதிவிட உரிமை பெற்றுத் தரப்படும். (லெஹசி)
- ✓ பலவருடங்களாக உங்கள் விண்ணப்பம் பல்வேறு காரணங்களால் சரியான முறையில் அனுமதிக்கப்படவில்லை என்பதை நாம் நன்கு அறிவோம்.
- ✓ ஆகவே நன்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகள் குழுவினர் தமிழ்பேசும் மக்களுக்கான இலவச ஆலோசனை சேவை வழங்கி வருகின்றனர்.
- ✓ (Legacy) லெஹசி என்பது நிராகரிக்கப்பட்ட உங்கள் அகதி அந்தஸ்து உரிமையை நிரந்தர வதிவிட உரிமையாக பெறுவதற்கான ஒரு ஏற்பாடு என்பதை அறிவோம்.
- ✓ பிரித்தானியா, இலங்கை, பாஸ்போட் விண்ணப்பம் மற்றும் Travel Document விண்ணப்பம்.
- ✓ மாணவர் விசா நீடித்தல் மற்றும் விசா நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தல்
- ✓ PSW, Tier - 1, Tier - 2, Tier - 4 விண்ணப்பங்கள், மற்றும் உறவினர்களை பிரித்தானியாவிற்கு அழைப்பித்தல்
- ✓ பிரித்தானியச் சட்டத்தின் கீழ் திருமணம் செய்வதற்கு அனுமதி பெற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு:

020 8574 0666

11-13 Southall Street, Southall, UB1 1SU

(ஹிமாலயா சினிமா எதிரே)

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்

குறிப்பு : போலி வாக்குறுதிகளை நம்பி ஏமாற வேண்டாம்.

## Tooting முத்துமாரி அம்மன் கோவில் தேர்த் திருவிழா














## கோடை விளையாட்டு விழா






தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுக் கழகம்(ஐ.இ) நடாத்திய பத்தொன் பதாவது கோடை விழையாட்டு விழா கடந்த 30 திகதி இடம்பெற்றது.

வலைப் பந்தாட்டம் கூடைப் பந்தாட்டம் துடுப்பாட்டம் போன்ற விளையாட்டுக்கள் பல்வேறு வயதெல்லைகளில் இடம்பெற்றது. போட்டிகளின் இறுதியில் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வுகளின் போது எடுக்கப் பட்ட படங்களையே காண்கிறீர்கள்



எல்லா உன்னதமான விடயங்களும் எளிமையானவை, ஒரு வார்த்தையில் சொல்லக்கூடியவை - விடுதலை, நேர்மை, நியாயம், கடமை, கருணை, நம்பிக்கை ....

*-வின்ஸ்டன் சேர்ச்சில்*


**A KEY TO WEIGHT LOSS & KEEP FIT**

**A surprisingly easy way to burn fat quickly without an diet or exercise**



Contact : **S.Haria**

**07861 672 963**

காலை உணவின் முன் இரண்டு மாத்திரைகளை எடுக்கவும். இருபது நிமிடங்களின் பின் காலை உணவை உண்ணலாம். ஆனால் உங்களுக்குப் பசி எடுக்காது.

'கொலஸ்ரறோல்' நீரிழிவுப் பிரச்சனையா? தீர்விற்கு எம்மை அணுகவும்.

**Another full supplement available to control your cholestrol and Diabetics**





**Meera Arnold & Co**

*for all your accounting needs...*

Accountancy
Auditing

pay roll

book keeping

company formation

45 Chandos Ave, N14 7ES, Tel: 020 8882 2333

## கற்பகவிநாயகர்ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள்








வோல்தம்ஸ்ரோ அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய கும்பாபிஷேக நிகழ்வுகள் கடந்த இருபத்தி ஐந்தாம் திகதி இடம் பெற்றது நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட படங்களையே காண்கிறீர்கள்.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Sept 12 SUNDAY @ 15:00**

பழைய மாணவர் ஒன்றுகூடல்

பிரித்தானியாவில் வசிக்கும் வித்தியானந்தக் கல்லூரியின் பழைய மாணவர்களின் ஒன்றியத்திற்கான பொதுக்கூட்டத்திற்கும், நிர்வாகத் தெரிவுக்குமான ஒன்றுகூடல்.

நேரம்: மாலை 3:00 மணி

இடம்: 36, Masons Ave, Harrow, HA3 5AR

தொடர்புகளுக்கு: 07538441309

**Sept 12 SUNDAY @ 10:00**

மகோற்சவப் பெருவிழா

வோல்தம்ஸ்ரோ அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய ஒன்பதாவது ஆண்டு வருடாந்த மகோற்சவ நிகழ்வுகள்

இடம்: 2-4 Bedford Road, Walthamstow, London E17 4PX

Contact: 020 8527 3819

**Sept 18 SATURDAY @ 10.30**

Education Exhibition 2010

Indian Schools Education Exhibition.

இடம்: Sheraton Skyline hotel, London Heathrow, Bath Road (A4), Hayes, UB3 5BP

நேரம்: காலை10.30 - மாலை 7.00

உங்கள் நிகழ்வுகள் தொடர்பான விபரங்களையும் பிரசுரிப்பதற்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

ஒரு பேப்பர்


# Spicy Village

Indian & Srilankan Cuisine

*We cater all indian and sri lankan food*

100 இடியப்பம், சொதி, சம்பல், உருளைக் கிழங்கு மற்றும் பருப்பு கறி **£ 9.99 Only** Takeaway Only

- 3 Mutton Roll or 3 Veg Rolls .................. £ 1.20
- 3 Fish Cutlet .............. £ 1
- 3 Paties ...................... £ 1
- 3 Masala Vadai ........... £ 1
- Chicken Briyani ........... £ 2.99

Take away ONLY



FREE DELIVERY ON MINIMUM
ORDER £10 WITHIN 3 MILES RADIUS.
OVER £40 WITHIN 5 MILES RADIUS
OVER £150 WITHIN 10 MILES RADIUS

ஞாயிற்றுக்கிழமைகளில் நீங்கள் விரும்பிய அளவு ஒடியற் கூழ் பருகி மகிழ்ந்திடலாம்! **£5.50** மட்டுமே!!!



உங்கள் திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கான அனைத்து வகையான இலங்கை, இந்திய உணவு வகைகளை தரமாகவும் நிறைந்த சுவையுடனும் பெற்றுக்கொள்ள எம்மை நாடுங்கள்.
(பிற நகரங்களுக்கும் விநியோகம் செய்யப்படும்.)

86 Brighton Road, Purley CR8 4DA

**TP: 020 8660 0956**

# கிளம்பிற்றுக் காண் குறுநரிகளின் கூட்டம்

தினமணியில் ஒரு தவ் ளூாண்டு கார்ட்டூன் வந்ததுக்கே கருணாநிதி குய்யோ முறையோன்னு அலறி, கூப்பாடு போட்டு, என் பொண்டாட்டி என்ன மலடியான்னு கேட்டு, சினிமாக் காரங்களுக்கும் எனக்கும் இருக்கற ஒறவ யாராலயும் பிரிக்க முடியாதுன்னு பொலம்பனாரு.

அடடே...!

மதி



கலைஞர் வரலாற்றிலேயே முதன் முறையாக... கலைஞர் கதை, வசனத்தில்..., கலைஞர் பேரன் தயாரிப்பில்..., கலைஞர் பேரன் இயக்கத்தில்..., கலைஞர் பேரன் நடித்த..., புத்தம் புதிய திரைக்காவியம்..., கலைஞர் டி.வி.யில் மிக விரைவில்! காணத் தவறாதீர்கள்..!

இந்தியா டுடே வார இதழில், தமிழ் மற்றும் ஆங்கில இதழ்களில் கருணாநிதியின் குடும்பத்தைப் பற்றி வளைத்துக் கட்டி எழுதியும் கூட, இது வரை காதறுந்த ஊசியும் எழுதவில்லை. கருணாநிதியும் எழுதவில்லை.

அதனால், இந்தியா டுடே வார இதழின் கட்டுரைகளுக்கு, கருணா்நிதியின் சார்பாக சவுக்கே மறுப்பு எழுதுகிறது.

*உடன்பிறப்பே,*

முதலைக் கூட்டம் போல வளர்ந்துள்ள எனது குடும்பத்தின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நேரம் கிடைக்காமல் திண்டாடும் ஒரு சூழலில், மனம் வெதும்பி ராமச்சந்திரா மருத்துவமனையில் ஓய்வெடுக்க ஒதுங்கும் சூழலில், இப்படி ஒரு கடிதத்தை உனக்கு எழுதுவதற்கு காரணம் என்னவென்று நீ அறிய மாட்டாய் நான் அறிவேன்.

குறுக்கே நூல் அணிந்த ஒரு குறுக்குப் புத்திக் காரர்களின் கூட்டம், குடும்பத்திற்கு, கழக குடும்பத்திற்கு எதிராக கிளம்பியிருப்பதை நீ அறிந்திருப்பாயா இல்லையா என்பதை நான் அறியேன்.

அந்தக் குறுநரிக் கூட்டம் என்னவெல்லாம் எழுதி விட்டது. கு'பேர' குடும்பமாம். என்ன ஒரு ஆணவம்? ஒரு குசேலக் குடும்பத்தை குபேரக் குடும்பம் என்று சொல்ல என்ன துணிச்சல்?

'அண்ணாசாலை ஆரியக் கூட்டத்தின்' கொட்டத்தை சாந்துப் பொட்டை வைத்து அடக்கிய ஒரு சில நாட்களுக்குள் 'ராதாகிருஷ்ணன் சாலை ராட்சசர்கள்' புதிதாக கிளம்பியிருக்கிறார்கள்.

திருக்குவளையிலிருந்து, திருட்டு ரயிலேறி, தகரப் பெட்டியோடு சென்னை வந்து, தீய சக்தியாக உருமாறி, ஏழை உழைப்பாளி மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கும் என்னையா குபேரக் குடும்பம் என்கிறார்கள் ?

பெயரிலே ஆங்கிலம். உணர்விலே பார்ப்பனீயம். உள்ளத்திலே நஞ்சு. இதுதான் இந்தியா டுடே.

இந்தியா டுடே இதழை விட பாரம்பரியம் மிக்க பத்திரிக்கை அதிபர்களான கோயங்கா குடும்பத்தினர், இன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் தினமணி நாளிதழ்களை தமிழக அரசின் செய்தி ஏடுகளாக மாற்றி விட்டு, பல அடுக்கு மாடி கட்டிடங்களை கட்டி சத்தமில்லாமல் வேறு தொழிலுக்கு போக வில்லையா?

மவுண்ட் ரோடு மகா விஷ்ணு என்று என்னால் அன்போடு அழைக்கப்பட்ட இந்து நாளேடு, இன்று கருணாநிதியின் சொம்பு நாளேடாக மாறவில்லையா?

அரசு விளம்பரங்களை அள்ளிக் கொடுத்து, டைம்ஸ் ஆப் இந்தியா நாளிதழை கோபாலபுரம் டைம்ஸாக மாற்றவில்லையா?

இன்று தமிழ் நாட்டில் எந்தப் பத்திரிக்கையாவது உண்மையை எழுத என்னை மீறி முடியமா? அப்படி மீறி எழுதினால் கழக உடன்பிறப்பான நீ பொறுமைகாப்பாயா? ராதாகிருஷ்ணன் சாலையில், புறநானூற்றுப் புலிப்படை அணி வகுத்தால் என்ன ஆகும்? ஆனால், அறிஞர் அண்ணா எனக்கு அறவழியைத்தான் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

தமிழுக்காகவும், திராவிட இனத்துக்காகவும் பாடுபட்டதைத் தவிர, என்ன குற்றத்தை செய்து விட்டான் இந்தக் கருணாநிதி? இந்தக் கருணாநிதி மீது களங்கம் கற்பிக்க வேண்டுமென்று தானே, இவ்வாறு பொய்யையும், புரட்டையும், புனைசுருட்டையும், உண்மை என்று சில ஏடுகளிலே எழுதிக் கொண்டிருக்கிறார்கள்?

குபேரக் குடும்பம் என்று எழுதுகிறார்களே.. நாங்கள் மட்டுமா குபேரக் குடும்பம். வட இந்தியாவிலே, திருபாய் அம்பானி என்ற ஒருவர் இருந்தார். என்னைப் போலவே, பிற்பட்ட சமூகத்தில் பிறந்து, ஒரு சாதாரண பெட்ரோல் பங்க்கிலே வேலை பார்த்து, இன்று இந்தியாவே வியக்கும் அளவுக்கு ஒரு சாம்ராஜ்யத்தை கட்டியுள்ளாரே? அந்தக் குடும்பம் குபேரக் குடும்பமாக தெரியவில்லையா?

அவர் மறைவுக்குப் பின், அவரது இரு மகன்களும் சண்டையிட்டுக் கொண்டு, அந்த நிறுவனத்தை இரண்டாகப் பிரித்து இன்று அவர்கள் இருவரும் தங்களுக்கென்று தனித் தனி சாம்ராஜ்யங்களை அமைத்துக் கொள்ள வில்லையா?

அது போலத்தானே நமது கழகமும்? திருபாய் அம்பானிக்கு ஒரு மனைவி இரு மகன்கள், ஒரு மகள், எனக்கு மூன்று மனைவிகள், மகன்கள் மற்றும் மகள்களின் கணக்கு சட்டென நினைவுக்கு வரவில்லை. அதனால், மூன்று பேருக்காக ஒரு லட்சம் கோடிகளை சேர்க்கும் போது, ஒரு முன்னூறு பேருக்காக ஒரு மூன்று லட்சம் கோடிகளை சேர்த்தால் அது பொறுக்கவில்லையே இந்த விபீடணர் கூட்டத்திற்கு.

இந்தியாவிலே முதன் முறையாக ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய ஊழல், தியாகத் திருவிளக்கின் கணவர் அருமை நண்பர் ராஜீவ் செயல்படுத்திய போபர்ஸ் ஊழல். அந்த ஊழலின் மொத்த மதிப்பே 66 கோடி ருபாய்தான்.

ஆனால், இந்தியாவே வியக்கும் அளவுக்கு, வாயில் விரல் வைக்கும் அளவுக்கு, எண்ணி மகிழும் அளவுக்கு, பூரிப்பால் இதயம் விம்மும் அளவுக்கு, தமிழ் கூறு நல்லுலகு பெருமை கொள்ளும் அளவுக்கு, ஸ்பெக்ட்ரம் விற்பனையில் ஒரு லட்சம் கோடி ருபாய் ஊழலை புரிந்திருப்பது ஒரு பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒரு தமிழன் என்பதால் தானே இந்த பொச்சரிப்பு? வக்கரிப்பு? மனக்கரிப்பு? குவியும் வெறுப்பு? என்னை அழிக்க வேண்டுமென்ற துடிப்பு?

ஆனால், இது போன்ற தாக்குதல்களெல்லாம், கண்ணப்ப நாயினார் சிவபெருமானை கல்லால் வழிபட்டபோது, மலர்களாக மாறி அவருக்கு மரியாதை செய்தது போல எனக்கும் மரியாதை செய்கின்றன.

அய்யகோ... இந்தியா டுடே வார இதழில் உண்மையை எழுதி விட்டார்களே... ஊழலை அம்பலப்படுத்தி விட்டார்களே... என்று உடனடியாக பதவி விலகி நத்தையைப் போல ஓட்டுக்குள் ஒளிந்து கொள்ளும் அளவுக்கு நான் என்ன சூடு சொரணை உள்ளவனா? காண்டாமிருகத்தை விட தடித்த தோலுண்டு. பதிலளிக்க எழுதுகோலுண்டு. கழக கண்மணிகளிடம் வீர வாளுண்டு.



குபேரக் குடும்பம் என்று என்னை அழைக்கிறார்களே, நானும் என் குடும்பத்தாரும் அப்படி என்ன பேராசைக்காரர்களா? வாய்க்கு வாய் திராவிடம், திராவிடம் என்று அழைத்தாலும், தெலுங்கு பேசும் ஆந்திரம், மலையாளம் பேசும் கேரளம், கன்னடம் பேசும் கர்நாடக மாநிலங்களை அப்படியேவா விலைக்கு வாங்கி விட்டோம்? தமிழகத்தையும் பாண்டிச்சேரியையும் அபகரித்து விட்டு திருப்தியோடு இருக்கவில்லை?

பெங்களூருவில் இப்போதுதான் கால் பதித்திருக்கிறோம். கேரளாவுக்கு, குமுளி வழியாக இப்போதுதான் புறப்படத் தொடங்கியிருக்கிறோம். சந்திரபாபு நாயுடுவிடம் இப்போதுதான் பேசிக் கொண்டிருக்கிறோம். அதற்குள்ளாக என்ன அவசரம்?

பேராசைக்காரனைப்போல என்னை சித்தரித்திருக்கிறார்களே? கொடுக்கும் மனமற்றவனா இந்தக் கருணாநிதி? இலங்கைக்கு கச்சத்தீவை வழங்கவில்லை? கேரளாவுக்கு முல்லைப் பெரியாறை வழங்க வில்லை? ஆந்திரத்துக்கு பாலாற்றை வழங்கவில்லை? கர்நாடகத்துக்கு காவிரியை வழங்கவில்லை? சொத்து சேர்க்க வேண்டும் என்பதற்காக எனது மானம் மரியாதையெல்லாம் வாரி வழங்கவில்லை? என்னைப் போய் பேராசைக்காரன் போல எழுதியிருக்கிறார்களே?

எஜமான் படத்திலே தம்பி நெப்போலியன் ஒரு வசனம் பேசுவார். கல்யாண வீடு என்றால் நான்தான் மாப்பிள்ளையாக இருக்க வேண்டும். இழவு வீடு என்றால் நான்தான் பிணமாக இருக்க வேண்டும் என்று. அந்த வசனத்தை நான் எழுதவில்லையே தவிர, அந்த வசனத்தின் படிதானே நான் இன்று வரை நடந்து கொண்டிருக்கிறேன்.

திருக்குவளையிலிருந்து வந்த ஒரு தமிழன் வந்தான். வென்றான் என்று மட்டும் இல்லாமல், மெக்சிகோவின் கார்லோஸ் ஸ்லிம் போலவோ, பில் கேட்ஸ் போலவோ, வாரன் பஃபெட் போலவோ முகேஷ் அம்பானி போலவோ, லட்சுமி மிட்டல் போலவோ, உலக பணக்காரர்களில் ஒருவன் இந்தக் கருணாநிதி. அவன் மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தினர் அனைவரையும் உலக பணக்காரர்களில் ஒருவனாக ஆக்கி விட்டான் என்று வரலாற்றில் எழுதி விடப் போகிறார்களே என்று அஞ்சியல்லவா இன்று இந்தியா டுடே என்ற ஏடு எழுதி கிழித்திருக்கிறது ?

இது போன்று இந்தியா டுடே என்ற நாளேடு அன்றே எழுதும் என்று அறிந்துதான் அண்ணா, அடைந்தால் திராவிட நாடு என்று சொன்னார். நிரந்தரமாக பாம்புக்கும் பல்லிக்கும் நடுவே வைத்து விடுவார்களோ, என்று எண்ணி இன்பத் திராவிடத்துக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் விளைவுதானே இது போன்ற இந்தியா டுடே என்ற ஏடுகள் ஆட்டம் போடுகின்றன ?

இன்பத் திராவிடம் அமைந்திருந்தால் இந்தியா டுடே ஏடு இருந்திருக்குமா ? திராவிடா டுடே என்றுதானே ஒரு ஏடு இருந்திருக்கும். அதையும் என்னுடைய ரைசிங் சன் யாராவது ஒருவர் தானே நடத்திக் கொண்டிருப்பார்கள் ?

ஆனந்தத் தாண்டவம் போடும் இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிக்க வேண்டாமா? கொட்டத்தை அடக்க வேண்டாமா? என்று எண்ணி எனது அன்பு உடன்பிறப்புகள் ஆர்ப்பரிப்பது எனக்கு தெரிகிறது.

இந்த அன்புக்கு என்ன கைமாறு செய்யப் போகிறான் இந்தக் கருணாநிதி? எப்படி அடக்கப் போகிறான் இந்த புறநானூற்றுப் புலிக் கூட்டத்தை?

இந்த நேரத்திலேதான் காதில் தேனினும் இனிமையாக கழகத்தின் நிரந்தர இளைஞர் அணித் தலைவரும், துணைப் பொதுச் செயலாளர்களிலே ஒருவரான மு.க.ஸ்டாலினைப் பற்றி சிறப்பு மலர் ஒன்று அந்த ஏடு கொண்டு வரப் போவதாக செய்தி அறிந்தேன்.

வன்முறையிலே என்றுமே நம்பிக்கை இல்லாதவன் இந்தக் கருணாநிதி. அறிஞர் அண்ணா என்னை கடமை, கண்ணியம் கட்டுப்பாட்டோடுதான் வளர்த்திருக்கிறார். அதனால், இந்தப் புறநானூற்றுப் புலிக் கூட்டத்தை இப்போதைக்கு அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வீழ்வது யாராக இருந்தாலும் வாழ்வது நானும் எனது குடும்பமாகவும் இருக்க வேண்டும் என்பது தானே வள்ளுவன் வாக்கு?

ஊரையடித்து உலையில் போட்டு
குடும்பத்தோடு நிம்மதியாக வாழ்

என்றுதானே அய்யன் வள்ளுவன் எனக்கு கற்றுத் தந்திருக்கிறான்? இதை நீ அறிய மாட்டாயா உடன்பிறப்பே?.

அன்புடன்

மு.க

– சவுக்கு



## கண் சிகிச்சையில் புதிய கண்டுபிடிப்புகள்

நம்ப முடிகிறதா? விழித்திரையில் ஏற்படும் கோளாறுகளால் பார்வை இழந்து அவதிப்படும் மக்களின் எண்ணிக்கை 8 கோடி வரையில் இருப்பதாக ஒரு கணிப்பு சில வருடங்களுக்கு முன் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்ட, செயற்கை முறையிலான விழித்திரைகள், பார்வை இழந்தவர்களின் கண்களில் பொருத்தப்பட்டு 2 வருடங்களுக்கு மேலாக அவை சிறந்த முறையில் பயன் தருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

அதிஷ்டவசமாக தானமாகப் பெறும் கண்கள் பொருத்தப்பட்டோர் அதிக காலம் நன்மையடைவது ஊர்ஜிதம். இதில் உள்ள சிக்கல் என்னவென்றால் கண்ணைத் தானமாக கொடுக்க முன்வரும் தொகையினர் மிகக் குறைவாக இருப்பதினால், தேவைக்கு உகந்த வகையில் ஏதாவது மாற்று வழியைக் கண்டு பிடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆராய்ச்சியாளர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது.

செயற்கையாக தயாரிக்கப்படும் விழித்திரைகள்(Corneas) பிளாஸ்டிக் மூலமாக உருவாக்கப்படுவதால், இவைகளைப் பொருத்தும் போது, வைத்தியர்கள் பல பாதுகாப்புகளை நிச்சயப்படுத்த வேண்டியிருப்பதாகக் கூறப் படுகிறது.

பிரதானமாக, நோயாளர்களை பிற நோய்கள்(Glaucoma) தொற்றிக் கொள்ளாமல் இருப்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியிருப்பதாக Boston செயற்கைமுறை விழித்திரை தயாரிப்பு நிறுவனத்தின் Ophthalmologist, Class Dohlman கூறுகின்றார்.

இதன் காரணமாக விழிப்படைந்த, Ottawa பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த May Grippith எனும் மரபணு நிபுணர் தனது குழுவினருடன் மிகக் கடுமையான ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இவர்களுடைய கடும் உழைப்பின் பலனாக, விழித்திரைக்குத் தேவைப்படும் Collagen மூலப்பொருளை San Francisco நகரத்தைச் சேர்ந்த Fibrogen என்ற நிறுவனத்திடமிருந்து தருவித்து, அதனை தங்களுடைய ஆய்வு கூடத்தில், சரியான வளைவை உண்டாக்கி புதிய வடிவில் உருவாக்கியுள்ளனர். இதன் பின்னர், விழித்திரையில் மிக மோசமாக பாதிக்கப்பட்ட 10 நோயாளர்களைத் தெரிவு செய்து இவர்களுக்கு இப்புதிய வடிவத்திலான செயற்கை விழித்திரை பொருத்தப்பட்டது.

## போதியளவு நீரை தவறாமல் அருந்தி தாராளமாகவே சிறுநீர் 'கழிப்பதில்' எதுவும் வீணாகப் போய்விடாது

இப்புதிய வடிவத்திலான விழித்திரை அற்புதமான வெற்றியைக் தந்ததோடு பரீட்சைக்குட் படுத்தப்பட்ட நோயாளர்கள், எதுவித பாதிப்புகளுக்கு ஆளாகாமலும், இழந்த பார்வையை மீண்டும் பெற வாய்ப்புக் கிடைத்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இறந்தபின் உடலோடு அழிந்து போகும் கண்களைத் தானமாக வழங்க முன்வந்தால் பார்வையற்றோர் பயன் பெறுவது சுலபமல்லவா?

## மின்சார பைக்

மின்சார றெயில், மின்சார கார் என்ற வரிசையில் மின்சார பைக்கும் சந்தைக்கு வந்து விட்டது. அதென்ன மின்சார பைக்? ஏற்கனவே மோட்டரில் இயங்கும் 2 வீலர்கள் உலாவரும் போது இதென்ன புதிய மின்சார பைக் என்று கேட்க தோன்றுகிறதோ? Rob Banino இதற்கான விடைகளைத் தருகின்றார்.

சாதாரண சைக்கிள் போல இயங்கக்கூடிய இந்த பைக்கின் விசேடம் என்னவென்றால், பெடல் செய்வதற்கு உந்து சக்தியை மின்சார மோட்டார் மூலம் தரக்கூடியது. வேலைக்கு போகும் வழி நெடுக வியர்க்க வியர்க்க சைக்கிளை ஓட்டி, வேலைத்தளத்தை அடைந்தவுடன் போட்டு வைத்த உடுப்புகளையே களற்றி எறிய வேண்டிய நிலைமையைச் சமாளிக்கத்தான் இந்தப்புதிய ஏற்பாடு.

உயரமான இடங்களைத் தாண்டுவதற்கு உடலில் உந்து சக்தி குறைவாக இருப்பின் பெடல்களை உதைக்க இந்த மின்சார பைக் உதவுகிறது. எவ்வளவுதான் வேகத்தை அதிகரித்தாலும் ஐக்கிய இராய்ச்சியத்தைப் (UK) பொறுத்தவரை, இதன்வேகம் 15mph வரை தான் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : உமா மகாலிங்கம்

இந்த பைக்கைச் செலுத்த நீங்கள் 14 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருப்பின் அனுமதிப் பத்திரமோ, காப்புறுதியோ, வீதிவரியோ UKயைப் பொறுத்தவரை தேவைப்படாது. ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை, இந்த பைக், மோபேட்ஸ் (Mopeds) வரிசையில் சேர்க்கப் படுவதால் மேற்கூறிய அத்தாட்சி பத்திரங்கள் தேவைப்படுவதாக அறிகிறோம்.

20 மைல்கள் வரை சவாரி செய்வதற்கு, மோட்டருக்குத் தேவைப்படும் மின்சக்தியை நிரப்ப சிலPenceகளே போதுமென்பதைக் கேட்கும் போது ஆசை அலை மோதுகிறது. உடலுக்கு ஆரோக்கியத்தையும், உள்ளத்திற்கு உற்சாகத்தையும், உலகத்துக்கு பசுமையையும், அள்ளித்தரும் மின் பைக்கை யார்தான் வரவேற்க மறுப்பார்கள்.

## சிறுநீரிலிருந்து மின்சக்தி

நாளாந்தம் கழிவுப் பொருளாக வெளியேற்றப்படும் சிறுநீரை, வீண்விரயமாக்காமல் மனிதருக்கு தேவைப்படும் ஒரு சக்தியாக மாற்ற முடியாதா என்ற குடைச்சல் விஞ்ஞானிகளை குடைந்ததில் வியப்பில்லை. ஏனெனில் 700 கோடி மக்களால் விரயமாக்கப்படும் 10 ஆயிரம் கோடி லீற்றர் சிறுநீர் தினமும் வீணாகிக் கொண்டிருக்கிறது. இதனுடன் விலங்குகளால் விரயமாக்கப்படும் சிறுநீரையும் சேர்த்து கணக்கெடுத்தால் பலமடங்கு லீற்றர் சீறுநீர் வீணாக வீசப்படுவது சிந்திக்க வேண்டிய உண்மை. அமெரிக்காவில் மாத்திரம், கழிவுப் பொருளான சிறுநீரைப் சுத்திகரிப்பதற்கு இயங்கும் இயந்திரங்கள், முழு நாட்டிற்குமே தேவைப்படும் மின்சக்தியில் 1.5 சத விகித அளவிலான மின்சாரத்தை உபயோகிப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எனவே சிறுநீரைச் சுத்திகரிக்கும் செயலைத் தவிர்த்து, அதே சிறுநீரைப் பயன்படுத்தி, மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியுமென, Ohio பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த இரசாயன விஞ்ஞானி Gerardine Botte தனது ஆராய்ச்சியின் மூலம் நிரூபித்துள்ளார். இவர் மேற்கொண்ட ஆராய்ச்சியின் நிமித்தம், சிறுநீரில் உத்தேசமாகக் காணப்படும் 2 சத விகித Urea ஜலவாயுவைப் (Hydrogen) பிரித்தெடுக்க முடியுமென நம்பிக்கை தெரிவிக்கிறார். நீரிலிருந்து ஜலவாயுவைப் பிரித்தெடுப்பதிலும் பார்க்க சிறுநீரிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஜலவாயுவுக்கு குறைந்தளவு மின்சக்தியே தேவைப்படுவதை தெளிவு படுத்தியுள்ளார்.

இவர்களுடைய ஆராய்ச்சியின் அளவுகோல்படி 200 தொடக்கம் 300 வரையிலான ஆட்கள் வேலை செய்யும் ஒரு நிறுவனத்தின் கட்டிடத் தொகுதியில் சேகரிக்கப்படும் சீறுநீரின் உத்தேச பரிமானம், கிட்டத்தட்ட 2 கிலோ வாட் மின் சக்தியைஉற்பத்திசெய்ய உதவுமென ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

சிறுநீரிலிருந்து ஜலவாயுவைப் பிரிக்கும் சிரமம் எதற்கு நேரடியாகவே சிறுநீரை எரிபொருளாக மாற்றமுடியுமென ஐக்கிய இராய்ச்சியத்திலுள்ள (UK) St. Andrews பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த John Irvine என்பவருடனும், Rong Lan என்பவருடனும் கூட்டுச் சேர்ந்து Tao என்ற விஞ்ஞானி தனது ஆய்வுகளின் அடிப்படையில் கூறுகின்றார். இவர்களுடைய ஆராய்ச்சியின் பெறுபேறுகள் மிக இரகசியமாகவே பாதுகாக்கப்படுகின்றது.

ஆகவேபோதியளவுநீரை தவறாமல் அருந்தி தாராளமாகவே சிறுநீர் 'கழிப்பதில்' எதுவும் வீணாகப் போய்விடாது என்ற நம்பிக்கை மெல்ல மெல்ல இப்போது வரத்தான் செய்கிறது.

---

# மரண அறிவித்தல்

மலர்வு 14 11 1965



உதிர்வு 24 08 2010

**சிங்கரத்தினம் இரகுநாதன் (ரகு)**

யாழ்.சிறுப்பிட்டி மேற்கை பிறப்பிடமாகவும், லண்டன் கவுன்ஸ்லோ பகுதியை வதிவிடமாகவும் கொண்ட சிங்கரத்தினம் இரகுநாதன் (ரகு) அவர்கள் கடந்த 24-08-2010 அன்று லண்டனில் காலாமானார். அன்னார் காலஞ்சென்ற சிங்கரத்தினம் - அகிலாம்பிகை (சிறுப்பிட்டி) தம்பதிகளின் அன்பு மகனும், பவிதகுமாரி (பவிதா-லண்டன்) அவர்களின் அன்புக்கணவரும், சிறீரங்கநாதன் (ரங்கன்-கனடா) இரத்தினாம்பிகை (சிறுப்பிட்டி), ராமநாதன் (நாதன் - கனடா), கமலவேணி (சிறுப்பிட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற மயில்வாகனம் - புவனேஸ்வரி (வவுனியா) தம்பதியினரின் மருமகனும், சிவகுமாரி, கௌரிநாதன் (வவுனியா) கிருஸ்ணராஜ், வித்தியா (கனடா), ராஜேந்திரன், ராசகுமாரி (வசந்தி-கனடா), ரகு (கட்டார்), சத்தியபாமா (இலங்கை) யோகேஸ்வரி (கனடா) கிருஷ்ணராணி(கனடா), மகாராஜா (இலங்கை) பங்கயற்செல்வன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், தாட்சாயினி, கோபி, சஞ்சீவ், கீர்த்தனா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், லிசாயினி, துசீலன், பிருந்தன், தனீஸ்வரன், கிருஷாந்தி, நிதுஷா, துசி, கபிலன் ஆகியோரின் அன்பு மாமானாரும் ஆவார்.

*அன்னாரின் பூதவுடல் 06-09-2010 திங்கட் கிழமை காலை 10:35ருந்து 12:30 வரை*
Old Latymerian's Sports Hall
190 Wills Cresent, Hounslow,
Middlesex, TW3 2JD

*அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் 1.00மணியளவில்*
South West Middlesex Crematorium
Hounslow Road
Hanworth, Middlesex
TW13 5JHஎன்னும் மயானத்திற்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**மேலதிக விபரங்கட்கு:**

லண்டன் - மனைவி: 0044 (0) 7903504614, ராசன் : 07868486682, கிருபா: 07903 424 702

அஜந்தன்: 07961 906 345

இலங்கை - பெற்றோர்: 0094 214909334 0094 244900471

கனடா: 001 4166982514



அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
ஆவணி சதுர்த்தியை முன்னிட்டு
Claction on Seaய
நோக்கி
19.09.10
ஞாயிறு
அன்று
சதுர்த்தி கலாரூப விநாயகர் நிமஜ்ஜனை
(திருமஞ்சன தீர்த்த திருவிழா)
பொதுவாக சதுர்த்தி தினம் விநாயகப் பெருமானது அருள் கிடைத்த தினமாகப் போற்றுவது மரபு. அந்நாட்களில் விநாயக மூர்த்திக்கு அபிசேக ஆராதனைகள், விழாக்களும் நடைபெறுவதுடன் விநாயக திருவுருவங்கள் பெரிய அளவில் உருவாக்கப்பட்டு வழிபாடுகள் செய்து, வேண்டும் வரங்களைப் பெற்று, அத்திருவுருவங்களை நீர் நிலைகளில் சமர்ப்பணம் செய்ய வேண்டும் என்ற சம்பிரதாய மரபின்படி எமது ஆலயத்தில் புதிதாக உருவாக்கப்படும் கலாரூப விநாயகர் திருவுருவம் வழிபாட்டிற்காக போற்றப்பட்டு 19.09.2010 ஞாயிறு காலை 9.00 மணியளவில் புறப்பட்டு கடற்கரையில் தீர்த்த நிமஜ்ஜன பெருவிழாவுடன் விநாயகர் திருவுருவம் நீர் நிலையில் சேர்க்கப்படும்.
ஆலயத்திலிருந்து வாகன ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 19.09.2010 ஞாயிறு காலை 9.00 மணிக்கு ஆலயத்தில் இருந்து வாகனம் புறப்படும்
அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்
ஆண்டு வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்
கொடியேற்றம்
03.09.2010 11am
2010
தேர்
12.09.2010 11am
தீர்த்தம்
13.09.2010 11am
2 - 4 BEDFORD ROAD, WALTHAMSTOW LONDON, E17 4PX, TEL : 020 8527 3819




HAIR LOSS? NOT ANYMORE!
WHITE CLIFFS
HAIR STUDIO
" There is a Better Way... Welcome to White Cliffs ... "
Whether you are experiencing hair loss or desire hair improvement, we offer you state-of-the-art solutions that are world renowned!
Before After
Hair Transplants: WHITE CLIFFS offers surgical hair replacement with top US surgeons with unbelievable results
Before After
Volumizers: For those with thinning hair or wanting thicker, fuller hair- a need for instant volume.
Before After
Hair Replacement & Wigs: Ultra custom non surgical hair. replacement that looks so natural no one can tell!
Before After
Hair Therapy: WHITE CLIFFS offers industry-leading Products and Programmes which can help re-grow, restore, improve, and beautify your hair.
After
Before
Extensions: Extensions are the finest available in the world, applied with the safest and most natural technique available.
Solutions which are guaranteed to work by White Cliffs
Australia United Kingdom India United States Canada Europe
14 Dufferin Street, London EC1Y 8PD
Tel: 020 7250 0650
Tamil Number: 07958 407 643
www.wchairstudio.com

# சடங்குகளும் சம்பிரதாயங்களும்



காரோடும் வீதிகளில் தேரோடும் காட்சிகளை ஞாயிறு தோறும் மேலைதேசம் காண்கிறது. புலம்பெயர் சைவர்கள். குறிப்பாக தமிழர்கள் வாழும் நாடுகளில் இது அண்மைய காலங்களில் வாராந்த நிகழ்வு. ஊரில் திதியோடு ஒட்டியதாக அமையும் திருவிழாக்கள் இங்கு வசதிக்கேற்ப ஞாயிறு நாட்களுக்கு மாற்றம் கண்டுள்ளது. இரு ஆலயங்களைத் தவிர பிரித்தானியாவில் எல்ல ஆலயங்களிலும் இதே கதைதான்.

தேர்த்திருவிழாவுக்கு மட்டும் ஞாயிற்றுக் கிழமை பார்த்து விதிவிலக்கு அளிக்கப்படும் பஞ்சாங்கம் நவராத்திரி, சிவராத்திரி, வருடப் பிறப்பு என்று வரும்போது மட்டும் வாக்கியம், திருக்கணிதம் என்று வேறு வெறு நாட்களைக் காண்கிறது. தமக்குப்பிடித்தது தான் சரியென்ற வியாக்கியானங்கள் வாதப்பிரதிவாதங்கள் ஊடகங்களில் ஒலிக்கின்றன. வல்லாளன் கருத்துக்களை ஆண்டவனும் ஏற்றுக்கொண்டு அமைதியாகி விடுகின்றார்.

முன்பெல்லாம் மாவிட்டபுரம் கந்தசுவாமியார் ஆலயம் நல்லூர்க்கந்தன் கோவில் என்று ஊர்க்கோவில்களில் தேர்விருத்தம் கிழமை நாட்களில் வருவதுண்டு. பள்ளிகள் அவற்றுக்கு விடுமுறை வழங்கும். சனிக்கிழமை பாடசாலைகளை நடாத்தி அந்த விடுமுறையை ஈடு செய்யும். ஊர்ப்புனிதம் காக்கின்ற காலமாக உற்சவகாலம் அமையும். வழமையாக கோன் சத்தத்துடன் மீன்பெட்டியோடு வீதிகளில் கத்திக்கொண்டு திரியும் மீன் விற்பனையாளனைக்கூட அந்தக்காலத்தில் காணமுடியாது. பங்கிறைச்சி ஆடு அடிப்பும் உற்சவகாலத்தில் நடக்காது. விரதம் இருக்கின்ற 25நாள் உற்சவகாலமென்றாலும் முகச்சவரம் செய்யாது தீட்சைக்குறிகள் உடம்பில் தெரிய தோய்த்துலர்ந்த வேட்டி சால்லையோடு அல்லது சேலை, நீளப்பாவாடையோடு கோவிலை நோக்கி செல்பவர்களை வீதிகளில் அந்த நாட்களில் ஊரில் அதிகம் காணலாம்.

புலம்பெயர் நாட்டில் வேலையே வாழ்வு என்ற நிலைப்பாட்டில் இவை தவிர்க்கப்படுகின்றன. பிராமணர்கள் கூட கோழிக்கடையென்றாலும் வேலை செய்து தான் ஆகவேண்டுமென்ற நிலை. அண்மையில் தன்னோடு கோழிக்கடையில் வேலை செய்துவிட்டு நேராக திவசம், திதி செய்யப்போன ஒரு ஐயரின் கதையை தமிழ்ப் பள்ளி சிவலிங்கம் கொதித்துக்கொண்டு தான் சொன்னர்.

சடங்குகள் சம்பிரதாயங்கள் சூழ்நிலைக்கேற்ப அவரவர் எண்ணப் படி மாற்றப்படும் போது சைவ மகாநாடுகளின் தீர்மானங்களும் செயலிழந்து விடுகின்றன.

வீட்டில் அம்மாவுக்கோ சகோதரிக்கோ வழமையான மாதவிலக்கு வந்தால் அந்த நாட்களில் அந்த மூன்று நாட்களும் ஒதுக்குப்புறத்தில் தனியிடத்தில் தான் அவர் தங்க வைக்கப்படுகிறார். உணவுக் கோப்பை குடிகோப்பை என்பனவும் தனியாக்கப்படும் மூன்று நாட்களும் படுத்திருந்த இடம் பாத்திரமும் கழுவப்பட்டு இன்னொருவர் கையால் கிணற்றில் வாளியால் நீர் அள்ளி தலையில் ஊற்ற அவர் தலை முழுகிய பின்பே வீட்டுக்குள் மூன்று நாட்களின் பின் சாதாரணமாக நடமாட அனுமதிக்கப்படுவார். இது அந்தக்கால வழக்கமாக இருந்தது. காலத்துக்கேற்ப அதிலும் மாற்றம். ஊரில் அகதிமுகாம் இடம்பெயர்வுஎன்று வந்தபோது இவை அர்த்தமிழந்துவிட்டன. இப்போது மாதவிலக்கு ஒரு தீட்டுக்கான சங்கதியே இல்லை காலவொட்டம் சம்பிரதாயங்களை மாற்றுவதற்கு இது நல்ல உதாரணம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

பிள்ளைப்பேறு கிடைதத்தால் 31 நாட்கள் துடக்கு காட்டுவது. வயதுக்கு வந்துவிட்டால் சாமத்தியச் சடங்கு வரை கோயில் குளங்களை தவிர்ப்பது. மரணச்சடங்கு வந்தால் 31வரை துடக்கு. கொள்ளி வைப்பவர் ஒரு ஆண்டுத் திவசம் வரை ஆலயம் போகக்கூடாது போன்ற சம்பிரதாயங்கள் இந்த நாட்களில் இல்லாதாக ஆகிவிட்டது.

திருமணத்தின் போதோ அல்லது பெற்றோருக்கு கொள்ளி வைக்கும் மரணக்கிரியைகளின்போதோ ஏன் எங்கள் அபிடேகம் உபயம் என்று நாங்கள் ஆலயத்தில் ஐயருக்கு முன்னால் தர்ப்பையோடு அமர்ந்திருக்கும் வேளையில் கூட அர்த்தம் தெரியாது சடங்குகளை இன்னுவரை நித்தமும் செய்து வரகின்றோம்.

மந்திரம்சொல்லியபடி எம்மை அப்படிச்செய் இப்படிச்செய் என்று கூறும் ஐயருக்குக் கூட அது ஒரு கடமை. வருமானத்தொழில் அவர்களில் கூட எத்தனைபேருக்கு இதன் அர்த்தம் தெரியும் என்பது கேள்விக்குறிதான்.

பங்குனி சித்திரை வைகாசி மாதங்களில் முன்பெல்லாம் வேள்வி என்ற கிடாய் வெட்டு அப்போது ஒரு சம்பிரதாயம். கவுணாவத்தை உரும்பிராய் வைரவர் என்பன அந்தநாட்களில் பிரபலமான வேள்விக் கோவில்கள். இந்து சமய அமைச்சு என்று அரசாங்கத்ததால் நியமிக்கப்பட்ட அமைச்சு சட்டப்படி பலி கொடுப்பது தவறு என தடைசெய்தது. ஆனாலும் அந்த திதி நாட்களில் அந்த ஆலயத்தில் எவரும் அறியாமல் கிடாயோ கோழியோ ஒன்றோ இரண்டோ வெட்டப்படுவது சம்பிரதாயப் பிரியர்களின் வழக்கமாக சட்டம் வந்தபிறகும் இருந்தது. இடையே வடக்கில் அரசாங்கம் செயலிழந்த போனபோது வெள்வி மீண்டும் தலைகாட்டியது. இடம்பெயர்வு காலத்தில் எல்லாம் சூனியமயம். இப்பொழுது மீண்டும் வேள்வி. ஆண்மையில் கூட சென்றமாதம் முன்னேஸ்லரம் ஆலயத்தோடு ஒட்டிய காளிகோவிலில் மிருகவதை செய்வதை தடைசெய்ய வேண்டுமென்ற பௌத்த பிக்குகள் எதிர்ப்புக்காட்டிய நிலையிலும் கூட சட்டம் வேள்வியென்று மிருகபலியை ஒரு ஒதுக்குப்புறத்தில் கொடுப்பதை அங்கிகரித்திருந்தது. வேள்வி நடைபெற்றது.

சடங்குகள் சம்பிரதாயங்கள் விதிமுறைகள் சூழ்நிலைக்கேற்ப வசதிக்கேற்ப மாற்றம் காணுகின்றது. வல்லவன் பம்பரம் வரம்பிலும் ஆடுகிறது. ஆசௌசம் தீட்டு தெய்வ நிந்தனை என்ற பதங்கள் அர்த்தமற்றுப் போய்விடுகின்றன. தேய்வம் என்றால் அது தெய்வம். வெறும் சிலை என்றால் அது சிலை தான் என்ற அறிஞர் கண்ணதாசனின் வரிகள் தான் இந்த வேளையில் நினைவுக்கு வருகின்றன.

### வாழ்க்கைத் தத்துவம் !

வாழ்க்கை என்பது
ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்
ஒரு கடமை – நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் – சாதியுங்கள் •
ஒரு சோகம் – தாங்கிக்கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் – வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் – நடத்தி முடியுங்கள்

16 வருட கால அனுபவம்
L J Legal Advisors
Legal Advisors & Commissioners for Oaths
We Specialise in:
• Asylum and Immigration Matters
• Human rights Applications
• Appeals
• Detention and Bail
• Entry Clearance Application and Appeal
• Injunctions & Judicial Reviews through associate solicitors
• Judicial Reviews
• Work Permits
• EEA Application(Sponsor)
• Student Visa, Visitor's Visa
• Highly Skilled migration Programme
• Naturalisation Applications

V.P. Lingajothy
LLB (Hons), M.Sc., Dip Fms, A.PLL
Principal
Immigration Specialist
E-mail: MRLINGA@AOL.COM
ஐரோப்பிய மனித உரிமைகள் சட்டம் சார்பாக தகுந்த ஆலோசனைகளை இப்போது நாங்கள் வழங்குகிறோம்
முதல் ஆலோசனை இலவசம் (Initial Consultation Free)
நீங்கள் அல்லது உங்கள் உறவினர் இங்கிலாந்திற்கு 2007ம் ஆண்டுக்கு முன்னர் வந்துள்ளார்கள்ளாயின் உடன் தொடர்பு கொள்ளவும்
மிகவும் நம்பிக்கையான வெற்றிகரமான நிறுவனம்.
General Line : 020 8544 9285
Fax : 020 8452 9530
46, High Street
Collierswood
London SW19 2BY
OISC
Emergency Line : 07771 646 441

GYPS Pest Control Services
லண்டன் மாநகரில் முதல் முதலாக தமிழர்களால் தமிழர்களுக்காக தொடங்கப்பட்ட ஒரே நிறுவனம்

எலி
சுண்டெலி
மூட்டைப்பூச்சி
கரப்பான்
எறும்பு
மற்றும் பல பூச்சிகள்
இவை அனைத்தையும் அழித்து உங்களுக்கு நிரந்தர பாதுகாப்பும் நிம்மதியான நித்திரையும் தருவதே எங்கள் சேவை.
உணவகங்கள், கடைகள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு Monthly or Quarterly Pest control vist மிகவும் மலிவான விலையில் ஆனால் மிகுந்த தரத்துடன் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு
07983 589 993
07723 467 012

# எண்ணற்ற தெய்வங்கள் எத்தனை இருந்தாலும் எண்ணத்தில் ஆடவில்லையே - ஏன்?



தித்திக்கும் தேன் பாகும், திகட்டாத தெள்ள முதும், தீஞ்சுவை ஆகவில்லையே, முருக ய்யா! தீஞ்சுவை ஆகவில்லையே! - ஏனாம்?

சர்க்கரை/வெல்லப் பாகு திகட்டும்! ஆனால் தேனில் எடுக்கும் பாகு திகட்டாது! - அதான் திகட்டாத தெள்ளமுது!

ஆனாலும் அது கூடத் தீஞ்சுவை ஆகவில்லை யாம்!

தித்திக்கும் தேன்பாகும் திகட்டாத
தெள்ளமுதும்
தீஞ்சுவை ஆகவில்லையே – முருகய்யா –
தீஞ்சுவை ஆகவில்லையே!

எத்திக்கும் புகழ் கந்தன் இன்சொல்
எழுத்தினைப் போல
இன்பம் ஏதும் இல்லையே – குமரய்யா –
இன்பம் ஏதும் இல்லையே!

அத்தரும் ஜவ்வாதும் அள்ளியே பூசிடினும்
அங்கம் மணக்கவில்லையே – முருகய்யா
– அங்கம் மணக்கவில்லையே!

சித்தம் மணக்கும் செல்வக் குமரன்
பெயரினைப் போல
சீர் மணம் வேறு இல்லையே – குமரய்யா
– சீர் மணம் வேறு இல்லையே!

முத்தும் இரத்தினமும் முத்திறைப்
பசும்பொன்னும்
முதற் பொருள் ஆகவில்லையே
– முருகய்யா – முதற் பொருள்
ஆகவில்லையே!

சத்திய வேல் என்று சாற்றும்
மொழியினைப் போல
மெய்ப் பொருள் வேறு இல்லையே
– குமரய்யா – மெய்ப் பொருள் வேறு
இல்லையே!

எண்ணற்ற தெய்வங்கள் எத்தனை
இருந்தாலும்
எண்ணத்தில் ஆடவில்லையே
– முருகய்யா – எண்ணத்தில்
ஆடவில்லையே!

மண்ணுக்குள் மகிமை பெற்ற மாமலை
முருகன் போல்
மற்றொரு தெய்வமில்லையே – குமரய்யா –
மற்றொரு தெய்வமில்லையே!
(தித்திக்கும் தேன் பாகும்)

இப்போ ஒவ்வொன்னா உன்னிச்சிப் பாருங்க... முருகனுக்காக, உன்னித்து எழுந்தன...உணர்வலைகள்!

தித்திக்கும் தேன்பாகும் திகட்டாத தெள்ள முதும் தீஞ்சுவை ஆகவில்லையே ஸ்ரீ தீஞ்சுவை-ன்னா என்ன?

தேன்பாகு, தெள்ளமுது எல்லாம் சுவையாத் தான் இருக்கு! ஆனால் 'தீஞ்சுவை'யா?

அத்தரும் ஜவ்வாதும் அள்ளியே பூசிடினும் அங்கம் மணக்கவில்லையே ஸ்ரீ என்ன அங்கம்? எப்படி மணக்கும்?

முத்தும் இரத்தினமும் முத்திறைப் பசும் பொன்னும் முதற் பொருள் ஆகவில்லையே ஸ்ரீ முதற் பொருள் எது? நீங்காத செல்வம் தான் முதற் பொருள்! அது எது?

எண்ணற்ற தெய்வங்கள் எத்தனை இருந்தாலும் எண்ணத்தில் ஆடவில்லையே ஸ்ரீ எண்ணற்ற தெய்வங்களா? ஒன்றே குலம் ஒருவனே தேவன்-ன்னு அல்லவா கேள்வி? :)

ஏன் முருகனைத் தவிர வேறு எந்த தெய்வ வடிவமும் எண்ணத்தில் ஆடலை-ன்னு பாடணும்? :) சொல்லுங்க பார்ப்போம், சொல்லுங்க!

*- ரவிசங்கர்*

கைதட்டும் பத்து விரல்களாய் இருப்பதை – விட கண்ணீர் துடைக்கும் ஒற்றை விரலாய் இருப்பது நல்லது!

- என்.மீனா

நண்பர்களே
ஒன்னு சொல்றேன் கேட்டுக்கோ
ஒடம்புல சுகரும் மனசுல பிகரும்
இருக்குறவன் என்னைக்கும்
நல்லா தூங்குனதா
சரித்திரமே இல்லை

- அஜீத்

## அந்த 1000 பொய்கள் என்ன?

எனக்கு ஒரு சந்தேகம் ஆயிரம் பொய்யை சொல்லி ஒரு கல்யாணம் கட்டலாம் எனச் சொல்கிறார்கள் அந்த ஆயிரம் பொய்கள் என்ன?

1. பெண் குடும்பக் குத்து விளக்கா இருப்பாள் என்பது. (குத்துவிளக்கே என்னென்று தெரியாததா இருக்கும்.)

2. மாமியாரை தாய் போல் கவனிப்பாள் என்பது. (மாமியாரோட எரிஞ்சு விழுகிறதையே தொழிலா வைச்சிருக்கும்.)

3. கணவனே கண் கண்ட தெய்வம் என்பதாய் மதிப்பாள் அன்பா கவனிப்பாள் என்பது. (கணவனுக்கு பூரிக்கட்டையால அடிக்கிறதா இருக்கும்.)

4. மணமகனின் சகோதர சகோதரிகளுக்கு நல்ல தாயாக இருப்பாள் என்பது. ( குடும்பத்தில ஒற்றைப் பிள்ளையா இருக்கும்.)

5. பெண்ணுக்கு நல்லா பாட வரும் என்பது. (குரலை கேட்டா ஆடிப் போயிடுவாங்க.)

6. பெண் நல்ல புத்திசாலி என்பது. (மகா மட்டமா இருக்கும்.)

7. மேக்கப் போடாமலே அவள் வடிவு என்பது. ( ஒரே களிம்பு பூசின மூஞ்சியா இருக்கும்.)

8. நாட்டியம் டான்ஸ் தெரியும் என்பது. (டான்ஸ் வரும்.. ரோட்டில நின்று கூத்தடிச்சதா இருக்கும்.)

9. பெண் ஓரளவுக்கு படிச்சவள் என்பது. (படிச்சிருப்பா ஆனால் அதை பாவிக்கவே தெரியாது இருக்கும்.)

10. ஒரு ஆம்பிளையளையும் அவள் முந்தி ஏறெடுத்தே பார்த்ததில்ல குனிந்த தலை நிமிர்ந்ததில்லை என்பது. (நிறைய போய் பிரண்ட்ஸ் வைச்சிருந்த சுந்தரியா இருக்கும்.)

11. குடும்பத்தை நல்லா கவனிப்பாள் என்பது. (குடும்ப முன்னாவே என்னென்று விளங்காததா இருக்கும்.)

12. நல்லா சமைப்பாள் என்பது. (தனக்கே ரீ கூட போடத் தெரியாததா இருக்கும்.)

13. சேலை கட்டத் தெரியும் என்பது. (சேலைன்னா என்னென்று கேக்கும்.)

14. தமிழ் கொஞ்சம் கொஞ்சம் பேசத் தெரியும் என்பது. (தமிழா.. அது அப்பா அம்மா பேசுறது என்றும்.)

15. ஊரில பெரிய பள்ளியில் படிச்சவள் என்பது. (பிரைவேட் ஸ்கூலில.. காசு கொடுத்து ஓரிரண்டு வருடங்கள் படிக்க விட்டிருப்பினம்., போய் பிரண்ட் தொல்லை தாங்காம.)

16. ஆங்கிலம் நுனி நாக்கில தவழும் என்பது. (வரும் வரும்.. எல்லாம் f***, b***** போன்ற தூசணமா வரும்.)

17. வருமானத்துக்கு ஏற்ப சமாளிச்சு குடும்பம் நடத்துவாள் என்பது. (எவ்வளவை கஸ்டப்பட்டு உழைச்சாலும்., என்னத்தை உழைக்கிறா என்று கேட்டு திட்டுத்தான் விழும்.)

18. பூப் போல வளர்ந்தவள், கஸ்டம் தெரியாமல் வளர்ந்தவள் என்பது. (கஸ்டப்பட்டு வளர்ந்திருக்குங்கள் ஆனால் அதை மறைச்சிடுவாங்க.)

19. தாயை விட்டை பிரிஞ்சு இருந்ததில்ல அவள் என்பது. (தாயை என்ன வீட்டை விட்டே ஓடினதா இருக்கும்.)

இன்னும் வரும்

*- நெடுக்காலு போவான் (யாழில்)*

## கருணாநிதியின் வேண்டுகோளுக்கு இணங்க செம்மறி மாநாட்டுக்கு மாண்புமிகு நடிகை நமிதா எழுதிய கவிதை



நான்
கவிதை சொல்லுது
நீ கேக்குது..!

நான்
காலையில் எழும்புது
காப்பி குடிக்குது
யோகா செய்யுது
பாட்டு கேட்குது
பீச்சுக்கு போகுது
லேசா நடக்குது....!

அலை வருது
கால தொடுது
நண்டு ஓடுது
நாயும் ஓடுது....!

காற்று வீசுது
ஆடை விலகுது
கூட்டம் சேருது
போலீஸ் வருது....!

நேரம் போகுது
மொபைல் சிணுங்குது
ஹலோ சொல்லுது
அம்மா திட்டுது....!

மேகம் கறுக்குது
மின்னல் அடிக்குது
மழை பெய்யுது
உடை நனையுது....!

உடல் குளிருது
கடல் இரையுது
வெள்ளம் நிக்குது
உள்ளம் நடுங்குது....!

தண்ணீர் குடிக்குது
தனியா நடக்குது
மச்சான் பாக்குது
பயமா இருக்குது....!

வீட்ட ஓடுது
நல்லா குளிக்குது
ஜூஸ் குடிக்குது
சூட்டிங் போகுது....!

படம் நடிக்குது
பைசா வாங்குது
பெட்டி நிறையுது
பேட்டி கொடுக்குது....!

மாநாட போகுது
மயிலாடி வருது
நல்லா சாப்பிடுது
நல்லா தூங்குது
கனவு காணுது
கவிதை முடியுது...!
குட் நைட் மச்சான்...!

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
020 7043 4319
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**

# தயவு செய் நிறுத்து!

'உலர்ந்த தமிழன் மருந்துக்குக் கூட அகப்படமாட்டான்' என்று கசப்புடன் பாரதியார் வசன கவிதை சொன்னார். இந்த 'உலர்ந்த தன்மை' எமக்குத் தான் இருக்கிறதா அல்லது உலகில் எல்லா இனங்களுக்கும் இருக்கிறதா என்பதை என்னால் அறுதியிட்டுக் கூற முடியவில்லை. ஆனால் இப்போது மிக உலர்ந்த தமிழராக ஒன்றுக்கும் உதவாத தமிழராக புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் நாம் ஆகிப்போனோம். இப்பண்பாடு நம் ரத்தத்தில் ஊறியிருக்கிறதோ மரபணுவில் செறிந்திருக்கிறதோ என்பதும் தெரியவில்லை.

கோபமும் வருகிறது, கவலையும் வருகிறது. காறித்துப்பவோ என்ற ஆத்திரமும் வருகிறது காலைப்பிடித்துக் கெஞ்சவோ என்ற வெப்பியாரமும் வருகிறது தயவு செய் நிறுத்து.

நாற்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளை எதற்காக இழந்தோம். இலட்சக்கணக்கான மக்களை எதற்காகக் காவுகொடுத்தோம். எழுத்தில் வடிக்க முடியாத எத்தனை இன்னல்களைச் சந்தித்தோம். உலகில் இப்படி எந்த இனம் தியாகம் செய்திருக்க முடியும். இப்படி எந்த இனம் தீரமுடன் போராடியிருக்கமுடியும். எமக்குக் கிடைத்த அற்புதமான தலைவரும் அவரை அடியொற்றிய அனைத்துப் போராளிகளும் எமக்கு உணர்த்திச் சென்றது என்ன. அவர்கள் சிந்திய வியர்வையும் குருதியும் உயிரும் நமக்கு என்ன செய்தியை விட்டுச்சென்றது.

எதையும் நாம் யோசிக்கின்றோமா? மகத்தான தலைவரை அவரது மகத்தான இலட்சியத்தை அந்த இலட்சியத்தை அடைய வலித்துக் கொண்ட போரை போரில் காட்டிய வீரத்தை வெற்றியை ஓர்மத்தை உணர்வெழுச்சியை யாருக்கும் எவர்க்கும் எதற்க்கும் தலைவணங்காத விட்டுக் கொடுக்காத அத்தைரியத்தை நாம் உணர்கின்றோமா? ஓர் சொட்டாவது நெஞ்சில் நிறுத்தி நினைவு கொள்கின்றோமா? என்ன செய்கின்றோம் நாம்?

களத்தில் கனன்ற வீரத்தை, வெற்றியைக் காட்டி உணர்வெழுச்சியைத் தூண்டி நாரிமுறிய உழைத்தவர்களிடம் பறித்த காசை பதுக்கி வைக்க, பகிர்ந்து அனுபவிக்க இப்போது ஏதோவெல்லாம் பிதற்றுகிறோம். தெரியும் நிச்சயமாகத் தெரியும் நிகழ்ந்தது அனைத்தும் தெரியும் ஆனால் அத்தனையும் மறைத்துக் கொண்டு பாவப்பட்ட ஈழத்துச் தமிழச் சனங்களை பேய்க்காட்ட புறப்படுகின்றோம். எவ்வளவு காலத்துக்கு பரமேஸ்வரனின் உண்ணாவிரதப் போராட்டத்தை அரசியலாக்கலாம். எவ்வளவு காலத்துக்கு சிவந்தனின் நடைப் பயணத்தை அரசியலாக்கலாம்? அதற்க்குமப்பால் அரசியல் என்ன? அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கை என்ன?

இந்த இடத்தில் சிறு விளக்கம். பரமேஸ்வரனினதோ சிவந்தனினதோ ஏனைய இளையோரினது போராட்டங்கள் வலுமிக்கவை. அவர்களது கோரிக்கைகள் மிக்க நியாயமானவை அவர்களது அரசியல் செல் நெறிகளோ அடுத்த கட்டத்துக்கு தாவக் கூடியவை . அவர்களது தியாகம் உழைப்பு மிக மதிக்கப்பட வேண்டியவை. அவர்களுக்கு மிகத் தலை வணங்குகிறேன். ஆனால் அவையாவும் இலக்கு இல்லாத பயணங்களோ என அஞ்சுகிறேன். மற்றும் இவர்களது தியாகச் சூட்டில் சிலர் குளிர்காய்கிறார்களோ எனவும் பெரிதும் அஞ்சுகிறேன்.

எங்களுக்கு முன்னால் இருக்கக்கூடிய அடுத்த அரசியல் வேலைத் திட்டம் என்ன அதைப் பற்றி கொஞ்சம் யோசிப்போமா? அல்லது அவ்வாறு யோசிப்போரையாவது விட்டு வைப்போமா விடமாட்டோம். அவ்வாறு யோசிப்போரை துரோகி என்று தூக்கி எறிவோம் தூரப்போடுவோம். என்னைக் கேட்டால் தமிழில் துரோகி என்ற சொல்லையே முதலில் தூக்கி எறிய வேண்டும் துரோகிகளை ஒழித்துத் தான் தமிழீழ விடுதலைப் போராட்டம் இந்தளவு தூரம் வந்தது என்றால் மீண்டும் மீண்டும் துரோகிகள் எங்கணம் முளைக்க முடியும் அப்படியும் வேறெங்கோ தான் பிழையிருக்கிறது இப்பொழுது இதை எழுதிக் கொண்டு இருக்கும் நானும் துரோகி அப்படித்தானா?

துரோகம் என்ற சொல்லுக்கான வரைவிலக்கணத்தையும் யாரேனும் சொன்னால் நன்றாக இருக்கும் கருத்து முரண்யாடு செயல் முரண்பாடு கொண்டால் அது துரோகமா ? அப்படியெனில் உனக்கு நான் துரோகி என்றால் எனக்கு நீ துரோகியல்லவா? அப்படியென்றால் யாரை யார் சுடுவது யாருடைய முகத்தில் யார் குத்துவது.

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

தயவு செய் நிறுத்து. துரோகி என்ற சொல்லையே முதலில் நிறுத்துவோம். சரியான முறையில் அணுகியிருந்தால் கருணாவையே கூட நாம் தியாகியாக்கியிருக்கலாம். அவர் அத்தனை காரியங்கள் செய்தவர் தான் அவரை துரோகி என்று முத்திரை குத்தி ஒதுக்கி வைத்ததில் ஈழத் தமிழினம் இன்னலடைந்தது தான் உண்மை. இனியாகிலும் இதில் கவனமாயிருப்போம்.

துரையப்பா போய் டக்ளஸ் வந்தது டும் டும் டும்
டக்ளஸ் போய் கருணா வந்தது டும் டும் டும்
கருணா போய் கேபி வந்தது டும் டும் டும்?

இப்போது புதிய துரோகி ஆக்கப்பட்டிருக்கிறார் கே.பி. அவரை நாம் புரிந்துகொள்ள வேண்டும் அவர் சூழ்நிலைக் கைதி அவர் கைதியாக்கப்பட முன்னர் அவர் நினைத்த, செய்த காரியங்கள் மிக நன்று. சரணடைந்த போராளிகளை வெளியே எடுக்க வேண்டும் தலைமறைவான போராளிகளை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். வன்னி மக்களை அவரவர் இடங்களில் மீளக் குடியேற்ற வேண்டும் புலம் பெயர் தமிழர்களுக்கு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் என்ற அமைப்பை உருவாக்கி அதற்காக அணி திரள்வதும், சிங்கள அரசை போர்க் குற்றவாளியாக்குவதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதும் என்கிற அளவில் காரியம் ஆற்றினார். ஆனால் சர்வதேசச் சதி எவ்வாறு எமது போராட்டத்தை அழித்ததோ அதுவே கே.பியையும் கைது செய்து நமது போராட்டத்துக்கும் முற்றுப்புள்ளி வைக்க முயன்றது. இப்போது கே.பியை துரோகி என்று குற்றஞ்சாட்டுபவர்களுக்கு இவையொன்றும் தெரியாதது அல்ல அப்படியாயின் ஏன் அவ்வாறு செய்கின்றார்கள். ஏனென்றால் தமது கையிருப்பையும், தமது இருப்பையும் கவனமாகப் பேணவேண்டுமல்லவா அது தான் காரணம். ஆனால் இவர்கள் ஒன்றை மறந்து விடுகிறார்கள். ஈழத்தமிழ்த் தாயின் ஆன்மாவை அவர்கள் குத்திக் கிழிக்கிறார்கள். ஈழத்தமிழரின் உணர்வை எழுச்சியை கொன்று குழி தோண்டிப் புதைக்கிறார்கள். உரிமைப் போரின் ஆத்துமாவை விற்று காசாக்குகிறார்கள். காலம் இவர்கள் கழுத்தில் கைவைக்கும் கழுத்தை நெரிக்கும் அப்பொழுது உரக்கச் சொல்வோம் இவர்களுக்கு மன்னிப்பே கிடையாது.

இவை என் கோபம் வேதனை இருக்கட்டும் இப்பொழுதும் காலம் போகவில்லை ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். தயவு செய் நிறுத்து. செய்வதற்கு வேறு வேலைகள் உண்டு சிங்கள அரசின் இராஜபக்ச சகோதரர்களை போர்க்குற்றவாளிகளாக அறிவிக்கச்செய்ய வேண்டும் வன்னி மக்களின் மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்த வேண்டும் சரணடைந்த போராளிகளுக்கு விடுதலை வேண்டும் மேலாக நகர்ந்து கொண்டிருக்கும் நாடுகடந்த அரசாங்கத்தை இன்னும் வேகப்படுத்த வேண்டும் இவையே இப்போது எம்முன்னால் உள்ள வேலைகள் அதை விடுத்து வேறு காரியம் எதற்கு வேறு எக்காரியமும் சிங்கள அரசுக்கு துணைபோகும் என்பதை புரியுங்கள்.

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**

*(ஒரு பேப்பருக்காக)*

## மனித இனம்

இன்று உலகில் 5416 பாலூட்டி இனங்கள் உள்ளன. தம் குட்டிகளுக்கு பாலூட்டுவது இந்த இனத்தின் தனிப் பண்பு. அவற்றுள் ஒன்றே ஒன்றான மனித இனம் மட்டும் தன் இரண்டு கால்களால் நடக்கின்றது. இந்த இரண்டு கால் மாற்றம்தான் மனிதனின் தோற்றம். மன்னிக்கவும் படிநிலை வளர்ச்சியில் புதிதாக எதுவும் தோன்றவது இல்லை, ஆகையால் அதை தோற்றம் என்பதிலும் படிமலர்ச்சி மாற்றம் என்பதே சாலப் பொருந்தும். முன் பாதங்களை கைகளாக பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தியதால் விரைவு மாற்றம் ஏற்பட்டு மனிதன் நிலை எங்கோ உயர்ந்து விட்டது..

உயிரியலாளர் உயிரினங்களை இருபெயரால் அழைப்பார்கள். முதல் பெயர் இனப்பிரிப்பு பெயர் (gentic term) இரண்டாவது சிறப்பினப் பெயர். (specific term) இதன்படி மனிதனின் பெயர் ஹோமோ சபியயன்ஸ். 5 இலட்சம் ஆண்டுகள் வரையான உயிர்ச் சுவடு இவ்வினத்திற்கு உண்டு.

இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட திசு மரபுப் பிறழ்வுதான் மனிதனுக்கு பேசும் ஆற்றல் பெற வழி வகுத்தது. *ஹோமோ சபியன்ஸ்* என்றால் லத்தினிய மொழியில் புத்தி கூர்மையுள்ள மனிதன் என்று அர்த்தம். திசுப்பிறழ்வு ஏற்படுத்திய பாரிய மூளை மாற்றம் தற்கால மனிதனை *ஹோமோ சபியயன்ஸ் சபியயன்ஸ்* என்று ஒரு படி மேலே உயர்த்தி விட்டது. இதற்கு இடையில் மூன்று இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து *ஹோமோ சபியயன்ஸ் நியன்டதலென்சிஸ்* என்ற ஒரு இனம் உருவாகி கடந்த 30,000 ஆண்டுகள் வரை எம்முடன் வாழ்ததற்கான உயிர் சுவட்டு ஆதாரமும் உண்டு. நியண்டலென்சிஸ்சின் கலப்பு எம்முள் சிலரிடம் உள்ளதாகவும் சில மனிதவியல் ஆய்வாளர் கூறுகின்றனர். இது சற்று மேல்மட்ட ஆய்வு. எமக்கு அது வேண்டாம்.

முதலில் ஹோமோ இனப்பிரிப்பு பெயருடன் வாழ்ந்த இனம் ஹபிலிஸ். ஆயுதங்களை உபயோகித்த இனமென்றே இதை அழைப்பார்கள். அவர்களுக்கு பின் ஜோயிகஸ் அடுத்து எரக்ரஸ் என்னும் இனம் பற்றிய தகவல் 100 ஆண்டுகளுக்கு மேலாகவும் பரவலாகவும் எம்மத்தியில் கிடைக்கப் பெற்றிருக்கின்றது. இவ்வினம் 10 இலட்சம் ஆண்டுகள் வரை இப்புவியில் வாழ்ந்திருக்கிறது. இவர்கள் உயரத்தில் குறைந்தவர்களானாலும் நடப்பதில் இன்றைய மனிதனைவிடக் கூடுதல் ஆற்றல் கொண்டவர்களாக இருந்தார்கள். கை கால் எலும்புகளைப் பொறுத்த மட்டில் இன்றைய மனிதனுக்கும் இவர்களுக்குமிடையில் வித்தியாசம் குறைவு. இவர்கள் கையாண்ட ஆயுதங்கள் ஹபிலிஸ் உபயோகித்த ஆயுதங்களை விட வலுவானவை. இவர்கள் உலகில் பரந்து வாழ்ந்தார்கள். முதலில் குகை வாழ்வை மேற்கொண்டதும், நெருப்பை உபயோகித்ததும் இந்த இனம்தான். சீனாவின் தலைநகரிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் இவர்கள் வாழ்ந்த சவ்கோரியன் குகை இன்று யுனெஸ்கோவின் தொல் அரும்பெரும் செல்வத்தலங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது. பீக்கிங் மனிதன் என்று அழைக்கப்படும் இந்த இனம் அங்கு 5 இலட்சம் ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளை கவரும் இவ்விடத்திற்குப் போனால் அங்கு எம்மை வரவேற்பது வாசலிலுள்ள மியூசியம்தான். சீன அரசு இந்தக் குகையை பேணிப் பாதுகாக்கிறது. இதே போல் ஜாவா மனிதன் என்ற பெயரில் ஜாவாவிலும் இந்த எரக்ரஸ் இனம் வாழ்ந்துள்ளது. எரக்ஸ்சிற்கு அடுத்ததாக அன்ரெசெஸ்சர், ஹைடில்பேசென்சிஸ், அடுத்து முன்கூறிய நியண்ட தலென்சிஸ் என இனங்கள் வாழ்ந்தன.

மனித இனம் அடைந்த மாற்றத்தை, கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் ஒரு சீரான முறையில் வரிசைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஏற்பட்ட படிநிலை வளர்ச்சி சம்பந்தமாக கோட்பாடு உறுதியாக உள்ளது. சில கேள்விகளுக்கு முழுமையான பதில் அளிப்பதாயின் பல தரவுகள் இன்னும் தேவைப்படுகின்றது. உதாரணத்திற்கு முந்திய இனங்கள் சபியன்ஸ்சின் ஆரம்ப காலத்தில் வாழ்ந்தார்கள், எவ்வளவு காலம் வாழ்ந்தார்கள் ஒருவரை ஒருவர் சந்தித்த போது என்ன நடந்தது போன்ற கேள்விகளுக்கு தெளிவான விடை பெறுவது சிரமமாக உள்ளது. ஆனாலும் 2 இலட்சம் ஆண்டுகளுக்கு உட்பட்ட ஹோமோ சபியன்ஸ் சபியன்ஸ் இனம்தான் இன்று உலகின் மூலை முடுக்கு எங்கும் வாழுகிறது. நாங்கள் எங்களுக்குள் கறுப்பு, வெள்ளை, மஞ்சள் (சீனர்), சிவப்பு (மேற்கிந்தியர்) நெட்டையர் பிக்மீஸ் என்று பலவகையாகப் பிரிக்கலாம், ஆனால் எல்லோருமே உயிரியல் மொழியில் ஹோமோ சபியன்ஸ் சபியன்ஸ் தான். மருந்துக்குக் கூட வேறு எந்த இனமும் இல்லை. வேறு இனங்களை நாம் விட்டு வைக்கவில்லைப் போலும்.


தமிழ் இணையப் பரப்பில் புதிய வரவு

செய்திகள் | அரசியல் | ஆய்வு

விவாதம் | இலக்கியம் | சமூகம் | சினிமா

காலத்தின் பதிவாய்

இனத்தின் குரலாய்...

ponguthamil.com



# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பி வையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 647-724-4188
Fax: 416-438-7855

email: info@orumanam.com



## மணமகள் தேவை

1. 28 வயது, 6'2", Canadian Citizen, well employed, மணமகன் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேடுகின்றார். Ref: 1203

2. 24 years, 5'9", working in a CCTV Company in malaysia, is looking for a suitable bride in Europe. Ref: 1202

3. 31 years, 5'9", Indian Nationality, BA Physicology, seeks a suitable bride. Ref: 1271

4. 35 years, 6'0", British Citizen, MSC in computers and well employed, seeking a matching bride. Ref: 1191.

5. 37 years, 5'10", British Citizen, Accountant, looking for a matching bride. Ref: 678

6. 37 years, 5'10", in uk since childhood, selfemployed, looking for a suitable partner. Ref: 1199.

7. 40 வயது, 5'9", கனடா பிரஜாவுரிமை பெற்ற, வங்கியில் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1231

8. 55 வயது, 5'6", இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Heathrow Airport இல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref:1235.

9. 42 வயது, 5'6", British Citizen, இலண்டனில் IT Company ல் வேலை செய்யும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1213.

10. 42 வயது, 5'6", Swiss Citizen, Engineer தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1167.

11. 49 years, 6', living in France, looking for a suitable bride. Ref: 271

12. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 27 வயது, 6" உயரம், Financial Sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 587.

13. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 29 வயது, 5'4" உயரம், Accountant ஆக பணிபுரியும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1130.

14. NHS இல் வேலை செய்யும் 26 வயது, 5'7" உயரம் மணமகன் தகுந்த மணமகளை இலண்டனில் தேடுகின்றார். Ref: 1096.

15. MSC in Civil Engineer, 29 வயது, 5'6" உயரம் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1091.

16. Age 30, tall 6", Studied Bio Medicine, seeks a suitable bride. Ref:1106.

17. கனேடிய, இலண்டன் பிரஜாவுரிமைகளைப் பெற்ற வயது 36, உயரம் 5'9" Auto Mobile Engineer ஆக வேலை செய்யும் மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1084.

18. Age 31, tall 5'7", Living in UK, seeks a bride in UK. Ref: 686.

19. ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற 35 வயது, 5'5" உயரம் உடைய மணமகன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1055.

20. Age 27, tall 5'4", Living in Colombo, speaking disablity, seeks a suitable bride. Ref: 1137.

21. இந்தியாவில் வசிக்கும் 26 வயது, 6'5" உயரம் உடைய மணமகன் இலண்டனில் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். Ref: 1090.

22. Self-Employed, 41 age, 5'7" tall, seeks a suitable bride. Ref: 1092.

23. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 43 வயது, 5'6" உயரம், Financial sector இல் பணிபுரியும் மணமகன் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1135.

24. Age 33, tall 5'9", seeks a suitable bride with Europe citizenship. Ref: 1148.

25. Swiss Citizen, 42 age, 5'6" tall, looking for a suitable bride. Ref:1167

26. இலண்டனில் பிறந்து வளர்ந்த வயது 33, உயரம் 5.11" Doctor மணமகனுக்கு நன்கு படித்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1006.

27. Age 27, 5.7", Vegetarian, Engineer is looking for a suitable vegetarian bride. Ref: 1013

28. American Citizen, Age 32, Tall 5.8", doing network & security final year, working as a Supervisor in a compony in USA, seeks for a educated bride. Ref: 1020

29. Age 39, Tall 5.9" is looking for a suitable bride. Qualification and visa is not a problem. Ref: 972.

30. இலண்டன்பிரஜாவுரிமை பெற்ற வயது 45, உயரம் 5.10" வைத்தியராக பணிபுரியும் மணமகனுக்கு நன்கு படித்த தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 454.

31. வயது 33, உயரம் 5.6" மணமகனுக்கு தகுந்த மணப்பெண்ணை தேடுகின்றனர். Ref: 880.

32. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, வயது 35, உயரம் 5.8, Export Business செய்து கொண்டிருக்கும் மணமகனுக்கு தகுந்த பெண்ணைத் தேடுகின்றனர். Ref: 948.

33. France பிரஜாவுரிமை பெற்ற வயது 48, உயரம் 5.3" கொண்ட மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 966.

34. Age 29, Tall 5.8", Indian Nationality, working as a Software Consultant for Investment Bank in London, is looking for a bride in Europe. Ref: 879.

35. வயது 29, உயரம் 5.8", இலங்கையில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.Ref: 820

36. British Citizen, 39 years, Tall 5.7", working for London Transport and trainee helicopter pilot is looking for a suitable bride. Ref: 1398

37. வயது 30, 5.10" உயரம் உடைய மணமகனுக்கு இலண்டனில் நிரந்தர பிரஜாவுரிமையுடைய மணப்பெண்ணை தேடுகின்றனர். Ref: 867

38. Accountant, Age 29, tall 5.7", British Citizen is looking for a well educated bride. Ref: 868

39. Age 29, 5.8", working as a Seaman in Sri Lanka, seeks a suitable bride with European citizenship. Ref: 874

40. Age 27, tall 5.2", seeks a educated bride with UK citizen. Ref: 889

41. Age 46, tall 5.4", PR in UK, seeks a suitable bride. Ref: 890

42. Doctor, Age 31, tall 6.1", British Citizen, seeks a well educated Roman Catholic bride. Ref: 925

43. Age 26, tall 5.8", bachelor degree in Business management is looking for a suitable bride with UK visa. Ref: 901

44. வயது 42, உயரம் 5.10" மணமகனுக்கு, இலண்டன் பிரஜாவுரிமை உள்ள தகுந்த மணப்பெண்ணை தேடுகின்றார். Ref : 912

45. Widowed, Age 40, tall 6", is looking for a suitable bride with UK citizenshipholder. Ref: 911

46. Age 50, tall 5.4", British Citizen, Widowed is searching for a suitable bride. Ref: 914

47. Age 32, tall 5.6", seeks for a bride with UK visa. Ref: 934

## மணமகன் தேவை

1. 24 வயது, 5'3", BSc Degree holder in Mathematics, படித்த, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றார். Ref: 1243.

2. 28 வயது, 5'0", மணமகள் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1222

3. 41 years, 5'5", finished MBA in UK, seeks an educated groom. Ref: 1230.

4. 38 வயது, 5'4", Doctor, நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றார்.Ref: 1232

5. 46 வயது, 5'4", B.Sc. in Science, இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற மணமகள் தகுந்த துணையைத் தேடுகின்றார். Ref: 1667.

6. 43 years, 5'2", working at univercity in sri Lanka, is looking for a grrom with Europe Citizenship. Ref: 1246.

7. 46 வயது, 5'2", British Citizen, தகுந்த மணமகனைத் தேடுகின்றார். Ref: 1210

8. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற 28 வயது, 5'2" உயரம், BSC Degree in Computer Science & Business Management படித்த பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1160.

9. இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும் 22 வயது, 5" உயரம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1040.

10. Accountant, British Citizen, 28 age, 5'5" tall, is looking for a well educated groom. Ref: 1102.

11. Nowagien Citizen, 27 age, 5'4" tall, is looking for a suitable groom. Ref: 1104.

12. Royal Scottish Bank Team Leader ஆக இருக்கும் 28 வயது, 5'5" உயரம் கொண்ட மணமகள் Accountant அல்லது IT Qualified மணமகனைத் தேடுகின்றார். Ref: 871

13. British Citizen, 34 age, 5'2" tall, working as a Information Technology, seeks a well educated & employed groom. Ref: 1076.

14. Australian PR, Accountant, 30 age, 5'10" tall, is looking for a educated groom. Ref: 1120.

15. Living in Sri Lanka, a widow, 36 age, 5'3" tall, seeks a matching groom in UK or Sri Lanka. Ref: 1166

16. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Case Progress Officer ஆக Majestic Courtஇல் வேலை செய்யும் வயது 28, உயரம் 5.2" கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 963.

17. British Citizen, Age 21, Tall 5.5" LLB finished, Looking for a well educated groom. It's better if the groom was born in UK or brought up in UK. Ref: 992.

18. Age 26, Tall 5.3", Finished her MA in French and English, is seeking an educated groom in UK. Ref: 897

19. UK PR, பல்கலைக் கழகத்தில் மூன்றாவது வருடம் படித்துக் கொண்டிருக்கும், வயது 22, உயரம் 5" பெண்ணுக்கு நன்கு படித்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1008

20. Working in a Audit Firm in Sri Lanka, Age 29, Tall 5.3", is looking for a Roman Catholic groom age between 30 – 36. Ref: 913.

21. இலங்கையில் வசிக்கும் வயது 21, உயரம் 5.2" உடைய பெண்ணுக்கு இலண்டன் அல்லது கனடா குடியுரிமை பெற்ற தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 956.

22. வயது 34, உயரம் 5.3" Sun TVஇல் Web Designer ஆக வேலை செய்யும் பெண்ணுக்கு Europeஇல் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 991.

23. வயது 26, உயரம் 5.2" IT fieldஇல் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஐரோப்பிய பிரஜாவுரிமை பெற்ற மணமகனைத் தேடுகின்றனர். prefer in UK, Canada & Australia. Ref: 1007.

24. வயது 40, உயரம் 5.5" இலங்கையில் வசிக்கும். செவ்வாய் குற்றம் உள்ள பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 819

25. Age 37, Tall 5.3", doing Administrative Managementin UK, is looking for a groom in Europe. Ref: 1026

26. இலங்கையில் வசிக்கும் வயது 47, உயரம் 5.6" செவ்வாய் தோஷம் கொண்ட பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1027

27. 27 வயது, 5.8" உயரம், Engineer பெண்ணுக்கு, இலண்டன் பிரஜாவுரிமையுடைய நன்கு படித்த மணமகனை அவருடைய பெற்றோர் தேடுகின்றனர். Ref: 865

28. British Citizen, Age 28, tall 5", Pharmacist is looking for a well educated groom. Ref: 866

29. French Citizen, Accountant, Age 29, tall 5.2", is looking for a well educated groom. Ref: 881

30. Age 26, tall 5.3", completed BSC Microbiology and doing MBA now in India, looking for a well educated groom in Europe. Ref: 882

31. வயது 26, உயரம் 5'.இலங்கையில் ஆசிரியை ஆக பணிபுரியும் செவ்வாய்க் குற்றம் உடைய பெண்ணுக்கு படித்த UK இல் வசிக்கும் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 607

32. Age 35, tall 5.2", Finished her LLB Master Degree, looking for a well educated groom with UK, Canadian or Australian citizenship. Ref: 887

33. French Citizen, Age 52, tall 5.4" is looking for a suitable groom. Ref:891

34. British Citizen MSc in IT, Age 37, tall 5.3" is looking for a well educated groom. Ref: 895.

35. Age 40, 5.2", doing MSC in formulation science, is looking for a suitable groom UK PR or citizenship. Ref: 899

36. English teacher in Sri Lanka, Age 28, tall 5.5" seeks a suitable groom in UK. Ref: 910

37. Age 34, tall 5.6", living in Sri Lanka, self employed, looking for a matching groom. Ref:- 822

38. Age 49, tall 5.6", finished her hotel management, living in Colombo, looking for a suitable groom in UK. Ref:- 804

39. Age 49, 5.6", Canadian Citizen, finished her hotel management, is looking for a matching groom. Ref:- 805

40. இலண்டன் பிரஜாவுரிமை பெற்ற, Doctor வயது 27, உயரம் 5.4" கொண்ட பெண்ணுக்கு அவரது பெற்றோர் நன்கு படித்த தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். Ref:- 824

41. Age 36, tall 5.3", Engineer is looking for a well educated groom. Ref: 825

42. Age 30, 5.2" woking as a teacher in Sri Lanka, looking for a groom in abroad. Ref:- 736

43. Age 33, 5.6" tall, A/L finished bride is looking a suitable groom with UK citizenship. Ref:- 826

44. Age 30, 5.8", working as an accountant in Sri Lanka, looking for a matching groom abroad. Ref: 676

45. British Citizen, Age 28, 5.7", Medical Graduate, looking for a graduate groom. Ref: 722.

46. British Citizen, Age 28, 5.6" Assistant Accountant, looking for a suitable groom. Ref:- 585.

47. 25 வயது 5" உயரம் உடைய, Colombo வில் வசிக்கும் பெண்ணுக்கு அவரது பெற்றோர் சிறந்த படித்த மணமகனை தேடுகின்றனர். Ref:- 639

48. Swiss பிரஜாவுரிமையுடைய 25 வயது 4.11" உயரம் உடைய Technical Radiography & Accountant படித்த பெண்ணுக்கு மணமகன் தேவை. Ref:- 608

49. French citizen, 30 years, 5.4", MSc in immunology, seeking a matching groom. Ref:- 615

50. German citizen, working as Architect and self employed, Age 31, 5.4". parents is looking for a suitable groom. Ref:- 589

51. 29 வயது 5.5" உயரமும் இலங்கையில் வசித்து வருபவருமான பெண்ணுக்கு அவருடைய பெற்றோர் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 698

52. கனடாவில் Doctor ஆக பணிபுரிந்து வரும் 29 வயதும், 5.5" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. Ref:- 602

53. இலங்கையில் Teacher ஆக பணிபுரியும் 36 வயது, 5.4" உயரமுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றார்கள். Ref:- 682

54. இலங்கையில் பொதுச்சேவையில் ஈடுபட்டு வரும் 32 வயது, 5.3" உயரம் உடைய மணமகளுக்கு UK, Canada அல்லது Europe குடியுரிமையுடைய மணமகன் தேவை. Ref:- 654

55. Colomboவில் Doctor ஆக பணிபுரிந்து வரும் 34 வயதும், 5.4" உயரமும் உடைய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை. Ref:- 734

**இணையத்தில் மேலதிக விபரங்கள்**
**www.orumanam.com**

# தமிழர்களின் இன விருத்தியை அதிகரிக்க என்ன செய்யலாம்?

தாயகத்தில் எமது இன வளர்ச்சி சிதைந்து வருகின்ற வேளையில் ஏனைய இனங்களின் வளர்ச்சி பெருகி வருகின்றது. எமது இனத்தினை விருத்தி செய்ய புலம் பெயர்ந்தவர்கள் தான் முயல வேண்டும். ஆனால் இங்கு பெரும்பாலானவர்கள் இரு பிள்ளைகள் மாத்திரமே பெற்றுள்ளார்கள். இது ஏன்? ஊரில் தான் பொருளாதார பிரச்சனை. சீதனப் பிரச்சனை. இங்குதான் அப்படியில்லையே. அரசாங்கமே பிள்ளைகளை வளர்ப்பதற்கு உதவிபுரிகின்றது. வேறு என்ன பிரச்சனைகள் உள்ளன என விளங்கவில்லை. இது தொடர்பில் எமது மக்களை விழிப்பூட்ட என்ன செய்யலாம்?

*- செந்தமிழாளன்*

நான் நினைக்கிறேன் இங்கு ஆண், பெண் இருவரும் வேலைக்குப் போறவர்கள்...அதிகம் பிள்ளை பெற்றால் யார் பிள்ளைகளைப் பராமரிப்பது அது தான் பிரச்சனை...அவர்களிடம் போய் கனக்க பிள்ளை பெற சொன்னால் நாங்கள் என்ன ஊரில போய் இருக்கப் போறமா எனக் கேட்பார்கள்.

*- ரதி*

இரண்டு பேர் சேர்ந்து 2 பிள்ளை பெறுவது என்பது இன அதிகரிப்பாக இல்லாமல், சமச்சீராகவே செல்கின்ற நிலை. இது உண்மையில் மாறவேண்டும்.

*- தூயவன்*

தமிழர் குடும்பமொன்று குறைந்தது மூன்று பிள்ளைகளை பெற வேண்டும். தமிழினத்தின் எதிர்காலத்துக்கு இது மிக அவசியம். மிகவும் ஆழமாக சிந்தித்து, ஒவ்வொருவரும் இலகுவாக பங்களிப்பு செய்யக் கூடிய ஒரு விடயம்.

*- ஆராவமுதன்*

தற்போதைய இன அழிப்பு வீதத்தை சரி செய்ய குறைந்தது ஐந்து (05) பிள்ளைகளை தமிழ்த் தம்பதியினர் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*- ஆசான்*

எங்கடை சனத்துக்கு முதல்லை வீடு வாங்குறதுதான் முக்கியம். அதுக்கு பிறகு, முக்கி முக்கி ஒண்டை பெத்துப் போட்டு, அதை நாலுபேருட்டை வளக்க விட்டுட்டு, தாயும் தேப்பனும் வேலை வேலை எண்டு திரிஞ்சு அலைஞ்சு வீட்டுக் கடனும் முடிய, பெத்த பிள்ளையும் தன்ரை பாட்டுக்கு போக, கடைசியிலை பஞ்ச புராணம் பாடி காலத்தை கழிக்க வேண்டியதுதான்

அதோடை

நாலைஞ்சு எண்டு பெத்தால் எங்களை பட்டிக்காடு எண்டு நினைக்க மாட்டாங்கள்?

*- குமாரசாமி*

முதலில் தமிழன் என்ற அடையாளத்துடன் இருக்க வேண்டும். 2. 3 சந்ததிகளுக்குப் பின்னால் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் எம்மவர்களை இந்தியர்கள் என்றே அழைக்கப்படும் அபாயம் இருக்கிறது. 2,3 சந்ததிகளுக்குப் பிறகு எம்மைத் தமிழர் என்று ஒருவரும் அழைக்க மாட்டார்கள்.

*- கந்தப்பு*

அப்ஸ் ஏன் ஆட்டுக்குள் மாட்டை கொண்டு வாறீங்கள். இனவிருத்தியை பற்றி கதைக்கிறாங்கள், நீங்கள் என்னடா என்றால் இந்தியாக்காரனாகி விடுவான் தமிழன் என்று கவலை படுகிறீயள்....

2,3 சந்ததிக்கு பிறகு நாங்கள் இருக்கமாட்டம் தானே பிறகு ஏன் உதுகளை நினைச்சு பிறசரை கூட்டுறீயள்..

2,3 சந்ததிக்கு பிறகு தமிழ்நாட்டு தமிழனே தமிழன் என்ற அடையாளம் இழந்திடுவான் பிறகு நாங்கள் மட்டும் ......

*- ஜில்*

இப்ப மட்டும் என்னவாம்.. இனவிருத்தி செய்யாமலே கிடக்கினம்.. வெளிநாடுகளில் பெனிவிட்டுக்காகவே இன விருத்தி செய்யுற முதன்மையான ஆட்களில்.. முஸ்லீம்களை அடுத்து தமிழர்கள் தான் நிப்பினம் என்று நினைக்கிறன்..!

ஆரோக்கியமான இன விருத்தி அவசியமே அன்றி சும்மா பெத்துப் போட்டுக் கொண்டிருந்தா வேலைக்காகாது. அது இனத்துக்கு பாரமாகவே முடியும்..!

சிங்களவனிடம் வளம் நிலம் ஆட்சி இருக்கு.. பெறுறான். இதுகள் நாடோடிகளிடம் என்ன இருக்கு..???

*- நெடுக்காலபோவான்*

அனைவரும்.. இரவு கண்விழித்து...தினமும் 'மிட்நைட் மசாலா'... திரைப்பட பாடல் தொகுதியை இரவு காணுங்கள்... இனம் தன்னால் விருத்தியடையும்..

*- புரட்சிகர தமிழ்தேசியன்*

பிள்ளைகளை பெறுவதை விட அவைகளை நல்ல மாதிரி வளர்க்க வேணும் நாளைக்கு அவங்கள் எங்களை பார்த்து நானா பெறச் சொல்லி கேட்டன் என்டு கேட்கிற நிலமையில வைக்க கூடாது. அதனால எங்கட வேலையளுக்கு மத்தியில் அவர்களுடனும் காணுமான அளவு நேரம் செலவளிக்க வேணுமெண்டா 2 தான் சரி கன பிள்ளையள் இருந்தா இது கஷ்டம் என நினைக்கிறன்.

*- இன்னிசை*

உலகத்திலேயே பெரிய செல்வம் பிள்ளைச் செல்வந்தான். 4,5 பிள்ளைகள் இருந்தால் அவர்களது பிற்கால வாழ்க்கைக்கு மிகவும் இன்றியமையாதது.

*- குமாரசாமி*

தென்னைய நட்டா இளநீரு பிள்ளையை பெற்றா.. கண்ணீரு. இப்படியும் சொல்லுறாங்க

*- நெடுக்காலபோவான்*

குழந்தைகள் பெற்றுக் கொள்வது நல்லதா? அல்லது அங்கு போரினால் பெற்றோரை இழந்து நிற்கும் பாலகர்களைத் தத்தெடுத்துக் கொள்வது நல்லதா? என்று யோசிக்கிறேன். கல்யாணம் கட்டாமல் தனியாக இருந்தால் நிச்சயம் என் முடிவை நிறைவேற்றுவேன்! ஆனால் நமக்கு வந்து சேருவதும் நம்மைப் போலவே நினைக்கணுமே!!..

*- தமிழ் தங்கை*

உறவுகளே சகோதர சகோதரிகளே சிங்களவன் திட்டம் போட்டு எமது இனத்தை அழித்துக் கொண்டிருக்கிறான். குழந்தை பெற்றுக் கொள்ளக் கூடியவர்கள் குறைந்தது நான்கு குழந்தைகளாவது பெற்றுக் கொள்ளவும்.

இது எமது நாட்டுக்கு நீங்கள் செய்யும் உதவியாக நினையுங்கள். இதில் நான்கு ஐந்து என்றெல்லாம் கதைக்க கேட்க நன்றாகத் தான் இருக்கு. ஆனால் நடை முறையில் திருமணம் செய்ய முன்னரே கர்ப்பத் தடையைப்பற்றி நன்கு ஆராய்ந்து ஐந்து ஆறு வருடங்களுக்கு குழந்தையே பெறக் கூடாதென முடிவெடுக்கிறார்கள். பின்னர் குழந்தை வேணும் என்கிற போது குழந்தைப் பாக்கியம் இல்லாமல் டாக்டர்கள், கோவில் குளம் என்று கண்ணீரும் கம்பலையுமாக பணத்தை செலவு செய்து அலைகிறாங்க.

*- ஈழப்பிரியன்*

புலத்தில் அவரவர் வசதிக்கேற்ப எத்தனை குழந்தைகள் வேண்டுமானாலும் பெறலாம்.

ஆனால் குறைந்த பட்சம் தமிழில் பேசுமளவிற்காவது அவர்களைத் தமிழர்களாக வளர்ப்பது முக்கியம்.

*- ஈழப்பிரியன்*

மொத்தமாக உலகில் சனத் தொகைப் பற்றாக்குறை இல்லை. சனத்தொகை அதிகரிப்பதால்தான் ஆபத்து. உணவுப் பற்றாக்குறை, வேலைவாய்ப்பு, இருப்பிட வசதி, இயற்கை அழிவு, சுற்றாடல் மாசுபடுதல் போன்றனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

*- இணையவன்*

'நாங்கள் எத்தனை பிள்ளை பெறுகிறோம் என்பது ஒரு முக்கியமான விடயம் கிடையாது. பெறுவதில் எத்தனையை தமிழராய் வளர்க்கப் போகின்றோம் என்பதுதான் முக்கியம்'

*- வாசகன்*

*(நன்றி யாழ்)*

உங்கள் உடனடித் தேவைக்கு கையில் பணம் இல்லை என்ற கவலையா?



உங்களுக்கு கிடைக்கும்

- Benefit Cheques
- Inland Revenue
- Insurance Refund
- Wages
- Commissions
- Lottery Winning Cheques
- A/C payee

இவற்றை 4% - 6% வரையான கட்டணத்துடன் உடனே பணமாக்கிக் கொள்ள அழையுங்கள்.

020 7243 1417

நாங்கள் இருக்கும் போது நீங்கள் இப்படி தலையைப் பிய்க்க வேண்டிய அவசியமில்லை.

முகவர்கள் தேவை

பிரித்தானியாவின் எந்த மூலையில் நீங்கள் வர்த்தக நிறுவனம் வைத்திருந்தாலும் நீங்களும் முகவர் ஆகலாம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

020 7243 1417



Cheque Line

31, Queens Way, London, W2 4QJ.

## தமிழ் சினிமா!



*தமிழ் சினிமா ஹாலிவுட்டிற்கு இணையான சவால் விடும் தரத்தில் இருக்கும்.*

மேலே சொன்ன வார்த்தைகளை அட்சரம் பிசகாமலும், அல்லது அதே அர்த்தம் தொனிக்கும் வார்த்தைகளாலும் நாம் அடிக்கடி கேட்டதுண்டுதான். தமிழ் சினிமா இயக்குனர்கள் ஹாலிவுட் படங்களின் சிடிக்களை பார்த்து படமெடுத்தால் அதுவும் உலகத்தரம் என்று நினைப்பது வாடிக்கை. அல்லது வேடிக்கை. ஆனால் நிஜமாகவே தமிழ் சினிமாவின் சில துறைகள் உலகத்தரத்தில் மிளிரத்தான் செய்கிறன. அவை பெரும்பாலும் தொழிநுட்பம் சார்ந்த கலைஞர்களின் கைவண்ணமாக இருக்கிறது.

இன்றைய தமிழ் சினிமாவில் மிகச் சிறந்து விளங்கும் துறையென்றால் ஒளிப்பதிவை சொல்லலாம். பாலு மகேந்திரா, பிசி.ஸ்ரீராமில் ஆரம்பித்து ரவி.கே.சந்திரன், ராம்ஜி, பாலசுப்ரமணியம், ரத்னவேலு, நீரவ் ஷா, ரவி வர்மன், மணிகண்டன், திரு என நீளும் பட்டியல் மனோஜ் பரமஹம்சா வரை செல்கிறது. ராவணன் போன்று கண்டெண்ட்டில் மோசமான படங்களில் கூட ஒளிப்பதிவாளர்களின் உழைப்பு அசாத்தியமானது. அதன் அழகை, நேர்த்தியை திரையில் வெகுவாக ரசிக்க முடிகிறது. இந்திய சினிமாவின் ஆகப் பெரிய இண்டஸ்ட்ரியான பாலிவுட்டில் கூட தமிழ் ஒளிப்பதிவாளர்களின் ராஜ்ஜியமே தற்போது நடக்கிறது.

இதற்கு அடுத்து இசையை சொல்லலாம். ஆனால் இளையராஜா, ரகுமானிற்கு பிறகு உலகத்தரத்தில் யாரும் வரவில்லையென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஹாரீஸ் ஜெயராஜும், யுவனும் அதற்கு தகுதியானவர்கள் என்றாலும் அப்பட்டமான காப்பிகள் மூலம் அத்தகுதியை இழக்கிறார்கள். இருந்தாலும் இந்த இரண்டு மேதைகள் வாழும் வரை எவ்வளவு தரமான படமென்றாலும் அதற்கேற்ற இசையை எதிர்பார்க்கலாம். இந்தியா முழுவதும் தேடினாலும் இந்த இரண்டு லெஜெண்ட்களுக்கு இணையான சமகால இசையமைப்பாளர்களை கண்டு பிடிப்பது சாத்தியமற்ற ஒன்று.

*இசை என்னும் போது பாடலாசிரியர்களையும் வசனகர்*த்தாக்களையும் பார்த்துவிடலாம். சுஹாசினி எல்லாம் ஞாபகம் வரக்கூடாது என்று நினைத்துக் கொண்டிருந்தேன். வந்துவிட்டார். நா.முத்துக்குமாரை சொல்வேன். இன்னும் பல புதுப்புது பாடலாசிரியர்கள் நன்றாக எழுதினாலும் தொடர்ச்சியாக 7, 8 வருடங்கள் தரமான பாடல்கள் எழுதி வரும் ஒரே நபர் அவர்தான். பழைய ஆட்களை விட்டுவிடுவோம். வாலியும், வைரமுத்துவும் இருக்கத்தான் செய்கிறார்கள் இப்பட்டியலில். அதே போல இப்போது வசனத்தில் விளையாடும் ஜெயமோகன், பாஸ்கர் சக்தியை சொல்லலாம். நான் கடவுளின் வசனம் குறிப்பிடத்தக்கது. இவர்கள் திறமையில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இன்னும் பல படங்கள் வந்த பின்னே தான் சொல்ல முடியும்.

நமது இயக்குனர்களை இந்த வரிசையில் சேர்க்க தயக்கமாகத்தான் இருக்கிறது. மேக்கிங் என்ற வகையில் மணிரத்னம், ஷங்கர் போன்ற ஒரு சிலரை சேர்க்கலாம் என்றாலும் கதை, திரைக்கதை அடிப்படையில் இருவரையும் விலக்க வேண்டியிருக்கிறது. அமீர் போன்ற இயக்குனர்கள் யோகி போன்ற பாடாவதி படங்களையும், ஜெராக்ஸ் காப்பி உருவல்களையும் கொடுக்காமல் இருந்தால் பருத்தி வீரன், ராம் என்ற இரண்டு படங்களுக்காகவே சேர்க்கலாம். வெறும் டைரக்ஷன் மட்டுமே கணக்கில் கொள்ள வேண்டும். கதை, திரைக்கதை வேறு துறை என்ற ஹாலிவுட் இலக்கணத்தை காட்டுவீர்களேயானால் ஷங்கர் வரக்கூடும். ஏன்? கே.எஸ்.ரவிக்குமாரைக் கூட அதில் சேர்க்கலாம். தசாவதாரத்தை அவ்வளவு சீக்கிரம் முடிக்க வேறு யாரால் முடியும்? கூட்டி கழித்து பார்த்தால் கடைசியில் பாலா என்ற ஒருவரைத்தான் சொல்ல வேண்டியிருக்கிறது.

## ஆசைக்கு ஒரு பொண்ணு ஆஸ்திக்கு ஒரு பையன், அதுக்கு ஒரு மனைவி. காலையில் நாலு இட்லி புதினா சட்னி

கடைசியாக நடிப்பு. உலகத்தரத்தில் அல்ல, இந்திய அளவில் கூட நம் நாயகர்களில் கமலைத் தவிர யாரும் தெரியவில்லை. நிச்சயம் ரஜினி தகுதிக்குரியவர் தான். ஆனால் அதற்கான முயற்சியை அவர் எடுக்கவில்லை. விக்ரமை சொல்லலாம். அவ்வளவுதான். ஆனால் இந்த ஹீரோக்களைத் தாண்டி நடிப்பின் மூலம் வெற்றி பெறுபவர்கள் குணசித்திர நடிகர்கள்தான். சொல்லப் போனால் இந்தப் பதிவை நான் தொடங்கியது ஜெயப் பிரகாஷ் என்ற நடிகரைப் பற்றி எழுதத்தான். அப்போது தான் இது போன்று வேடங்களில் தற்போது கலக்கி வரும் பிரபு, பிரகாஷ்ராஜ், டெல்லி கணேஷ் போன்ற குணசித்திர நடிகர்கள் நினைவுக்கு வந்தார்கள். தமிழ் சினிமாவில் நல்ல நடிகர்கள் என்று பட்டியலிட்டு பார்த்த போது சிவாஜி, கமல் என்ற இரண்டு ஹீரோக்களைத் தவிர மற்ற அனைவரும் கேரக்டர் ஆர்டிஸ்ட்தான். ரங்காராவ், எம். ஆர். ராதா, மனோரமாவில் தொடங்கி ஜெயபிரகாஷ் வரை சொல்லலாம். இனி ஜெயபிரகாஷைப் பற்றி ஒரிரு பத்தியுடன் நிறைவு செய்து கொள்ளலாம்.

சமீபத்தில் வெளிவந்த வம்சம், நான் மகான் அல்ல படங்களை காணும் வாய்ப்பு கிட்டியது. வம்சம் படத்தில் ஜெயபிரகாஷிற்கு வில்லன் வேடம். கண்களில் குரோதம் கொப்பளிக்க மனிதர் நடக்கும் போதே பதட்டம் தொற்றிக் கொள்கிறது பார்வையாளனுக்கு. சிரிப்பில் கூட விஷம் கலந்து சிரிக்கிறார். பட்டை சாராயமும், பன்னிக்கறியும் இயல்பான உடல் மொழியும், இம்மியளவும் அதிகமாகாத முகபாவனைகளும் அனாவசியமாக வருகிறது ஜெயபிரகாஷிற்கு. வம்சம் படம் உங்களை ஈர்த்திருந்தால் சந்தேகமேயில்லாமல் அதன் பெரும் பங்கு இவருடையதாகத்தான் இருக்கும்.

வம்சம் பாத்திரத்திற்கு நேர் எதிர் பாத்திரத்தை நான் மகான் அல்ல படத்தில் ஏற்றிருக்கிறார். கால் டேக்ஸி ஓட்டுனராக வருகிறார். ஆசைக்கு ஒரு பொண்ணு ஆஸ்திக்கு ஒரு பையன், அதுக்கு ஒரு மனைவி. காலையில் நாலு இட்லி புதினா சட்னி, வாடகைக்கு வீடென கச்சிதமான லோயர் மிடில் கிளாஸ் குடும்பம் ஒன்றின் தலைவன். தன்னால் அனுபவிக்க முடியாமல் போனதை மகனின் மூலம் தீர்த்துக் கொள்ளும் தந்தை அவர். ஒரு காட்சியில் நாயகியிடம் தனது மகனைப் பற்றி சொல்லும்போது 'அவன் அப்படியே என் ஜெராக்ஸ்' என்பார். ஒரு சில நொடிகளே வரும் அக்காட்சியில் ஒரு ஆத்ம திருப்தியையும், சந்தோஷத்தையும் மிரட்டலாக காட்டி நடித்திருப்பார். அதே போல அவர் இறக்கும் காட்சியையும் சொல்லலாம். மொத்தத்தில் தமிழ் சினிமாவிற்கு ஒரு அற்புதமான நடிகர் கிடைத்திருக்கிறார். பிரகாஷ் ராஜையும், சாயாஜி ஷிண்டேயையும் வீணடித்தது போல இவரையும் சீக்கிரம் டெம்ப்ளேட் நடிகராக்கமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*- சாளரம்*

## Grown Ups

### திரை விமர்சனம்



சிறு வயதிலிருந்து ஒன்றாய் பாஸ்கெட் பால் விளையாடிய ஐந்து நண்பர்கள், ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாய் இருந்தாலும் இவர்களை ஒன்றுபடுத்தி வழிநடத்தி வெற்றி பெற வைத்த கோச்சின் மேல் பெரிய மரியாதை உண்டு. 30 வருடங்களுக்கு பிறகு கோச் இறந்துவிட, நண்பர்கள் அனைவரும் ஆளுக்கொரு திசையாய் பிரிந்திருந்தாலும் கோசசின் இறுதி சடங்குக்காக ஒன்று சேர, ப்ளான் செய்கிறார்கள். அவர்கள் ஒரு லேக் ஹவுஸை வாடகைக்கு எடுத்து தங்க முடிவெடுக்கிறார்கள்.

ஆடம் சாண்ட்லருக்கு, பாஷன் டிசைனிங் மனைவி சல்மா ஹயக். அவர்களுக்கு இரண்டு மகன்கள், ஒரு அழகான மகள். இன்னொரு கருப்பின நண்பனுக்கு கலப்பின மனைவி, மனைவி சம்பாதித்துக் கொண்டிருக்க, வீட்டோடு கணவனாய் குழந்தைகளை பார்த்துக் கொண்டு இருப்பவன். மனைவி மூன்றாவது கர்ப்பம். அவனுடய தாயும் அவனுடனேயே இருந்து அவனை கரித்து கொண்டிருக்கிறாள். மூன்றாவமன் தான் ஒரு பெரிய பிஸினெஸ் செய்வதாய் சொல்லி தன் மனைவி குழந்தைகளுடன் வந்து சேர்கிறான். நான்காமவன் ஏற்கனவே மூன்று முறை விவாகரத்தாகி தன்னை விட 30 வயது மூத்த பெண்ணை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருகிறான். ஐந்தாமவன் திருமணமே செய்து கொள்ளாமல் அலைபவன்.

இவர்கள் எல்லோரும் மரணவீட்டுக்கு வந்து முடித்துவிட்டு லேக் ஹவுஸில் செட்டிலாகிறார்கள். இதன் பிறகு என்ன தான் இவர்கள் வளர்ந்திருந்தாலும், வயதுக்கேற்ற மன வளர்ச்சியும், முதிர்ச்சியும் எவ்வாறு இவர்களின் வாழ்க்கையை நடத்துகிறது என்பதை இவர்களுக்குள் நடக்கும் நிகழ்வுகளின் மூலம் புரிந்து கொள்கிறார்களா?, இவர்களிடம் சிறு வயதில் தோற்ற குழு மீண்டும் போட்டிக்கு அழைக்க, அதில் அவர்கள் வெற்றிப் பெறுகிறார்களா? இல்லையா ? என்பதுதான் கதை.

வழக்கமான டெம்ப்ளேட் ஃபீல் குட் படம் மாதிரி தான் என்றாலும், சுவாரஸ்யமாய் சொல்லியிருக்கிறார்கள். ஆடம் சாண்ட்லர், ஹய்கின் மகன்கள் வீடியோ கேமில்லாமல், போன் இல்லாமல், படும் அவஸ்தைகள் இக்கால குழந்தைகளின் மனபான்மையை அவர்களின் சோம்பேறித்தனத்தை, அப்பட்டமாய் காட்டுகிறது. அதிலும் உள் ரூமில் உள்ள ஆளை கூப்பிடுவதற்கு குறுந்தகவல் செய்வது, விடியோ கேமை பார்த்து ஆடிய படியே பேசுவது என்பது போன்ற காட்சிகள் நிதர்சனம். அதே சிறுவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் லேக் வீட்டின் சுற்றுச் சூழலுக்கு போய் சகஜமாகி மற்ற சிறுவர்களுடன் சேர்ந்து வெளியே போய் விளையாட ஆரம்பித்து, இவர்களுக்குள்ளான தொலைத் தொடர்புக்கு 'கப் போன்' செய்து நூலில் தொடர்ப்பு ஏற்படுத்தி விளையாடுவதும், பின்பு அதையே பெரியவர்களும் தொடர்வது கவிதை.

ராப் ஷிண்ட்லரின் பெண், ஷிண்ட்லரின் இன்னொரு ஜெராக்சான பெண், வீட்டிற்கு வந்ததும், தன் பேச்சுலர் நண்பனை சந்தேகப்படுவது, 30 வயது மிகுந்த மனைவியிடம் காதல் வயப்பட்டு கொஞ்சுவதும், அம்பு காலில் குத்தி பட்ட காலிலே படும் என்பது போல மீண்டும் மீண்டும் தெரிந்தே அதில் எட்டி உதைத்து அடிப்பட்டுக் கொள்வது, அவரது பெண்கள் கார் ரிப்பேர் செய்யும் போது மற்றவர்கள் ரெண்டு பேர் பார்த்தால் மற்ற ரெண்டுபேர் சைடு வாக்கில் திரும்பிக் கொண்டு, லெப்ட் ரைட் சொல்லி சைட் அடிக்கும் காட்சி, நாலு வயதாகியும், தாயிடம் வந்து தாய்பால் அருந்தும் சிறுவன், என்று படநெடுக நகைச்சுவை தூவிக் கொண்டே செல்கிறார்கள். பல சமயங்களில் அமெரிக்க சிட்காம் போல தொடர்ந்து பேசிக் கொண்டே காமெடி செய்வது, செண்டிமெண்ட், குடும்ப உறவுகள் வலுப்படுத்துதல் போன்ற அல்லேலுயா பிரசங்கங்கள் வந்தாலும், இயல்பான நகைச்சுவையால் படம் தப்புகிறது.

*- கேபிள் சங்கர்*




## மாஸ்கோவின் காவிரி!

### திரை விமர்சனம்



படத்தின் கத்தை இரண்டு வரிகளில் சொல்லிவிட லாம். ஆனால் சொல்லிய விதத்தைச் சொல்ல வேண்டு மெனில் அதுமாபெரும் கொடுமை..! ஐ.டி. துறையில் பணி யாற்றும் மாஸ்கோ மற்றும் காவிரி இருவரும் காதலர்கள், லிவிங்டுகெதராக சேர்ந்து வாழ்ந்துபின் தங்களால் ஒத்துப் போக முடியாது என்பதை உணர்ந்து பிரிய நினைக்கிற ார்கள். முடிந்ததா இல்லையா என்பதுதான் கதை..!

இதற்காக இயக்குநர் பெரும் சிரமமேற்கொண்டு திரைக் கதை அமைத்திருக்கிறார் போலும். பொதுவாக ஒளிப்பதி வாளர்களாக இருந்து இயக்குநர்களாக மாறி வெற்றி பெற்றவர்கள் மிகச் சிலர் தான். தோல்வியடைந்த பட்டியல் தான் அதிகம்..! அதில் ரவிவர்மனும் ஒருவர்.

இந்தப் படத்தின் ஒளிப்பதிவில் அவர் காட்டியிருக்கும் வெறியையும், ஆர்வத்தையும் படத்தின் கதையிலும், திரை க்கதையிலும் கொஞ்சமாவது காட்டியிருந்தால் படத்தின் பூஜையன்று செலவழித்த தொகையாவது தயாரிப்பாள ருக்குத் திரும்பக் கிடைத்திருக்கும்..!

முதல் காட்சியில் ஹீரோயினை சந்திக்கிறார். பார்த்த வுடனேயே காதல் கொள்கிறார். ஒரு பாடல். நாயகியைப் பின் தொடர்கிறார். நாயகியின் புகைப்படங்கள் முழுவ தையும் தனது வீட்டில் ஒட்டி வைத்து அழகு பார்க்கிறார். அடுத்தக் காட்சியில் நாயகி யார் நீ என்று கேட்டுவிட வீடு திரும்பி புகைப்படங்களை கிழித்தெறிகிறார்.

அதற்கடுத்த காட்சிகளில் சம்பந்தமேயில்லாமல் இருவ ரின் பிறந்த வீட்டுக் கதைகள் திணிக்கப்பட்டுள்ளன. தன் அப்பா கையை வெட்டும் வன்முறையாளராக இருப்ப தைப் பார்த்து பயந்து போய் ஹீரோயின், ஹீரோவைத் தேடி அவன் ஊருக்குச் செல்கிறாள். ஹீரோ தனது ஊரில் தனது சொந்தங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். அந்த ஊருக்கு வரும் ஹீரோயின், தான் தனது கணவ னைத் தேடி வந்ததாகச் சொல்லி, ஹீரோவைக் கை காட்டு கிறார். ஹீரோ சந்தோஷப்படுகிறாராம்..

சென்னைக்கு வந்து இருவரும் சேர்ந்து வாழத் துவங்கு கிறார்கள். வீட்டுக்காரன் வீட்டைக் காலி செய்யச் சொல்கி றான். ரோஷப்பட்ட ஹீரோயின் வீட்டுப் பொருட்களுடன் நடுத்தெருவில் வந்து அமர்ந்து கொண்டு நட்ட நடுரோட்டில் லேப்டாப்பில் Googleஇல் துழாவி வீடு தேட ஆரம்பி க்கிறாள்.

இந்தக் காட்சியில் கை தட்டத் துவங்கிய சில நண்பர்கள் படம் முடியும்வரையில் கை வலிக்கத் தட்டித் தீர்த்து விட்டார்கள். இந்த ஒரு காட்சியமைப்புக்காகவே இந்தப் படத்திற்கு அவசியம் விருது கொடுத்தாக வேண்டும்.

கடற்கரையோர வீட்டை விலைக்கு வாங்கி அங்கே குடி போகிறார்கள். அடுத்த நாளே ஹைதரபாத்திற்கு டிரெயினிங் என்று சொல்லி டூர் கிளம்புகிறார்கள்.

ஹீரோயினின் அப்பாவுக்கு எப்படித்தான் இந்த விஷயம் தெரிந்ததோ தெரியலை சாமி.. பொண்ணைத் தேடி அந்த வீட்டுக்கு வருகிறார். "பொண்ணும், மாப்ளையும் நல்லா இருக்காங்களாம்.. வீட்டு வாட்ச்மேன் சொன்னான்" என்று ஊர் திரும்பி தனது மனைவியிடம் சொல்லும் போது என் கண்ணில் கண்ணீரே வந்துவிட்டது. ச்சே.. நாமளும்தான் இருக்கோம்...

ஹைதராபாத்தில் காதலர்களுக்குள் ஏற்படும் சின்ன பிரச்சினையால் திரும்பி வரும்போது ரெம்பவே முட்டிக் கொள்கிறது. இடையில் சம்பந்தமே இல்லாமல் ஒரு கிரிமினல் டிராக் வேறு. ஒருவன் இவர்கள் வீட்டில் இவர்களைப் பணயக்கைதியாகப் பிடித்து வைத்துக் கொள்ள.. தனது மனைவியைக் கொல்ல முயற்சித்த அவனை போலீஸ் கமிஷனர் பெரும் படையுடன் வீடு புகுந்து கொன்று இவர்களைக் காப்பாற்றுகிறாராம்.

அப்பாடா முடிச்சிட்டானுகடா சாமின்னு எழுந்தா அப்பன்காரன் மாப்ளைகிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டுவந்திருன்னு பெண்ணிடம் சொல்ல.. அப்பாவுக்காக காதலனிடம் பை சொல்ல வரும் காதலி.. காதலன் தங்களது போட்டோவைபார்த்துபுலம்புவதைப் பார்த்தவுடன் சட்டென்று மனம் மாறி அவனைக் கட்டிக் கொண்டு நமக்கு மங்களம் பாடுகிறாள்.

எவனாவது ஏமாந்த சோணகிரி சிக்கிட்டான்னா, அவன் தலைல சுத்தமா மிளகா அரைச்சிருவாங்கன்னு சொல்வாங்களே நிச்சயமா இந்தப் படத்தை அதுக்கு உதாரணமா காட்டலாம்.

ரவிவர்மன் சிறந்த, சிறந்த, சிறந்த ஒளிப்பதிவாளர். அதில் சந்தேகமேயில்லை. இந்தப் படத்தின் துவக்கத்தில் இருந்து இறுதிவரையில் பிரேம் டு பிரேம் அழகு. கொள்ளை அழகு. அதோடு அழகுக்கு ஆபரணம் சேர்ப்பது போல் கதாநாயகியும் அழகு. இது போதுமா படம் ஓடுறதுக்கு..?

கதைன்னு ஒண்ணு வேணாமா ? நான் எடுக்கறதுதான் படம் நான் சொல்றதுதான் கதைன்னு முடிவுபண்ணி எடுத்திருப்பார் போலிருக்கு.

படத்தின் பிற்பாதியில் இருக்கும் சந்தானத்தின் காமெடி டிராக் சமீபத்தில் எடுக்கப்பட்டு திணிக்கப்பட்டிருக்கிறது. படத்தின் விற்பனைக்காக எடுத்ததாகச் சொல்கிறார்கள். அப்படியும் இது பேரணியாகவில்லை. சரி. அதையாவது உருப்படியாக எடுத்துத் தொலைத்தார்களா..? அதுவும் உச்சப்பட்ச லாஜிக் மீறல்..! சந்தானத்திற்கு இதெல்லாம் தேவைதானா..?

ஏற்கெனவே மாதாமாதம் திரையரங்குகளுக்கு வரும் ரசிகர்களின் கூட்டம் குறைந்து கொண்டே வருகிறது என்றுதான் திரையரங்க புள்ளிவிபரங்கள் சொல்கின்றன. இந்த லட்சணத்தில் இது மாதிரி இன்னும் ரெண்டு சினிமா வந்தால்போதும் தயாரிப்பாளர் மட்டுமல்ல சினிமா ரசிகனும் வெறியாகிவிடுவார்கள்..!

*பாடல் காட்சிகளை தொல்லைக்காட்சிகளில் பார்த்தால், கண்டு மகிழுங்கள். அத்தோடு நிறுத்திக் கொள்ளுங்கள். இந்தப்படத்தை திரையரங்குக்கு போய்ப் படத்தைப் பார்க்கிறதயோ சி.டி வாங்கி பாக்கிறவேலைய மட்டும் வைச்சிருக்காதேங்கோ !*

*- உண்மைத் தமிழன்*

## சினித்துளி

## தீபாவளிக்கு வெடிக்குமா வெடி?



தீபாவளி என்றாலே ஞாபகத்திற்கு வருவது வெடி வெடிப்பதுதான். இப்படி இருக்கையில் படத்திற்கு வெடி என்று தலைப்பு வைத்துவிட்டு தீபாவளி அன்று திரையிடாவிட்டால் எப்படி?. விக்ரமின் நடிப்பில் பூபதி பாண்டியனின் இயக்கத்தில் வளர்ந்துவரும் 'வெடி'. இந்த தீபாவளியை பொறுத்தவரை மிகப்பெரிய இரண்டு நட்சத்திர திரைப்படங்கள் வெளிவரத்தயாராக இருக்கின்றன. முதலாவது உலகநாயகனின் 'மன்மத அம்பு' மற்றயது இளைய தளபதியின் 'காவல்காரன்'.

இவற்றுடன் எதற்கு மோதுவான் என்று இயக்குனரும் தயாரிப்பாளரும் கேட்க விக்ரமோ வெடி என்று பெயர் வைத்துவிட்டு தீபாவளி அன்று வெளியிடாவிட்டால் நன்றாகவா இருக்கும்? என்று பதில் கொடுத்திருக்கின்றார். மன்மத அம்புடனும், காவல்காரனுடனும் மல்லுக்கட்டி வெடி ஸ்ரோங்காக வெடிக்கிறதா என்பதையும் நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## பாரதிராஜாவுடன் ஹாரிஸ் ஜெயராஜ்!



நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் இயக்க வருகிறார் பாரதிராஜா. கிழக்குச் சீமையிலே படத்தில் இடம் பெற்ற சூப்பர் ஹிட் பாடலான தென் கிழக்குச் சீமையிலே என்ற வார்த்தையையே தனது அடுத்த படத்திற்குத் தலைப்பாக்கியுள்ளார். இப்படத்தில் பாரதிராஜாவும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார். அவரது மகன்களாக சீமானும், அமீரும் நடிக்கவுள்ளனராம். மிகமிக வித்தியாசமான கோணத்தில் இப்படத்தில் கிராமத்தைக் காட்டப் போகிறார் பாரதிராஜா என்கிறார்கள்.

முக்கியமான விஷயம் இப்படத்தின் இசையமைப்பாளர் இளையராஜா இல்லை ஹாரிஸ் ஜெயராஜாம். 'ஓமகசீயா...' டைப்பில் பாரதிராஜாவின் நாயகி வித்தியாசமாக பாடப் போவதை கேட்க இப்பவே காத்திருப்போம்!

## செப்டம்பர் 24இல் எந்திரன்!



ரஜினி படத்தின் பிசினஸ் தமிழ்சினிமாவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த இந்திய சினிமாவையே கதிகலங்க வைத்திருக்கிறது. எந்திரன் பிசினஸ் கிட்டதட்ட 250 கோடியை தாண்டும் என்கிறார்கள் பெயர் சொல்ல விரும்பாத திரையுலக விவிஜபிகள். எப்போது ரிலீஸ் என்பது இதுவரைக்கும் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை என்றாலும், தியேட்டர் மற்றும் விநியோகஸ்தர் வட்டாரங்களுக்கு சொல்லப்பட்டிருக்கும் ரிலீஸ் திகதி செப்டம்பர் 24 ந் தேதியாம்

## விஜய்யுடன் சேரும் அஜித்!



அஜித்தின் அடுத்த படம் என்ன? என்ற கேள்விக்கு விடை கொடுத்து மங்காத்தா சூட்டிங் விறுவிறுவென நடந்து வருகிறது. இப்படத்தை முடித்த கையோடு அஜித், கிரீடம் விஜய்யுடன் கூட்டணி சேரப்போகிறாராம். விஜய் இயக்கத்தில் முதன் முதலில் உருவான படம் கிரீடம். அவரின் மதராசபட்டினம் படத்தை பார்த்த அஜித், அதே மாதிரி ஒரு கதையை தயார் செய்யச் சொல்லியிருக்கிறாராம். மதராசபட்டினம் வெற்றியில் திக்குமுக்காடியிருக்கும் கிரீடம் விஜய், புதிய கதையை உருவாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். சுதந்திரத்திற்கு முந்தைய தமிழகத்தின் வாணிப நிலைதான் படத்தின் கதையாம்.

எண்ணித் துணிவோம்!
ஒன்றிணைந்து எழுவோம்!
இலக்கை வெல்வோம்!

ILC Tamil - INTERNATIONAL LIVE CHANNEL
Contact us on:
0207 019 75 12 / 0796 323 11 95
E-mail: radio@ilctamil.com

அனைத்துலக உயிரோடை – தமிழ்
Daily Broadcast on Spectrum Radio
MW558
From 6.02pm until 8.58pm
To listen online: http://www.ilctamil.com
iLC Tamil
அனைத்துலக உயிரோடை தமிழ்



வீடுகள் வாங்க விற்க வாடகைக்குவிட மற்றும்
அனைத்துவித பராமரிப்பு சேவைகளுக்கும் நாடுங்கள்!

**WE ARE LOOKING FOR PROPERTIES IN**

- Brockley
- Catford
- New Cross
- Nunhead
- Peckham
- Penge
- Plumstead
- Croydon
- Sydenham
- Charlton
- Deptford
- Dulwich
- Eltham
- Forest Hill
- Anerley
- Bellingham
- Blackheath
- Camberwell
- Lee
- Ladywell
- Lewisham
- Hither Green
- Downham
- Bromley
- Greenwich

and the surrounding areas

**LANDLORDS**

We seek to introduce our property Sales, Lettings and Management to you and we are currently managing properties in your area.

**TENANTS**

If you are looking for properties within the areas mentioned above, we can help you whether you are Working or receiving Housing Benefit.

## FREE MARKET VALUATION

அழையுங்கள்

Sammy, Lee, Kumar or Lux

**0208 7788400**

(Sydenham)

Web: www.yourperfectmove.co.uk

YOUR PERFECT MOVE



# TrainingConnect

Tel: 0208 538 0248 WWW.TRAININGCONNECT.CO.UK

Centres across London - Hounslow, Wembley, Kenton, Whitechapel, Hackney, Holloway. Aldershot, Birmingham, Bedford, Leicester, Luton, Newcastle, Slough, Sheffield, Wolverhampton

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow - TW4 6JQ

Our 100% Commitment "You Pay Only Once & We Train You until You Pass – No Retake Fee"
Have successfully trained over 20,000 students | Courses from £200 | Certificates within 20 days

**We are an 'Accredited College' as per UKBA new rule.**

**ESOL with Citizenship**

For All Those Applying for:

- ✓ Extension of Stay Visa
- ✓ Indefinite Leave to Remain (ILR)
- ✓ British Passport / Naturalisation

OR


- ✓ Those failed Life in the UK Test
- ✓ Below Entry Level 3 of English

**International ESOL Diploma**

For All Those Applying for:

- ✓ Tier 1 (Highly Skilled Migrants)
- ✓ Tier 2 (Skilled Migrants)

**Applicants Also Include**
* Religious Ministers *Engineers Chefs *Investors*Sports Persons *Entrepreneurs




Online ESOL Courses Available

Special Offer!!!

Your nearest centre in London:

Hounslow: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
Kenton: 208 Kenton Road, Harrow HA3 8BX
Wembley: 116 Ealing Road, Wembley HA0 4TH
Holloway Road: 266 – 268 Holloway Rd. N7 6NE
Whitechapel: 4th Floor, 46-92 Whitechapel Rd, London, E1 1JX

**Citizenship Courses from only £200**



# 18-19 GUIDING YOU FOR A BRIGHT FUTURE

September 2010
10.30am - 7.00pm

## Indian Schools

### Education Exhibition 2010

Exclusive exhibition happening for the first time on Indian Schools with International Standard. Spot admissions for school education (primary to higher secondary level) with world class boarding facilities across India

**Advantages for NRI parents**

- Quality and fundamentals of School education is very strong
- Individual attention by the school faculties
- Learning with Indian values and ethics
- Opportunity to grow their children with rich Indian culture
- Very strong mathematical learning
- Highly cost effective
- Ideal for young working couples

Brought to you by INDUS
E-mail : induscbe@sify.com

## India Property

### Exhibition 2010

Apartments, Independent House, Bungalows, Villas, Farm House, Commercial Properties, Home Loans, Beach Resorts, Plots etc.

**More than 50 Projects across**

New Delhi, NCR, Chandigarh, Gurgoan, Mumbai, Kolkata, Ranchi, Goa, Bangalore, Hosur, Ooty, Chennai, Coimbatore, Trichy, Kancheepuram, Pondicherry, Kodaikanal and lot of other locations

NEARLY 25 Exhibitors

**ENTRY FREE**

**India's leading schools / Builers / Developers / Real Estate Co., participating**

Sheraton Skyline Hotel, London Heathrow, Bath Road (A4), Hayes, UB3 5BP, UK


2000 FREE** minutes & texts Lycamobile PLUS to Lycamobile PLUS with £30 top-up
The UK's favourite SIM for low cost international & national calls
Sri Lanka 9p/min
India 5p/min
Malaysia 5p/min
All rates are for mobile & landline calls
FREE £10 CREDIT#
with £30 top-up
Call any Lycamobile 0p/min Lycamobile World in any Lycamobile country
You can now call all your Lycamobile friends & family in any Lycamobile country for 0p* /min
The Netherlands
Belgium
Switzerland
Italy
Sweden
Denmark
Norway
For your FREE Lycamobile PLUS SIM visit www.lycamobile.co.uk
or call 020 7132 0322
Buy and top up online or in over 115,000 stores
Lyca mobile
Call the world for less